www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஜூலை.07-13,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 160

## திரை மறைவில் சதுரங்கம்

## அரசியல் தீர்வில் பாயக் கட்டம்



ரம்பாவுக்கு மீனாவின் சவால்

## தரைக்கு வராத பறவைகள்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஒன்றாக-ஒரே குரலில்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

"சிறைச்சாலை-
மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை"
என்று அரசியல்வாதிகள் கூறலாம்.
எவ்வித குற்றமும் செய்யாமல்
சிறையில் வாடுவோருக்கு
சிறை மரண வேதனைதான்!

பொதுஜன முன்னணி அரசாங்கம்
பதவிக்கு வருவதற்கு முன்னர்
வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்று-
'சிறையில் வாடுவோரை
விரைவில் விடுதலை செய்வது.'

அரசாங்கம் மட்டுமல்ல,
அரசியல் கட்சிகளும்
தேர்தல் முடிந்தபின்னர்
சிறையில் வாடுவோரை
மறந்துபோய்த்தான் இருந்தார்கள்.

"நாங்கள் இன்னமும்
உள்ளேதான் இருக்கிறோம்" என்று
நினைவூட்டவும்
சிறையிலிருப்போர்தான்
உண்ணாவிரதம் நடத்தவேண்டியிருக்கிறது.

வடக்கு-கிழக்கு
இளைஞர்கள் மட்டுமல்லாமல்,
மலையக இளைஞர்களும்
சிறைக்கொட்டடிகளுக்குள்
தங்கள் வாழ்வின் ஒரு பகுதியை
தொலைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு-மலையக
அரசியல் கட்சிகள்
ஒன்றுபட்டு-ஒரே குரலில்
பொதுஜனமுன்னணி அரசிடம்
அதன் வாக்குறுதியை நினைவூட்டலாம்.

நீதி விசாரணைகூட இல்லாமல்
நீண்டகாலம் சிறையில் இருப்பதும்
நரகத்தில் இருப்பதும் ஒன்றுதான்.

தண்டனை பெற்ற கைதிக்கு
தனது விடுதலை
எப்போது என்பது தெரியும்.
ஆனால், விசாரணையின்றி
சிறையில் வாடுவோருக்கு
தமது எதிர்காலம் தினமும்
கேள்விக்குறியாகவே இருக்கும்!

தலையிடியும் காய்ச்சலும்
தனக்குத் தனக்கு வந்தால்தான்
தெரியும் என்பார்கள்.
சிறையில் வாடுவோரின்
தினசரி துயரங்கள்
வெளியே இருப்போருக்கு
புரிவது கஷ்டம்தான்!

வடக்கு-கிழக்கு-மலையகம்
என்ற பேதமே இல்லாமல்
பயங்கரவாத தடைச் சட்டம்
தமிழ் இளைஞர்கள்மீது பாய்ந்திருக்கிறது.

சிறைக்குள் வாடுவோரும்
தமக்குள் பேதமில்லாமல்
ஒன்றாகப் போராடியிருக்கிறார்கள்.

வெளியே உள்ள
அரசியல் கட்சிகளும்
வடக்கு-கிழக்கு-மலையகம்
என்று தம்மைப் பிரித்துக்கொள்ளாமல்
பொதுப்பிரச்சனைகளில்
ஒரே தளத்தில் ஒன்று சேரவேண்டும்!

சிறையில் வாடும் இளைஞர்களின்
பிரச்சனையை
ஒரு பொதுப்பிரச்சனையாக
முன்னெடுத்தேயாக வேண்டும்.
'நீதி விசாரணை அல்லது விடுதலை!'
என்ற கோரிக்கை
உரத்து ஒலிக்கவேண்டும்.

அப்படியானால்தான்
தமிழ் இளைஞர்கள்-யுவதிகள் என்றதும்-
"கூண்டில் இருந்துவிட்டுப் போகட்டுமே;
ஆறுதலாகத் திறந்துவிடலாம்"
என்பதுபோன்ற
எஜமான மனப்போக்குக்கு
முடிவு கட்ட முடியும்!

ஒன்றாக முயன்றால்
விளைச்சலில்
பங்கிட்டுக்கொள்ளவேண்டுமே
என்ற மனப்போக்கை
அரசியல் தலைவர்கள்
உதறிப் போடுவார்களேயானால்
நிறையச் சாதிக்கலாம்;
சிறையையும் திறக்கவைக்கலாம்!

பொதுஜன முன்னணி அரசு
தனக்கு முன்பிருந்த அரசு
என்னென்ன தவறு செய்தது?
என்று மக்களுக்கு
வெளிச்சம் போட்டுக்காட்ட
நினைத்தால் மட்டும் போதாது!

கடந்த காலத் தவறுகளை
பொதுஜன முன்னணி அரசு
திருத்திக்கொள்ள வேண்டும்.
இல்லாவிட்டால்
பழையதை புரட்டிப்பார்ப்பதில்
அர்த்தமில்லையென்றாகிவிடும்!
அரசியல் நோக்கமென்றாகியும் விடும்!
திருத்தவேண்டிய தவறுகளில் ஒன்று-
விசாரணையற்ற சிறை வைப்பு!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## கர்த்தருக்கு செவிகொடு:

உபாகமம் 28 ஆம் அதிகாரத்தை ஆசீர்வாதத்தின் ஊற்றுக் கண்கள் என்று சொல்லலாம். "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்கு செவி கொடுக்கும் போது இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதமெல்லாம் உன் மேல் வந்து தங்கும்" (உப 28:2) என்று சொல்லி கர்த்தர் ஏறத்தாழ 28 ஆசீர்வாதங்களை வரிசைப்படுத்துகின்றார். நீ கர்த்தருக்குப் பயந்து அவர் கட்டளைக்கு செவி கொடுக்கும்போது இந்த ஆசீர்வாதங்களை நீ உரிமை பாராட்டி பெற்றுக் கொள்ளலாம்.

நீ கர்த்தருக்கு செவி கொடுக்கிறாயா? தேவ பிள்ளையே, கர்த்தருக்கு செவிகொடு! பார்வோனைப் போல உன் இருதயத்தைக் கடினமாக்காதே! சாமுவேலைப்போல செவி கொடு. ஆபிரகாம் கர்த்தருக்கு செவி கொடுத்து தன் மகனென்றும் பாராமல் பலியிடத்துணிந்து நின்றான். எனவேதான் தலைமுறை தலைமுறையாக ஆபிரகாமுக்கு ஆசீர்வாதம் வந்தது!

கர்த்தருடைய பிள்ளையே! நீ ஆசீர்வதிக்கப்படுவாய்! மேற்சொன்ன எல்லாக்காரியங்களையும் கடைப்பிடித்துப் பார். நீ கீழாகாமல் மேலாவாய்! நீ வாலாகாமல் தலையாவாய்! (உப 28:14)

"கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!"

தொகுப்பு: தி. பெ. தேவபாலன், மட்டக்களப்பு.

## ஆன்மீகம்



## நகைச்சுவை பேசிப் பிறரைக்குறை காணலாமா?

பிறர்மீது குறை கூறுவதும்-அதிகமாகப் பரிகாசம் செய்து பழித்துரைப்பதும் பாவமான கருமங்களாகும். மனிதன் இன்னொரு மனிதனின் மனதைப் புண்படுத்துவது கொடுமையாகும். மற்றவர்களுடன் நாம் உரையாடும்போது மென்மையாகவும்-நளினமாகவும் மனம் நோகா வண்ணம் பேசுதல் நலம் பயக்கும்.

பிறரை சந்தோஷப்படுத்துவதற்காக சிறிதளவு ஹாஸ்யமாகப் பேச சன்மார்க்கம் அனுமதி அளிக்கிறது. ஆயினும் அளவுக்கு அதிகமாக விகடம் பேசுவதும் அத்தகைய விகடங்களைச் செவியுற்று சிரித்து, மகிழ்வதும் இதயத்தில் ஈமானைக் குறைத்துவிடும். நமக்கு நாளை நடப்பது என்ன? என்று தெரியாத நிலையில் சிரித்து மகிழ்ந்தால் நம் நிலை என்ன ஆகுமோ, நமக்கே தெரியாது.

"நான் அறிந்திருப்பவைகளை நீங்களும் அறிந்தால் கொஞ்சமாகவே சிரிப்பீர்கள். அதிகமாக அழுவீர்கள்" என்ற அண்ணல் நபிகளாரின் பொன்மொழியை ஆழமாய் சிந்தித்து நாளை மறுமையில் நரகத்துக்கு இரையாகாமல் நம்மைப்பாதுகாக்கும் நற்கருமங்கள் புரிந்து நல்லவராய் வாழ்வோமாக!

திஹாரிய ஹாரித்

## கவிதைப் போட்டி இல. 157

### பரிசுக்குரிய கவிதை

### உதயம்?

வரன் உயர்ந்த பனைபோல
வாழ்ந்து வந்த தமிழினமே!
இருள் படர்ந்த உன் வாழ்வில்
உதயத்தைக் காண்பதெப்போ?

சதா கணபதி-அதிகாரவத்தை.

### இடம்உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### விடிவு வருமா?

பார்த்த ஞாபகம் நெஞ்சிற்குள்
பழைய நினைவுகள் கண்ணிற்குள்
சோகச் சுவடுகள் எம்மவர்க்குள்
சோராத நம்பிக்கை மனதிற்குள்
தோன்றிடுமா விடிவு எதிர்காலத்திற்குள்?

செல்வி தயாளினி பரமசாமி-தெகிவளை.

### மனித மரம்

குருதிப் பெருக்கும்
மக்களின் கண்ணீரும்
மனித உரங்களும்
தின்று வளர்ந்த
பனை மரத் தோட்டம்!

மக்பூலியா முஸ்தகீம்-மருதமுனை.

### திசை....?

மரங்கள்
மேல்நோக்கி....
மனங்கள்
கீழ்நோக்கி....

எஸ். பிரபா-
கொக்காகல.

### தோற்றம்⇌மறைவு

சூரியன் சென்றதும்
சந்திரன் வந்து விடும்!
அவர்கள் சென்றதும்
இவர்கள் வந்து விடுவர்!!

ஏ.டி.சமாட்-மட்டக்குளி.

## கவிதைப் போட்டி இல-160



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி-
13.07.1996

—முகவரி—
கவிதைப் போட்டி இல.160
தினமுரசு வாரமலர்
த.பெ. இல—1772
கொழும்பு.



### பனை பனையே!

உன்னைக் கனி(கள்)தரும்.....
உகந்த கிழங்கு தரும்....
கற்கண்டுஞ் சர்க்கரையும்-
கருப்பனீரும் பனாட்டுந்தரும்
கற்பக விருட்சம்...
வீட்டிற்கு மரமாகும்.....
வேலிக்கு ஓலையாகும்.....
படுக்கப் பாயாகும்- பாவலர்தம்
பாட்டுக்கும் 'ஓலை'தந்ததிப்
பனை பனையே!

பாண்டியூர்-பொன். நவநீதன்.

### எங்கே?

தனியாக நிற்கும்
யாழ்ப்பாணத்துப் பனைகளே!
உங்கள்
வடலிக் குஞ்சுகள் எங்கே?

அருள்-பசல்ஸ் ஒழுங்கை,
கொழும்பு-06.

### எது அழகு?

பனைக்கு அழகு
நிமிர்ந்து வளர்வது....
பகலுக்கு அழகு
பகலவன் வருவது....
பதவிக்கழகு.....
சமாதானம் தருவது!

அமுதா-மகாலிங்கசிவம்-
மட்/கல்லடி.

### வேண்டுகோள்!

அன்று
பனைகளை வளர்த்திடுவீர்!
பயன்பல பெற்றிடுவீர்!
இன்று
பனைகளை வெட்டிடுவீர்!
பங்கர்களை அமைத்திடுவீர்!

தி.ஜீவானந்தன்-பொலிஸ் விடுதி,
கொழும்பு-15.

### அஸ்தமனம்.

பனைகள் விளைகின்ற மண்ணில்;
இன்று ஓர் அஸ்தமனம்.
அஸ்தமனம் என்பது முடிவல்ல-
விடியலுக்கான அஸ்திவாரம்.

நா. ஆனந்தன்.

### ஏக்கம்

பள்ளிக்குச் சென்ற பாதைகள்
பனங்காய் பொறுக்கிய காணிகள்
பந்து விளையாடிய புல்வெளிகள்
பறந்தாமா....... இனியும் எங்களை
பிரித்துவிடாதே!

டாக்டர் பி. கருணாகரன்-
திருகோணமலை.

### வாழவிடு

காற்றே நில்!
காலனே ஓய்வெடு!
பீரங்கியர்களே! கொஞ்சம்
விலகிப் போங்கள்!
பாவமறியா எங்களைக்
கொஞ்சம் வாழவிடுங்கள்!

இரா. சாந்தகுமார், பத்தனை.

### சின்னங்கள்!

எஞ்சிப் போய் நிற்கின்ற
யாழ்ப்பாண ராச்சியத்தின்
சின்னங்கள், நாங்கள்!
மேலும் போர் மிஞ்சினால்......
யாழூரைக் கண்டு கொள்ள
யாராலும் முடியாது!

கு. திருமால்-மட்/அமிர்தகழி.

### வேண்டாம் வெளிச்சம்

இருட்டு எமக்கு(ப்)
பரிச்சயம்-அதனால்
வெளிச்சம் என்றால்
அலட்சியம்.

ச.மகாலிங்கம்-வெலிமடை குரூப்,
வெலிமடை.

## வாசக(ர்) சாலை

அன்பின் முரசிற்கு
தவறிவரும் இலக்குகள்
தட்டி கேட்டதற்கு
"தட்டி"க் கொடுக்கிறோம்!
அய்யாத்துரையாரின்
"சர்வதேச" கிண்டல்
நெடுநேரம் சிரிக்க வைத்தது.

சுபா வரன்- கண்டி.

⁂ ⁂

புத்தளம் இளவன்குளத்தில் நிகழ்ந்த அப்பாவித் தனமான படுகொலையினை இராஜதந்திரி நீதியான மனிதாபிமான முறையிலே அலசி இருப்பது பாராட்டத்தக்கது.

"எப்போது நிராயுதபாணிகள் ஆயுதபாணிகளால் பாதிக்கப்படுகிறார்களோ அப்போது மானிட தர்மம் மடிந்து விடுகிறது" என்பது உண்மையிலும் உண்மையே! முரசுக்கு என் நன்றிகள்.

எம். ஸாலிஹ் அஸீம்-
புத்தளம்.

⁂ ⁂

கடைசி வரியைப் படித்து முடித்துங்கூட, கடைசிப் பக்கத்தை மூடிய பிறகுங்கூட நீ எந்நாளும் என் கரங்களிலே தவழ உள்ளம் ஏங்குகிறது. நீ தினமும் தரும் அம்சங்கள்- என்றும் அழியாத கோலங்கள் ஆகும்.

சரவணோஸ் டெமிசி, பத்மா டெமிசி,
குமின் டெயசி-கலவான.

அன்பின் முரசிற்கு!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சுப்பர். அதிலும் பாப்பா முரசு, இராமாயணம் என்பன என்னை மிகவும் கவர்ந்தது. மென் மேலும் உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

டி.கே.என். ரிஷாதா, பதுளை.

⁂ ⁂

அன்பிற்கினிய தினமுரசே,

கவிதைப் போட்டி உண்மையில் மறைந்து கிடக்கும் சிந்தனைகளைத் தட்டிவிடும் ஒரு கருவி என்றே கூறவேண்டும். தொடர்ந்து வளர எனது வாழ்த்துக்கள்.

வி.ஜி.கீதா, புசல்லாவ.

⁂ ⁂

முரசாரே!

நடுப்பக்கத்தில் வாக்ஸியின் புதையலைக் கண்டு அரண்டு போனேன். இப்படியெல்லாம் வாசகரை பயம் காட்டலாமா?

டி. ரஜனிகாந்த், பரகாவளை,
உக்குவளை.

⁂ ⁂

காலத்திற்கு ஏற்ற கருத்துக்களை 'நச்' சென காட்டுகிறது கவிதைப் போட்டிக்கான படங்கள்! "காதில பூ கந்தசாமி"யின் கற்பனைகள் பிரமாதம்!! தொடரட்டும் பணி.

ஏ.எம்.அலி,ஸன்பர், றமீஸ்,
றுவைஸ், கிண்ணியா-06.

காரலோஸாம்! காரலோஸாம்!
கெட்ட வல்ல காரலோஸாம்!
செய்ய இயலாத செயலை இலகுவாக சாதிக்கும்
பயங்கரமான காரலோஸாம்!
வாசகர்களை அதிர வைக்கும்
அதிரடியான காரலோஸாம்!
எங்களுக்காக தரும் ரசிகனுக்கு பாராட்டாம்!!!

செல்வி சாந்தி, கொழும்பு-10.

⁂ ⁂

அன்பின் தினமுரசே!

முரசின் பல்சுவையில் இருந்து வரும் மர்மக் கதைமன்னன் ராஜேந்திரகுமார் எழுதும் நீ! நீயா! தொடர் என்னை மெய்மறக்கச் செய்கின்றது. கார்லோஸின் மனித வெடிகுண்டு தொடர் விறுவிறுப்பாக உள்ளது.

எஸ்.டி.ரமேஸ், அக்கரைப்பற்று-06.

⁂ ⁂

முரசே உன் ஆக்கங்கள் முழுதும் முத்தானவை. தேன்கிண்ணம், இராமாயணம் இனிப்பாக இருக்கிறது. ரசிகனின் இலக்கிய நயம் சூப்பர். அற்புதனின் அரசியல் தொடர் சூடு பிடிக்கிறது. ஒரே ஒரு வார்த்தை, ஒரே பாடல் போன்ற சிறுகதைகள் சிறப்பாக இருந்தன. தகவல் பெட்டிக்கு சபாஷ்.

வ. பிர்தௌஸ், கிண்ணியா-03.

⁂ ⁂

எம் இனிய முரசே!

உமது உடலின் பாகங்கள் யாவும் அருமையிலும் அருமை! காதில பூ கந்தசாமியின் விளம்பரம் சூப்பர்.

"ஹலோ டாக்டரைக் காணவில்லையே! எங்கே போய்விட்டார்?"

சசிகலா துரைநாயகம், சாம்பல்தீவு.

அன்பின் முரசே!

வாரா வாரம் நீ சுமந்து வரும் ஆக்கங்களில்

'மனித வெடி குண்டு' கார்லோஸின் கதை சூடு,

எமக்குப் பருகத்தரும் தேன் கிண்ணம் சுவை,

ஏனைய தகவல் பெட்டி, சினிவிசிட் என்பன சுவாரஸ்யம் அத்தனைக்கும். உனக்கு நிகர் நீயே!

ஆரிப். ஏ.மஜீட், மௌலானா வீதி,
நிந்தவூர்-14.

⁂ ⁂

வாரந்தோறும் வலம் வரும் வசந்த முரசே, வாழ்த்துகிறோம், உம்மை. அரசியல் விமர்சனங்கள் அபாரம். கவியரசு வைரமுத்துவின் "உனக்குள் உறைபவன்" கவிதை பிரமாதம். 'மனக்கோலங்கள்' கதையின் ஆசிரியருக்கு வாழ்த்துக்கள். புத்தம் புதிய அம்சங்களுடன் உலாவர போற்றுகிறோம்.




மடுல்சீமையூர்:
மஞ்சு, மதி, ஜீவா,
சுந்தரி, தேன்.

⁂ ⁂

கடந்த ஜூன் 23ல் வெளிவந்த வீரப்பனின் வீர காவியங்கள் என்னை அசத்தி விட்டன. உண்மையில் கருணாநிதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கசட்நாடா, காதில பூ கந்தசாமிக்கும் கிடைத்திருக்குமோ என நான் நினைக்கிறேன்.

முஹம்மட்.சாதிக், கொட்டகொட,
மாத்தளை.

⁂ ⁂



படிப்பகம்

www.padippakam.com

# கிழக்கில் தொடர் தாக்குதலுக்கு முஸ்தீபு!

# திருமலையில் புலிகளின் மூத்த தளபதி!

**கிழக்கு மாகாணத்தில் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தத் திட்டமிட்டுள்ளனர் புலிகள் இயக்கத்தினர். வடக்கில் படைக்குவிப்பை தடுக்கும் வகையில் கிழக்கு மாகாணம்மீது தன் கவனத்தை திருப்பியுள்ளார் பிரபாகரன். கிழக்கு மாகாண புலிகளின் தாக்குதல் பிரிவுகளிலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.**

**தொடர் தாக்குதல்கள்?**

கிழக்கு மாகாணத்தில் பரவலான தொடர் தாக்குதல்களுக்கு புலிகள் இயக்கத்தினர் திட்டமிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட புலிகளின் தளபதி கருணாவை வன்னிக்கு அழைத்து பிரபாகரன் இரகசிய ஆலோசனை நடத்தியுள்ளார். புதிய தாக்குதல் திட்டத்தோடும், பிரபாகரனால் தெரிவுசெய்து அனுப்பப்பட்ட தாக்குதல் அணி ஒன்றுடனும் கருணா மட்டக்களப்புக்கு திரும்பியுள்ளார்.

இதேவேளை திருமலை மாவட்டத்தின் முழுப்பொறுப்பும் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரும், சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் சிறப்பு தளபதியுமான சொர்ணத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் திருக்கோணமலை புல்மோட்டை 10ம் கட்டையில் உள்ள இராணுவ முகாம்மீதான தாக்குதல் சொர்ணம் தலைமையில்தான் நடத்தப்பட்டது.

மூன்றாம் கட்ட ஈழப்போரை புலிகள் பிரகடனம் செய்த பின்னர் திருமலை மாவட்டத்திற்கு சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு அனுப்பப்பட்டது.

யாழ்-மாவட்ட புலிகளின் முன்னாள் தளபதி செல்வராசா தலைமையில் அப்போது சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு அனுப்பப்பட்டிருந்தது.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் செல்வராசாவுக்குப் பதிலாக சொர்ணம் பொறுப்பேற்றுள்ளார்

சமீபத்தில் சொர்ணம் வன்னிக்குச் சென்று பிரபாகரனை சந்தித்தார். யாழ்ப்பாணத்தில் சிறியளவான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள சொர்ணம் விருப்பம் தெரிவித்தார்.

எனினும், திருமலை மாவட்டத்தில் பாரிய நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கட்டளையிட்டு சொர்ணத்தை திருமலைக்கு அனுப்பி வைத்தார் பிரபாகரன்.



தளபதி சொர்ணத்திடம் பொறுப்பை ஒப்படைக்கும் பிரபாகரன்

அதனையடுத்தே கடந்த 10.06.96 திங்கட்கிழமை திருமலையில் பாரிய தாக்குதல் ஒன்றை சொர்ணம் தலைமையில் புலிகள் மேற்கொண்டனர். 200க்கு மேற்பட்ட புலிகள் தாக்குதலில் பங்குகொண்டனர், என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவைச் சேர்ந்தவர்களே மேற்படி தாக்குதலில் பங்கு கொண்டனர்.

**பாரிய திட்டம்**

ஆனையிறவு இராணுவ முகாம்மீதான தாக்குதல், மற்றும் தவளைப்பாய்ச்சல், புலிப்பாய்ச்சல் போன்ற நடவடிக்கைகளில் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவுக்கு தலைமை தாங்கியவர் சொர்ணம்.

சொர்ணத்தை திருமலைக்கு அனுப்பியுள்ளது மூலம், அங்கு பெரும் தாக்குதல்களுக்கு புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்று நம்பப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும் நிலப்பரப்பை கட்டுப்படுத்துவதுடன், திருமலை, அம்பாறை மாவட்டங்களில் தமது நடவடிக்கைகளை தீவிரப் படுத்தப் போவதாக 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் இம்மாத வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஈடுசெய்யலாம்**

வடக்கில் தமக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவை கிழக்கு கள நிலவரம் மூலமாக ஈடு செய்வதே புலிகளின் நோக்கம் என்று தெரிகிறது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவலான உறுப்பினர் திரட்டலில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

புதிய உறுப்பினர்கள் வன்னிக்கு அனுப்பப்பட்டு பிரபாகரனின் நேரடி கவனிப்பில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

கிழக்கு மாகாண நடவடிக்கைகள் தொடர்பாக 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"விடுதலைப் போராட்டத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிலப்பரப்பாகவே கிழக்கு மாகாணம் எப்போதும் விளங்கி வருகிறது.

அரசியல், குடியியல், புவியியல் ரீதியிலும், அதன் காரணமாக இன்று போரியல் ரீதியிலும் இன்றியமையாத ஒரு பாத்திரத்தை கிழக்கு மாகாணம் பெற்றுள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு—கிழக்கை பிரிக்கச் சதி

## தீர்வு முயற்சிகளை புலிகள் சாடுகிறார்கள்

அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனைகள் தொடர்பாக புலிகள் இதுவரை உத்தியோகபூர்வமான கருத்து எதனையும் வெளியிடவில்லை.

எனினும் அரசியல் தீர்வு முயற்சிகள் தொடர்பாக 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கம் ஒன்று இம்முறை எழுதப்பட்டுள்ளது.

அதில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "தமிழர்களது தாயகத்தை பிரித்து துண்டாடும் சதி முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

வடக்கு-கிழக்கின் தொடர்ச்சியான நிலப்பரப்பை திட்டமிட்டுத் துண்டாடி, அங்கே இரண்டு அல்லது மூன்று வெவ்வேறு அலகுகளை ஏற்படுத்தி தமிழர் தேசியத்தை பலவீனப்படுத்தும் முயற்சிகள் நடக்கின்றன.

அரசின் தீர்வுத் திட்டயோசனையில் அதிகாரப்பரவலாக்க நிர்வாக அலகுகள் பற்றி குறிப்பிடப்படவில்லை.

இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்துகொண்டு குறைந்தபட்ச தீர்வொன்றை முன்வைப்பதே அரசாங்கத்தின் திட்டமாகும்.

இத்தகைய இராணுவவாத அணுகுமுறையை அரசாங்கம் கடைப்பிடிக்கும்வரை, தீர்வு யோசனைகள், பேச்சுவார்த்தைகள் என்பன அர்த்தமற்றவைகளாகவே இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்கு முன்பாக அரசாங்கம் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு சமர்பித்த சட்ட வரைவு முழுமையான தீர்வுத்திட்டமாக அமைந்திருக்கவில்லை." என்று 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

## கடை நடத்தும் படை

யாழ்-குடாநாட்டில் தனியார் வர்த்தக நிறுவனங்கள், மற்றும் சில்லறைக் கடைகள் ஒரு குறிப்பிட்ட அளவில்தான் திறக்கப்பட்டுள்ளன.

கடைகளைத் திறக்க வேண்டாம் என்று புலிகளும் எச்சரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை யாழ்-குடாநாட்டில் கிட்டத்தட்ட 32 சில்லறைக் கடைகள் படையினரால் நடத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் இயங்கிவருகிறது. ஆயினும் அதன் சேவையின் முழுப் பலனையும் மக்கள் பெறமுடியாதுள்ளது.

இடைத்தரகர்கள் சிலர் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் பொருட்களை வாங்கி கறுப்புச் சந்தையில் விற்பனை செய்கின்றனர்.

உதாரணமாக, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் 125 ரூபாவுக்கு வாங்கக்கூடிய சைக்கிள் டயர், கறுப்புச் சந்தையில் 600 ரூபாவரை விலை போகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் முகவர்களை நியமித்து தனது பொருட்களை விற்பனை செய்ய அனுமதி வழங்குவது வழக்கம். யாழ் அரச செயலக ஊழியர்கள் சிலர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி தாமே முகவர்களாகியுள்ளனர். அதன் மூலம் கூட்டுறவு மொ.வி.நிலையத்தில் பொருட்களை வாங்கி கறுப்புச் சந்தைக்கு கொடுத்து கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்படும் அரிசியின் தரம் தொடர்பாகவும் சில குறைபாடுகள் சொல்லப்படுகின்றன. இதேவேளை யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ அரிசியின் விலை 90 ரூபா.

## திரும்பிச்செல்ல மக்கள் விருப்பம்

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் வன்னியில் தங்கியிருப்போர் தவிர ஏனையோர் அனைவரும் சொந்த வீடுகளுக்கு திரும்பிவிட்டனர்.

வன்னியில் தங்கியிருப்போரின் வீடுகள் மட்டுமே வெறிச்சோடிக் காணப்படுகின்றன. அங்கு திருட்டுக்களும் நடைபெற்று வருகின்றன.

வன்னியில் தங்கியுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்களில் பலர் தமது வீடுகளுக்கு திரும்பிச் செல்லவே விரும்புகின்றனர். நீண்டகாலம் தாமதித்துச் சென்றால் தமது வீடுகள் பாழடைந்து பாழ்பட்டுவிடும் என்று அவர்கள் கவலை கொண்டுள்ளனர்.

புலிகளின் தடை, போக்குவரத்து வசதியீனம், வவுனியாவில் இராணுவ தடை முகாமில் அனுமதி மறுப்பு போன்ற காரணங்களால் வன்னியில் தங்கியுள்ள யாழ்ப்பாண மக்கள் தமது விருப்பங்களுக்கு ஏற்ப முடிவெடுக்க முடியாதுள்ளனர்.

வன்னி பெரு நிலப்பரப்பில் இருந்து இரவோடு இரவாக தென்மராட்சிப் பகுதிக்கு செல்ல மக்கள் சிலர் முயற்சித்தனர். அதனைக் கண்ட புலிகள் இயக்கத்தினர் அவர்களைத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

கிளாலி கடலேரி மற்றும் பூநகரி பாதைகளில் புலிகளின் கடும் கண்காணிப்பு காணப்படுகிறது.

## போக்குவரத்து அமைச்சின் நியமனம்

## புகையிரதத் திணைக்களத்தில் அதிருப்தி

திருமலை புகையிரத திணைக்களத்துக்கு புதிதாக 50 பேரை நியமிக்க போக்குவரத்து அமைச்சு முடிவு செய்துள்ளது.

புதிதாக நியமிக்கப்படவேண்டிய 50 பேரின் பெயர் பட்டியலை போக்குவரத்து அமைச்சு திருமலை புகையிரத திணைக்களத்துக்கு அனுப்பிவைத்துள்ளது.

50 பேரில் 45 பேர் சிங்கள இனத்தவர்கள். 5பேர் மட்டுமே தமிழ் பேசுவோர். அவர்களில் மூன்றுபேர் மட்டுமே திருமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள்.

திருமதி சிறிமாணி அத்துலத் முதலியின் பொறுப்பில் உள்ள போக்குவரத்து அமைச்சின் மேற்படி நியமனம் அதிருப்தியை தோற்றுவித்துள்ளது.

திருமலை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு இல்லாமல் பலர் இருக்கும்போது, வெளி மாவட்டத்தவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வெளி மாவட்டத்தவர்கள் திருமலையில் உள்ள வெற்றிடத்தை சாட்டாக வைத்து நியமனம் பெறுவர். பின்னர் ஒரு சில மாதங்களுக்குள் தமது அரசியல் தொடர்புகள் மூலம் தமது சொந்த மாவட்டங்களுக்கு மாற்றலாகிச் சென்றுவிடுவர்.

அதனால் திருமலை புகையிரத திணைக்களத்தில் தொடர்ந்து ஊழியர் பற்றாக்குறை நிலவும்.

அதுதவிர, சிங்கள இனத்தவரை கூடுதலாக நியமிப்பதால் மொழிப் பிரச்சனையும் ஏற்படும் என்று பல்வேறு காரணங்களால் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

## பஸ் கட்டண உயர்வால் வாகனங்களில் சர்ச்சை!

(ஏறாவூர் நிருபர்)

**01.07.96** முதல் அமுலுக்கு வந்த 15% சதவீத பஸ்கட்டண உயர்வால் தனியார் பஸ் போக்குவரத்துக்காரர்களுக்கும் பயணிகளுக்குமிடையில் வாய்த் தர்க்கங்கள் ஏற்பட்டன.

கட்டண உயர்வு பற்றி முன்கூட்டியே அறிந்திராத பயணிகள் பலர் தாம் செலுத்தும் பழைய கட்டணத்தைக் கொடுக்க முற்பட்டபோதே இத்தகைய சர்ச்சைகள் ஏற்பட்டன.

அது மட்டுமல்லாமல் தாம் பழைய கட்டணத்தை மாத்திரமே செலுத்துவோம் என்று அடம் பிடித்த பயணிகளைச் சில தனியார் வாகனக்காரர்கள் இடை வழியில் இறக்கி விட்டுச் செல்ல எத்தனித்த சம்பவங்களும் இடம் பெற்றன. புதிய கட்டணத்தை தர மறுத்த பயணிகளைப் பற்றி பொலிஸ் சாவடிகளில் பொலிசாரிடம் கூறியும் சில நடத்துநர்கள் கட்டணங்களை அறவிட்டனர்.

மட்டக்களப்பில் தனியார் போக்குவரத்து வாகனக்காரர்கள் அதிகரித்த கட்டணத்திற்கு மேலதிகமாக 45% சதவீத கட்டணத்தை அறவிடுவதை அவதானிக்க முடிகிறது.

இது ஒரு புறமிருக்க; ஏறாவூர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 4 பொலிஸார் சூதாட்ட விளையாட்டில் ஈடுபட்டிருந்த சமயம் நிலையப் பொறுப்பதிகாரியால் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாதுகாவலர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## "எங்களுக்கு யாருமே வேண்டாம்"

"புலிகள் எமது பிள்ளைகள், மண்ணின் மைந்தர்கள். இது எங்கள் மண்." மெல்லிய தோற்றமுடைய அந்த மனிதர் பேச்சை நிறுத்துகிறார். யாழ் மருத்துவமனை வீதியில் மரத்தின்கீழ் பஸ் நிலையத்தை பார்த்த வண்ணம் இராணுவத்தினர் இருவர் நிற்கின்றனர். அவர்களுக்கு இந்த பிரிவினைவாதி பேசியது கேட்டிருக்க முடியாது.

"புலிகள் இப்போது தவறுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு சண்டை தேவையில்லை. ஆனால் அவர்கள் எங்கள் பொடியன்கள். இராணுவம் எங்களுடையது அல்ல." பேச்சு அவசரமாகிறது. முகம் உணர்ச்சிவசப்படுகிறது. கண்கள் சவாலை எதிர்நோக்குகின்றன.

இவ்வாறு யாழ்ப்பாணம் சென்றுவந்த 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையாளர் லக்ஸ்மன் குணசேகர தனது அனுபவத்தை விபரித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தான் சந்தித்த தொழில்நுட்பவியலாளர் ஒருவரே தன்னிடம் அவ்வாறு கூறினார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"எங்களுக்கு எவருமே தேவையில்லை. புலிகளும் வேண்டாம். இராணுவமும் வேண்டாம். ஏனைய போராளிக் குழுக்களும் வேண்டாம். நாங்கள் சமாதானத்தையும், ஜனநாயத்தையுமே விரும்புகிறோம்." என்றும் அந்த தொழில்நுட்பவியலாளர் தன்னிடம் கூறியதாக ஒப்சேவர் பத்திரிகையாளர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## சைக்கிள் வியாபாரம்

கொழும்பில் விற்பனை செய்யமுடியாத சைக்கிள்களை யாழ்ப்பாணத்தில் கொண்டு சென்று விற்பனை செய்ய யாழில் ஒரு வர்த்தக நிறுவனம் முயற்சி செய்துவருகிறது.

கொழும்பில் மார்க்கெட் இல்லாத தரமற்ற சைக்கிள்களை பன்மடங்கு லாபம் வைத்து விற்பனை செய்யும் முயற்சியில் அந்த நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

முன்னர் புலிகளோடு நெருக்கமாக இருந்த குறிப்பிட்ட நிறுவனம், தற்போது படையினருடன் நெருக்கம் போல காட்டி சைக்கிள் வியாபாரத்தில் ஈடுபடுகிறதாம்.

## தோட்டக் காணிகள் சுவீகரிப்பு

## மலையக முன்னணி எதிர்ப்பு

"தற்போது தோட்டக்காணிகள் காரணம் கூறப்படாமல் ஒதுக்கப்படுவதால் மலையக மக்கள் மனக்கொதிப்படைந்து போயிருக்கிறார்கள். இவர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்த திட்டத்தையும் தீவிரமாக எதிர்ப்போம்." இவ்வாறு தோட்ட வீடமைப்பு பொதுவசதிகள் பிரதியமைச்சர் பெ. சந்திரசேகரன் நுவரெலியாவில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் முன்னணி ஆகியவற்றின் தோட்டத் தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள், கட்சிக் கிளை நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கூட்டத்திற்கு வழக்கறிஞர் இராஜ இராஜகுலேந்திரா தலைமை தாங்கினார்.

பிரதியமைச்சர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது: "கிராமிய விரிவாக்கத்திற்காக தோட்டக் காணிகள் ஒதுக்கப்படுவதாகக்கூறி அனேக தோட்டங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் அளக்கப்பட்டுவருகின்றன. சுற்றுவட்டாரத்தில் கிராமங்களே இல்லாத தோட்டங்களில்கூட இத்தகைய காணிகள் ஒதுக்கப்படுகின்றன.

எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிலம் ஒதுக்கப்படுவதை நாம் ஆட்சேபிக்கவில்லை. தோட்டங்களில் தொழிலாளரின் எண்ணிக்கையை குறைக்கவேண்டுமென தோட்ட நிர்வாகங்கள் வலியுறுத்திவருகின்ற இந்நேரத்தில் தோட்டக்காணிகளை பயிர் செய்கையிலிருந்து மேலும் ஒதுக்குவது தொழிலாளர்களுக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். அத்தோடு இக்காணிகள் யாருக்கு பகிர்ந்தளிக்கப்படப் போகின்றன என்பதிலும் நாம் கவனம் செலுத்துகிறோம்.

தொழிலாளர்களின் தொழில்வாய்ப்பும் வருமானமும் அல்லது அவர்களின் அமைதியான வாழ்க்கையும் இத்திட்டத்தினால் பாதிக்கப்படுமாயின் இதனை நடைமுறைப்படுத்துவதை நாம் வன்மையாக எதிர்ப்போம்.

மலையக மக்களின் தேவைகள் எவ்வளவோ இருக்கின்றன. அவர்களுக்குச் சொந்தமான நிலம் இல்லாத நிலையில் இந்த காணி ஒதுக்கீட்டின் உள்ளர்த்தம் புரியாமல் சந்தேகத்தோடு குழம்பிப்போயிருக்கிறார்கள். இந்த மக்களோடு சம்பந்தப்படாத வேறு எந்த திட்டதிற்காகவும் காணி சுவீகரிப்பு செய்யப்படுமானால் கட்டாயம் போராடி அதை முறியடிப்போம்," என்றும் அவர் உறுதியளித்தார்.

## புலிகளிடம் மாட்டிய முகாமையாளர்!

## உணவு முத்திரைகளில் மோசடி!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு- பங்குடாவெளி ப.நோ.கூ.ச. கிளைமுகாமையாளர் ஒருவர் மக்களிடமிருந்து முன்கூட்டியே மாதத்துக்குரிய வறுமை நிவாரண உணவு முத்திரைப் புள்ளிகளைப் பெற்றிருந்தார். எனினும் அம்முத்திரைகளுக்குரிய உணவுப்பொருட்களை அவர் மக்களுக்கு வழங்கவில்லை. மக்கள் அவரிடம் வந்து உணவுப்பொருட்களை கேட்கும் போதெல்லாம் நாளை கொண்டு வருகிறேன். நாளை மறுதினம் கொண்டு வருகிறேன் என ஏமாற்றிக் கொண்டிருந்தார். எதுவுமறியாத வறிய மக்கள் இது குறித்து செங்கலடி பிரதேச செயலகத்திலும் ப.நோ.கூ. சங்கத்திடமும் முறையிட்டனர்.

குறித்த முகாமையாளரின் விடயம் புலிகளுக்கும் எட்டியது. புலிகள் அவரைப் பிடித்துச் சென்று 5 நாட்கள் தடுத்து வைத்து செம்மையாக அடிகொடுத்து விசாரணையின்பின் வறிய மக்களிடமிருந்து இவர் பெற்ற உணவு முத்திரைத் தொகையை அவரிடமிருந்து பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்ததாக மக்கள் தெரிவிக்கிறார்கள்.

சுமார் 75 ஆயிரம் ரூபாவுக்கு மேல் அத்தொகை இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. வறிய மக்களைச் சுரண்டிய முகாமையாளருக்கெதிராக கூ.ச.என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இம்முகாமையாளருக்கு ஏற்பட்ட கணக்குச் சோர்வை நிவர்த்தி செய்யவே அவர் இவ்விதம் மக்களின் முத்திரையை கையாடியிருந்தார்.

சம்பந்தப்பட்ட முகாமையாளரிடம் செங்கலடி ப. நோ.கூ. சங்கம் விளக்கம் கோரி அவருக்கு கிளைகள் எதிலும் கடமை வழங்காது பிரதான காரியாலயத்தில் வைத்துள்ளது.

இதேவேளை செங்கலடி ப.நோ.கூ. சங்கத்தின் உறுகாமம் கிளையின் முகாமையாளர் ஒருவர் இருப்பெடுப்பின்போது 60 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட சோர்வுடன் கண்டுபிடிக்கப்பட்டார். பின்னர் அவர் தனது வேலையை இராஜினாமாச் செய்யப்போவதாக அறிவித்தார். எனினும் சோர்வுப் பணம் செலுத்தப்படும்வரை அவரது இராஜினாமாவை ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூ.ச. அறிவித்துவிட்டது. குறித்த முகாமையாளர் அகதிமக்களுக்குத் தரமற்ற உணவுப் பொருட்களை விநியோகித்து வந்தார் என்று அடிக்கடி இவரைப் பற்றி மக்கள் முறையிட்டு வந்துள்ளனர்.



படிப்பகம்

# கண்டியில் முஸ்லிம் ஆண்கள் கல்லூரி
## காணி தேடுவதில் தொடர் தாமதம்

(கண்டி நிருபர்)

கண்டி நகரில் முஸ்லிம் மாணவர்களின் கல்வி நலன் கருதி முஸ்லிம் ஆண்கள் கல்லூரி ஒன்றை நிர்மாணிக்கக் கோரி ஸ்ரீ.ல.சு.கட்சி, ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸ், கண்டி முஸ்லிம் வர்த்தகர் சங்கம் உட்பட மற்றும் பல இயக்கங்கள் அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றன.

கண்டி சித்திலெப்பை மகா வித்தியாலய மண்டபத்தில் 23.6.96ல் நடைபெற்ற கண்டி மாவட்ட முஸ்லிம் பள்ளிவாசல்களின் தர்மகர்த்தாக்கள் உட்பட அரசியல் கட்சிகளின் பிரமுகர்களடங்கிய கூட்டத்திலேயே மேற்கண்ட வற்புறுத்தல்களை காணி, வனவளஅமைச்சர் திரு.டி.எம். ஜயரத்னாவிடம் வலியுறுத்தினர்.

கடந்த அரசாங்கத்தின் காலப் பகுதியில் இவ்வாறான பாடசாலை ஒன்றை நிர்மாணிக்க முன்னாள் ஐ.தே. கட்சி பலம்வாய்ந்த அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் எடுத்த முயற்சி கை கூடவில்லை.

சில பேரினசக்திகள் கண்டியில் இவ்வாறான ஒரு பாடசாலையை நிறுவ வேண்டாமென ஒற்றைக் காலில் நின்றன. இதனால் காலம் சென்ற ஜனாதிபதி திரு. பிரேமதாஸா இது தொடர்பாக வழங்கிய உறுதியுரையும் பொய்த்துவிட்டதை கண்டி முஸ்லிம்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பொ.ஐ.முன்னணி அரசு கண்டியில் அசுர வேகத்தில் அப்பொழுதே மேற்கொண்ட தேர்தல் பிரசாரத்தின் போது இவ்வாறான பாடசாலை ஒன்றை தாம் நிறுவித் தருவதாக வாக்குறுதியும் அளித்திருந்தது. இதன் மீது முஸ்லிம்கள் நம்பிக்கையும் கொண்டனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனாதிபதி அவர்களுடன் மேற்கொண்ட சந்திப்பின் போது அவரது முன்னிலையில் வைக்கப்பட்ட 18 கோரிக்கைகளுள் கண்டியில் முஸ்லிம் ஆண் பாடசாலை விவகாரமும் அடங்கி இருந்தது. அந்த வேண்டுகோள் மீது ஜனாதிபதி மிக்க ஆர்வம் காட்டியிருந்தார். என்றாலும் இப்பாடசாலை நிறுவ கண்டியில் போதிய நிலப்பரப்பை தேடும் படலத்தில் கடந்த பல மாதங்களாக மேற்கொண்ட முயற்சிகள் பயனற்றுபோய் விடக்கூடாதென்று முஸ்லிம்கள் விரும்புகிறார்கள்.

காணியைத் தேடித் தருவதில் அமைச்சர் திரு. ஜயரத்ன ஆர்வம் கொண்டிருக்கின்றார். ஆயினும் காணியைப் பெறுவதில் மேற்கொள்ளப்படவேண்டிய அணுகுதல் முறைகள் சரியாக இடம் பெற்றால் மாத்திரமே தாம் உதவி செய்யஇயலும் என்று அவர் கூறியுள்ளார். சித்திலெப்பை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போதே அமைச்சர் ஜயரத்னா மேற்கண்டவாறு ஒழிவு மறைவின்றிக் கூறினார்.

என்றாலும் இந்த முயற்சி தொடரப் படவேண்டுமென அங்கு குழுமியிருந்த திரளான முஸ்லிம்களின் ஏகோபித்த குரல்கள் அமைந்திருந்தன. தேசிய மீலாத்விழாவை கம்பளை ஸாஹிரா கல்லூரியில் கொண்டாட இருப்பதால் இதுபற்றி ஆராய அங்கு நடைபெற்ற கூட்டத்தில் பிரதி அமைச்சர் அலவி மௌலானா பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் றவூப் ஹக்கீம் எம்.பி.,ம.மா. சபை உறுப்பினர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# வாரத்தில் 4 நாள் மட்டும் வேலை
## ஊழியர்கள் கலக்கம்

(திருமலை நிருபர்)

வியாபார நிலைமை மந்தமடைந்துள்ளமையைக் காரணங்காட்டி குறிப்பிட்ட எட்டு ஊழியர்களுக்கு மட்டும் வாரத்தில் நான்கு நாட்கள் வேலை வழங்கினாற் போதுமானது எனத் தீர்மானம் செய்திருக்கிறது கிண்ணியா பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்.

எம்.பி.எம். பாகிர், எம்.வை.எம்.மகரூப், ஏ.டபிள்யு.பி.மொகமட், ஏ.கே.எம்.ஜன்பர், ஏ. ஜமால்தீன், கே. சக்காரியா, ஏ. எச். மன்சூர் அலி, ஏ.சி.எம்.நஸீர் ஆகிய எட்டு ஊழியர்களுமே இவ்வாறு பாதிப்படைந்தவர்கள். இவர்களில் மூவர் 1978ல் நியமனமானவர்கள் ஏனையோர் 1983ல் நியமனமானவர்கள்.

இதில் மகரூப் என்பவர் பிரதி பொது முகாமையாளர், கொள்கல உத்தியோகத்தர் ஆகிய பதவிகளை வகித்தவர். பாகிர் கிராமிய வங்கி முகாமையாளராக இருந்தவர்.

இத்தனைக்கும் ஏனைய ஊழியர்கள் சகலரும் வழமைபோல பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏனைய ஊழியர்களுக்குக்கூட மாதம் முழுக்க வேலை வழங்கப்படுகையில் நிரந்தர ஊழியர்களான தங்களுக்கு 1.6.1996 தொடக்கம் இவ்வாறான நிலைமை ஏற்பட்டதால் இவர்கள் கலங்கிப் போயுள்ளனர்.

எவ்வாறு நாங்கள் எட்டுப் பேரும் தெரிவு செய்யப்பட்டோம் என்பது புரியாத புதிராக இருக்கிறது. எவ்வித குற்றமும் இழைக்காத குடும்பஸ்தர்களான நாங்கள் அநியாயமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்று முரசிடம் தெரிவித்தார்கள் இந்த ஊழியர்கள்.

இதே நிர்வாகம் கடந்த ஆண்டு நிதிப்பற்றாக்குறைவைக் காரணமாகக் காட்டி ஆறு ஊழியர்களை வேலை நீக்கம் செய்துவிட்டு மறுவாரமே 34 புதிய ஊழியர்களை வேலைக்குச் சேர்த்திருந்த சம்பவத்தையும் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

தங்களுக்கு ஏற்பட்ட நிலைமை குறித்து அதிகாரிகளும் முறைப்பாடு செய்துள்ளதாகவும் இவர்கள் தெரிவித்தார்கள்.

# மின்மாற்றிகளுக்கு பாதுகாப்பு

(காத்தான்குடி நிருபர்)

அண்மையில் தகர்க்கப்பட்ட காத்தான்குடி பிரதான வீதியின் இருமின் மாற்றி தொகுதிகளுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இரவு பகலாக படையினர் காவல் கடமையிலீடுபட்டுள்ளனர். அருகில் காப்பரண்களும் அமைக்கப்பட்டுள்ளன. மிக உயரமான சுற்றுமதில்களும் அமைக்கப்பட்டுவருகின்றன. மின் மாற்றிகளை வளைத்து பிரகாச விளக்குகள் ஏற்றப்பட்டுள்ளன.

தகர்க்கப்பட்ட இருமின் மாற்றிகளில் 500 மெகவாட்ஸ் மின்சாரத்தை விநியோகிக்கும் ஒருமின்மாற்றி முற்றாக சேதமடைந்துள்ளதால் பதில் தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரின் உடனடி நடவடிக்கையின் போது புதிய 500 மெகவாட்ஸ் மின்மாற்றி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. மற்றைத் திருத்திமுடிக்க சில வாரங்கள் ஆகலாமென மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தகர்க்கப்பட்ட இரு மின்மாற்றிகளினதும் சேதம் 40 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. சுமார் 20 பீப்பாய் ஒயில் மின்மாற்றிகளிலிருந்து வழிந்துள்ளது. எனினும் காத்தான்குடி பிரதேசம் முழுதும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

# தொலைக்காட்சி, வானொலிகளில் தேயும் தமிழ்
## தேன்பாயுமா? செவியில் தேள் கொட்டுமா?

சென்ற வாரம் முரசில் தொலைக்காட்சி விமர்சனத்தில் ஒரு தவறு. சுயாதீன தொலைக்காட்சியில்தான் செல்லமாக வணக்கம் சொல்லப்படுகிறது. ரூபவாகினியில் வணக்கம் சொல்லும் 'பண்பாடு' கிடையாது. சுயாதீன தொலைக்காட்சி, ரூபவாகினி இரண்டுமே அரசின் கட்டுப்பாட்டில் உள்ளவைதான்.

ரூபவாகினியுடன் ஒப்பிட்டால் சுயாதீன தொலைக்காட்சி தமிழ் நிகழ்ச்சிகளைப் பாராட்டலாம். ரூபவாகினியின் தமிழ் சேவை கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் இருப்பது வெளிப்படை.

நிகழ்ச்சி முடிவடையும்போது 'வணக்கம்' சொல்லும் விடயத்தில் எம்.ரி.வி.தான் தமிழைப் பந்தாடும் ஒரு பெண்மணியைப் பயன்படுத்துகிறது. நம்பாதவர்கள் இரவு 9.30க்கு எம்.ரி.வியைப் பாருங்கள். அதனுடன் ஒப்பிட்டால் சுயாதீன தொலைக்காட்சியின் 'வணக்கம்' எவ்வளவோ மேல்.

அதேபோல எஃப்.எம்.99 தனியார் வானொலியிலும் சில தமிழ் அறிவிப்பாளர்கள் 'ஸ்டைல்' என்று நினைத்து முக்குகிறார்கள். அதனால் உள்ளதும் போச்சுடா கதைதான். குறிப்பாக சந்திர காந்தன் என்றொரு அறிவிப்பாளர் நிலை கவலைக்கிடமாக உள்ளது. ஒரு செய்தியறிக்கையை வாசித்து முடிப்பதற்கு இடையில் எத்தனை தடவை தடுக்கி விழுகிறார் என்று விரல்விட்டு எண்ணிப் பாருங்கள்.

உச்சரிப்புக்களில் தெளிவு, மெல்லின, வல்லின பேதம் தெரியாத அறிவிப்பாளர்கள் தமிழில் எவ்வாறு தெரிவாகிறார்களோ தெரியவில்லை. 'அல்லி பப்படம்' என்பதை ஒரு அறிவிப்பாளர் 'அள்ளி பப்படம்' என்றுதான் உச்சரிப்பார். அவருக்குத்தான் கூடுதல் வாய்ப்புக்கள் கிடைப்பதாகத் தெரிகிறது.

தமிழ் நிகழ்ச்சிகளுக்கு அதிக நேரம் கேட்டால் மட்டும் போதாது, தமிழ் நிகழ்ச்சிகளில் தரம், அறிவிப்பாளர்கள், மற்றும் கலைஞர்களின் திறமை என்பவற்றை பேணவேண்டும். இல்லாவிட்டால் செவியில் தேன்பாயாது. 'தமிள்'தேள்தான் கொட்டும்!

கே. நந்தகுமார், முகத்துவாரம்.

# வைத்தியசாலையைத் திறவுங்கள்

ஈச்சிலம்பற்று பிரதேசம் மருத்துவ வசதியற்ற கஷ்டப்பிரதேசமாகவே உள்ளது. சிகிச்சை பெறுவதென்றால் ஆறு மைலுக்கு அப்பால் உள்ள சேருநுவர வைத்தியசாலைக்கு மாட்டு வண்டி மூலம் நோயாளர்களைக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. வைத்தியசாலையில் அனுமதிக்க முன்னரே இடையில் மரணமடைகின்றனர். இவ்வளவு கஷ்டத்தின் மத்தியில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பிறகும் சேருநுவர வைத்தியசாலையில் மருத்துவ வசதியோ மின்சார வசதியோ இல்லை.

எனவே உரிய அதிகாரிகள் இப்பிரதேச மக்களின் கஷ்டநிலையை உணர்ந்து ஈச்சிலம்பற்றில் உள்ள மூடப்பட்டிருக்கும் வைத்தியசாலையை திறக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## பேசமுடியாத தொலைபேசிகள்
# பிரதி அமைச்சர் கவனிப்பாரா?

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொலைபேசிகள் 02 எண் தொடர் கொண்டவையாகவும் 04 எண் தொடர் கொண்டவையாகவும் இரண்டுவகையான இணைப்புகள் தற்போது பாவனையிலுள்ளன. இரண்டு எண் தொடர்கள் பழைய எண் என்றும், நான்கு எண் தொடர்கள் புதிய எண் என்றும் அழைக்கப்படுகின்றன. இதில் நான்கு எண் தொடர்களிலிருந்து கொழும்பு போன்ற பிற மாவட்டங்களுக்கு கடின முயற்சியோடு தொடர்பு கொள்ள முடிகிறது. ஆனால் இரண்டு எண் தொடர் தொலைபேசிகளிலிருந்து பிறமாவட்டங்களுக்கு தொடர்புகளை ஏற்படுத்தவே முடியாதுள்ளது.

மேலும் உள்ளூரில் கூட இரண்டு எண்தொடரிலிருந்து நான்கு எண் தொடருக்கோ நான்கு எண் தொடரிலிருந்து இரண்டு எண் தொடருக்கோ தொடர்பு கொள்ளமுடியாத நிலை உள்ளது. பாவனையாளர்கள் புதிதாக தொலைபேசி இணைப்பை பெறும்போது பின்னர் மாவட்டஉக விற்பனை பிறழ்வுவரி (B.T.T) என பெருந்தொகை பணத்தை செலவு செய்கின்ற போதிலும், தொலைபேசியின் பயனை முழுமையாக அனுபவிக்க முடிவதில்லை.

இதுபற்றி தொலைத் தொடர்பு திணைக்களத்திற்கும் பிரதி அமைச்சருக்கும் பலமுறை முறையிட்டபோதிலும் பலன் எதுவும் ஏற்படவில்லை. தம்மால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் தபால் தொலைத் தொடர்பு பிரதி அமைச்சராக இருந்தும் என்ன பயன்? என்ற எண்ணமே இப்போது தொலைபேசி பாவனையாளர்களிடம் இங்கு ஏற்படுகிறது.

அ.மனவேற்பிள்ளை, 3, முனைத் தெரு, மட்டக்களப்பு.

# எப்போது திருத்தப்படும்?

மட்/கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலைக்கும், விபுலானந்தா மணிமண்டபத்திற்கும் இடையே செல்லும் ஒரு அகலமான கிறவல் வீதிதான் விபுலானந்த வீதியாகும். இவ் வீதி கல்லடி உப்போடை கடற்கரைக்கும் இந்து சேமக்காலை, நீர் வினியோகப் பகுதி, நாகதம்பிரான் ஆலயம், குறுக்கே பூனொச்சிமுனை, சிவானந்தா கொலனி, வேலூர் கொலனி போன்ற இடங்களுக்குச் செல்லும் ஒரு வீதியாகும்.

மேற்படி வீதி மழை காலம் வந்து விட்டால் பொது மக்கள் பாவிக்க முடியாததொரு நிலை வருடா வருடம் ஏற்பட்டுக்கொண்டே வருகின்றது. நீர் நிரப்பும் வவுசர்களும், இப்பகுதியில் இருந்து நீர் எடுத்துச் செல்வதனாலும் மழை காலத்தில் பள்ளமும், மேடுமாகவும், வெள்ளம் பாதையில் தேங்கி நிற்பதாலும் வாகனப்போக்குவரத்து தேவைகளுக்கோ, பொதுமக்களோ பயன்படுத்த முடியாத நிலை இருந்து வருகிறது.

எனவே வீதி அபிவிருத்திச் அதிகார சபையினரோ, அன்றி மாநகரசபையினரோ பொறுப்பேற்று கிறவல்கள் உயர்த்தி போடுவதோ அன்றி இவ் வீதியை தார் வீதியாக மாற்றி அமைக்கவோ நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன்.

கல்லடி மூர்த்தி


## என்றும் சந்திக்கலாம்

எங்களது வாடிக்கையாளர்களின் வீண் சிரமத்தையும் அலைச்சலையும் கருத்தில் கொண்டு திரு. P.K. சாமி அவர்களிடம் நுவரெலியாவிலும் கொழும்பிலும் வரும் வாடிக்கையாளர்கள் நேரடியாக அவரவர் பிரச்சனைகளைக் கூறி தீர்வுக்கான புதுமுறையாக செட்லைட் நெட்வேர்க், T.V. மூலம் திரு.P.K. சாமியுடம் கலந்துரையாடலாம்.

## தேவை

தலைநகரில் பிரபலமான நிறுவனமொன்றிற்கு எழுதுவினைஞர்கள் தேவைப்படுகின்றார்கள். கணக்கியல் துறையில் நல்லறிவும், ஆங்கில மொழியாற்றலும் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் தங்களது தகைமை மற்றும் நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

*இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.*

| | |
|---|---|
| C-AD. 101<br>C/O. THINAMURASU<br>P.O.BOX-1772<br>COLOMBO. | சி-ஏடி. 101<br>மே/பா. தினமுரசு<br>த.பெ.இல. 1772<br>கொழும்பு. |

பி.கே. சாமி (J.D.G.A.N) JP அவர்களால் மாதந்தோறும் ஜோதிட ரீதியாக கணித்து வெளியிடப்படும் 'மெய்ஞான ஜோதிட சிந்தாமணி'யை பெற விரும்புவோர் தனிப்பிரதி ரூ27/=. வெளிநாட்டினருக்கும், உள்நாட்டினருக்கும் தபால் செலவுடன் வருட சந்தா ரூ. 360/= வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் ஏஜெண்ட் தேவை.
தொடர்புகளுக்கு :- பி.கே. சாமி (J.D.G.A.N) JP, No. 162, MAY FIELD RD, KOTAHENA. COLOMBO-13.

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஜூலை 19 முதல் 28 வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax No. 436439
ஜூலை 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், ஜூலை 7, 8, 9 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

### வெளிவந்துவிட்டது...

வெற்றிக்கனி
ஆண்டு 5
இதழ் 7,8,9,10,11
கல்வி மஞ்சரி
O/L வினாவிடை
EFFECTIVE ENGLISH WITH GRAMMAR 1 & 2

**BRIGHT BOOK CENTRE**
S-27, First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770

## விளம்பரப்பகுதி



மீண்டும்
ஜூலை 1ம்
திகதி முதல்
**பூங்கா**
சிறுவர் பத்திரிகை
105-D, 1st Floor, Olcott Mawatha, Colombo 11.
Tel : 440507, 430132 Fax : 437615

### BRIGHT ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத,
வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும்
விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்:..............................
விலாசம்:..............................

**BRIGHT TRAINING CENTRE**
S-27, FIRST FLOOR, P.O. BOX. 162.
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL: 434770



### மின்சார வேக மலையாள மாந்திரிக சக்தி

ஆத்மாக்களின் எண்ணங்கள் எண்ணியபடி நிறைவேறினால் மாத்திரமே ஆத்ம திருப்தி அடைகிறார்கள். கேட்டவருக்கு கேட்டவரம் தரும் ஸ்ரீ துர்கா தேவியின் அற்புத அருள் கொண்ட உலக மாந்திரிக சக்கரவர்த்தி திரு.பி.கே.சாமி அவர்களை அணுகினால் கோரிக்கை கொடுக்கும் அன்பர்களுக்கு இத்தனையாம் திகதி இத்தனை மணிக்கு தங்கள் வேலை பூர்த்தியென சான்றிதழ் வழங்கப்படும். அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டதும் வரையறுக்கப்பட்ட தனியார் லிமிட்டட் கம்பனி இது ஒன்றேயாகும். எத்தனை யெத்தனையோ வெளிநாட்டவருக்கும் உள்நாட்டவருக்கும் எம்மால் வெற்றிபெற்ற சான்றிதழ்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. சான்றிதழ்களை நேரில் பார்வையிடலாம். எம்மாதமும் 20 முதல் மாதக் கடைசிவரை கொழும்பு ஸ்ரீதுர்க்கை தேவஸ்தானத்திலும் இதர நாட்களில் நுவரெலியா ஸ்ரீ துர்க்கை தேவஸ்தானத்திலும் திரு. சாமி அவர்களை சந்திக்கலாம். உள்நாட்டவர் நேரில் சந்திக்க ஆரம்ப அனுமதி கட்டணம் ரூ.250. வெளிநாட்டவர்கள் பிரச்சினைகளை கூறி பிறந்த திகதி மாதம் வருடம் இவைகளை குறிப்பிட்டு அனுப்பி ஆரம்ப கட்டணமாக ரூ.1000 அனுப்பினால் அவர்கள் வேலைக்குரிய கட்டணமும் எண்ணங்கள் பூர்த்தியாகும் திகதியும் கொண்ட கார்டும் அனுப்பப்படும்.

Dr.பி.கே.சாமி (J.D.G.A.N) JP
பி.கே.சாமி அஸோஸியட் பிரைவேட் லிமிட்டட்
இல.162, மே பீல்ட் ரோட்,
கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13

கொழும்பு தொலைபேசி இல - 01342463-342464-344831-344832
- FAX-00941342464
நுவரெலியா தொலைபேசி இல - 052-2508-3093-3570-3336
- FAX-0094523093

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில்
அமைந்த காண்டம் எனும்
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை
**ரிஷி. S. மணி**
மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030

## ஆயுள் கண்ணாடி ஜாதகம்

உங்கள் ஜாதக அமைப்பின்படி 9ம் வீட்டில் எந்த கிரகம் நிலை பெற்றுள்ளது. அதன் முன் விளைவு பின் விளைவு எப்படி அமையும்? கணவன் மனைவி எப்படி அமைய வாய்புள்ளது? அத்துடன் மாத வாரி பலனுடன் நீங்கள் எழுதி எடுக்க இந்த பாரத்தை பூர்த்தி செய்து ரூ.1500 மணி ஆடர் செய்தால், பிற ஜோதிடர் உதவியின்றி நீங்கள் உங்கள் வீட்டில் இருந்தபடியே ஜாதகத்தை கண்ணாடி போல் தெரிந்து கொள்ளலாம்.

வெளிநாட்டவர்கள் ரூ.2750 அனுப்பவும்

முழுப்பெயர்-
பிறந்ததிகதி-
நேரம்.................... காலை-மாலை.............
பிறந்த மாவட்டம்.....................
ஆணா பெண்ணா..........................
தேவை......................

முகவரி: ஜோதிட மாந்திரிக சக்கரவர்த்தி
டாக்டர் பி. கே. சாமி [J.D.G.A.N.]J.P.
பி. கே. சாமி அஸோஸியட் பிரைவேட் லிமிட்டட்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13
கொழும்பு தொலை பேசி இல. 01-342463-342464-344831-344832
நுவரெலியா தொலை பேசி இல-052-2508-3093-3336-3570




படிப்பகம்

"சாண் ஏற முழம் சறுக்கும்" இந்த பழ மொழி அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு கச்சிதமாகப் பொருந்தும்.

ஒற்றையாட்சிக்கு பதிலாக பிராந்தியங்களின் ஒன்றியம் என்று கொண்டுவந்து, அதிகாரத்தை பரவலாக்கப்போவதாக அரசாங்கத்தின் தீர்வுத்திட்ட யோசனையில் சொல்லப்பட்டது.

அதிகாரப் பகிர்வு, அதிகாரப் பரவலாக்கல் என்ற இரண்டும் வேறு வேறானவை. இதனைப் புரிந்து கொள்ளாமல் பலர் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

அதிகாரப்பகிர்வு என்றால் இரண்டு இனங்கள் ஒரு நாட்டில் இருப்பதாக வைத்துக்கொண்டால் கூட்டாச்சிமுறையில் அதிகாரத்தை தமக்குள் பங்கிட்டுக்கொள்வது.

அரசாங்கம் சொல்லியுள்ள யோசனையில் இருப்பது அதிகாரப் பரவலாக்கம்.

அதாவது வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு மட்டுமல்லாமல், சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணங்களுக்கும் மத்தியில் குவிந்துள்ள அதிகாரங்களை பரவலாக்குவது.

சிக்கல் இங்கேதான் ஆரம்பம். வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாக உள்ள தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்சனையும், சிங்கள மக்களுக்கு உள்ள பிரச்சனையும் அடிப்படையில் வேறுபட்டவை.

தமிழ் மக்கள் தாம் ஒரு தேசிய இனம் என்றரீதியில், மொழி ரீதியாக, இனரீதியாக, தாம் வாழும் நிலரீதியாக ஒடுக்கப்படுவதை, புறக்கணிக்கப்படுவதை, இன அழிவுக்கு உள்ளாக்கப்படுவதை தடுத்து நிறுத்தவே போராட ஆரம்பித்தனர்.

தாம் ஒரு தேசிய இனமாக தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டுமானால், தமிழ் மக்களுக்கு அடிப்படையான சில உத்தரவாதங்கள் தேவைப்படுகின்றன.

1. பாதுகாப்பு 2. பாரம்பரிய பிரதேசப் பாதுகாப்பு, 3. மொழி, கலாசார வளர்ச்சிக்குரிய வாய்ப்புக்கள். 4. பாரம்பரிய பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சி.

இவற்றுக்கான உத்தரவாதங்கள் பேச்சளவிலோ, ஏட்டுச் சுரைக்காய் வடிவிலோ அல்லாமல் திட்டவட்டமான அதிகாரங்களாக இருக்க வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசை.

இதே உத்தரவாதங்களை மத்திய அரசு சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணங்களுக்கு வழங்கத் தேவையில்லை. அதாவது அவசியமில்லை.

வடக்கு-கிழக்கில் காணி-காணிப்பகிர்வு விடயத்தில் முடிவெடுக்கும் அதிகாரம் வடக்கு-கிழக்கு பிராந்திய அரசிடம் இருக்க வேண்டும் என்பது ஒரு அரசியல் கோரிக்கை. காரணம் என்ன? வடக்கு-கிழக்கு திட்டமிட்ட குடியேற்றத்தால் பறிபோய் விடக்கூடாது என்ற நோக்கம். அந்த நோக்கம் ஏன் வருகிறது? தேசிய இனமாக தமிழ் மக்கள் வாழ வேண்டுமானால் தொடர்ச்சியான நிலப்பரப்பில் அவர்கள் வாழ்ந்திருக்க வேண்டும்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். நிலம் இருந்தால்தான் ஒரு இனம் தனது கால்களை ஊன்றி நின்று அழியாமல் வாழலாம். எனவேதான் நிலம் தொடர்பான அதிகாரம் மிக முக்கியமான தேவையாக இருக்கிறது.

ஒரு தேசிய இனத்திற்கு மொழியும், நிலமும் இரு விழிகள் போன்றவை. இரண்டின் பாதுகாப்பையும் உத்தரவாதப் படுத்தாத தீர்வு கிடைக்குமானால், அது கண்களை விற்று சித்திரம் வாங்குவதற்குச் சமம்.

இந்த விடயம் சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணங்களைப் பொறுத்தவரை ஒரு சின்னப் பிரச்சனைதான்.

நிலப் பகிர்வு அதிகாரம் மத்திய அரசிடம் இருந்தால் என்ன? மாகாண அரசிடம் இருந்தால் என்ன? சிங்கள மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் எப்போதும் பத்திரமாகத்தான் இருக்கும்.

காரணம், மத்திய அரசு சிங்கள மக்களது பிரதிநிதிகளை பெரும்பான்மையாகக் கொண்டதாகத்தான் இருக்கும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறையை, முழுநாட்டுக்கும் பொதுமைப் படுத்தியதால் சிங்கள மக்களுக்கு பெரிய பலன் ஒன்றும் ஏற்படவில்லை. அந்த மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டாலும் சரி, வழங்கப்படாவிட்டாலும் சரி சிங்கள மக்களது தேசிய இனத்தன்மைக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணங்களில் இருந்த முதலமைச்சர்கள்தான் அதிகாரம் வேண்டும் என்று குரல்கொடுத்தார்களே தவிர, அங்குள்ள மக்களுக்கு அது ஒரு பிரச்சனையாகத் தெரியவில்லை.

முதலமைச்சர்கள் சிலர் அதிகாரம் போதாது என்று குரல் கொடுத்ததும்கூட அவர்கள் சார்ந்த கட்சிகளின் அரசியல் நலன் சம்பந்தப்பட்டதாகவே இருந்தது.

மத்தியில் வேறு ஒரு கட்சி ஆளும் கட்சியாகவும், மாகாணத்தில் வேறு ஒரு கட்சி ஆளும் கட்சியாகவும் இருக்கும்போது அக்கட்சிகளின் அரசியல் போட்டிகளின் பிரதிபலிப்பாகவே மாகாண சபைக்கு அதிகாரம் கேட்கும் பிரச்சனை எழுப்பப்பட்டது. இரண்டிலும் ஒரே கட்சி பதவியில் இருந்தால், கிடைத்துள்ள அதிகாரம் மெத்த அதிகம் என்று மாகாண சபை சொன்னாலும் ஆச்சரியமில்லை.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் வடக்கு-கிழக்கு மாகாண சபை கூடுதல் அதிகாரம் கேட்கும்போது, இவர்கள் மட்டும் போதாது என்கிறார்களே என்று சிங்கள மக்கள் ஆச்சரியப்படக்கூடும்.

அப்படியான சந்தர்ப்பத்தில் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் நியாயமான கோரிக்கை பிரிவினைக் கோரிக்கையாக, நாட்டை பிரிக்கும் நோக்கத்துடன் அதிகாரங்களை கைப்பற்றும் திட்டமாக வியாக்கியானம் செய்யப் படலாம்.

இந்தக் குழப்பங்களும், சிக்கல்களும் உருவாகக் காரணம் வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு உரிய தீர்வை நாடு முழுவதற்கும் பொருத்திவிடுவதுதான்.

சிங்கள மக்களுக்கும் எத்தனையோ பிரச்சனைகள் இருக்கின்றன. பொருளாதாரப் பிரச்சனை அதில் முதன்மையானது. வேலை இல்லாத் திண்டாட்டம் தீர்க்க முடியாத பிரச்சனையாக இருக்கிறது. இவ்வாறான பிரச்சனைகளும் தேசியப் பிரச்சனைகள்தான்.

இவ்வாறான பிரச்சனைகளைச் சரியாகத் தீர்க்கத்தவறியதால்தான் ஜே.வி.பி.போன்ற இயக்கங்கள் உருவாகும் சூழ்நிலை தோன்றியது. சிங்கள இளைஞர்கள் ஆயுதங்களை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

சிங்கள மக்கள் எதிர்நோக்கும் பொதுப் பிரச்சனைகளுக்கு மாகாண சபை முறை மூலமோ, பிராந்திய சபை மூலமோ, சமஷ்டி ஆட்சி முறையாலோ தீர்வுகாண முடியாது.

இனப்பிரச்சனைக்கு தீர்வாக முன்வைக்க வேண்டிய கூட்டாச்சித் தத்துவத்தை சிங்கள மக்களது பிரச்சனைக்கும் தீர்வாக முன்வைப்பது கேலிக்கூத்துத்தான்.

லொறியின் உதிரிப்பாகத்தை சைக்கிளுக்குப் பொருத்தி பழுதுபார்க்கும் முயற்சி போன்றதுதான் அது.

ஏன் இந்த முயற்சி? சிங்கள மக்களை திருப்திப்படுத்திக்கொண்டுதான் வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கான தீர்வை வழங்கவேண்டும் என்று தென்னிலங்கை ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர்.

வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு என்று தனியாக ஒரு தீர்வை முன்வைத்தால் பேரினவாதிகள் சிங்கள மக்களை குழப்பிவிடுவார்கள்.

வடக்கு-கிழக்கை பிரிக்கக்கூடிய தீர்வை தூக்கிக் கொடுக்கிறார்கள். அதில் என்னமோ இருக்குது. ஏதேதோ நடக்கப்போகிறது என்றெல்லாம் பேரினவாதிகள் பிரசாரம் செய்வார்கள்.

அதனை முறியடிக்க என்ன செய்யலாம்? வடக்கு-கிழக்குக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் தானே. இதோ நீங்களும் பரிசீலித்துப் பாருங்கள் என்பதுபோல தீர்வைப் பொதுவாக்கிவிட்டால் பிரச்சனையில்லையல்லவா.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

அதனைத்தான் காலம் காலமாக செய்து கொண்டிருக்கிறார்கள். செய்வதற்கும் முயல்கிறார்கள்.

ஒரு வீட்டில் இரண்டு பிள்ளைகள். ஒரு பிள்ளைக்கு புற்றுநோய். இன்னொரு பிள்ளைக்கு தலையிடி. நோயைத்தீர்க்க இரண்டு பிள்ளைகளுக்கும் ஒரே வைத்தியம் உதவாது. புற்றுநோய்க்கு விசேஷ வைத்தியம்தான் தேவை. விசேஷ கவனிப்பும் அவசியம். மாத்திரைகளும் நல்ல காத்திரமாக கொடுக்கவேண்டும். தலையிடி நோய் உள்ள பிள்ளைக்கு அந்த மாத்திரைகள் தேவையில்லை. கொடுக்கவும் கூடாது.

ஆனால் மருத்துவர் என்ன நினைக்கிறார் என்றால், புற்றுநோயுள்ள பிள்ளைக்கு அதிக மாத்திரைகள் கொடுப்பதாக தலையிடி உள்ள பிள்ளை நினைத்துவிடக்கூடாதே என்று பயப்படுகிறார். அதனால் புற்றுநோய்க்கு கொடுக்கும் மாத்திரைகளை தலையிடிக்காரனுக்கும் கொடுத்துவிட்டு, 'விழுங்கிப்பார், அப்படி ஒன்றும் விசேஷமில்லை. இதனைப் போட்டால் புற்றுநோய்தான் தீரும். அவன் ஒன்றும் அசுரன்போல பலசாலியாகி விடமாட்டான்" என்று நம்பிக்கை கொடுக்கிறார்.

அந்த மருத்துவர்போலவே தென்னிலங்கை ஆட்சியாளர்களும் நடந்துகொள்கின்றனர்.

உண்மையைச் சொல்லிவிட்டால் இந்தப் பிரச்சனையெல்லாம் கிடையாது. ஆனால் அதற்கு 'ரிஸ்க்' எடுக்கவேண்டும். அடுத்த தேர்தலில் தோற்றாலும், வெற்றி பெற்றாலும் எதுபற்றியும் கவலையில்லை, எதிர்காலத்திலும் சிக்கல், மோதல் வராத தீர்வுதான் அவசியம் என்று துணியவேண்டும்.

ஆனால், அதற்கு யாருமே தயாராக இல்லை. இன்றைய ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு கூட்டாச்சி முறைதான் என்பது நன்கு தெரியும்.

விஷயம் என்னவென்றால் இனப்பிரச்சனைக்கான தீர்வு விடயத்தில் இதுவரை ஆட்சிக்கு வந்த சிங்களத் தலைவர்களிடம் இரண்டு விதமான தீர்வுகள் இருந்தன.

**ஒன்று, சரியான தீர்வு.**

**இரண்டு, சந்தர்ப்பத்துக்கு ஏற்ற தீர்வு.**

ஆட்சிக்கு வருவது, அல்லது ஆட்சியைத் தொடர்ந்து தம் கையில் வைத்திருப்பது பிரதானமான பிரச்சனையாக மாறும்போது, எந்தவொரு தலைவரும் 'ரிஸ்க்' எடுக்க விரும்புவதில்லை. எனவே, சந்தர்ப்பத்துக்கு ஏற்ற தீர்வுதான் முன்வைக்கப்படும் நிலை தோன்றுகிறது.

இப்போது ஜனாதிபதி சந்திரிகாவும் சரியான தீர்வா, சந்தர்ப்பத்துக்கு ஏற்ற தீர்வா? என்பதை தீர்மானிக்கும் கட்டத்துக்குள் சென்றுவிட்டார்.

என்ன முடிவு செய்யப்போகிறார்? ஊகங்களில் இருந்து பேசாமல் நடந்துவரும் நிகழ்ச்சிகளைக் கவனித்து கணிப்பிடுவதே முறையாகும்.

அவ்வாறு கணிப்பிடும்போது, தாம் முன்வைத்த அரசியல் தீர்வு யோசனைகளில் உள்ள விஷயங்களில்கூட ஜனாதிபதி சந்திரிக்கா ஊசலாடத் தொடங்கிவிட்டார் என்றுதான் தோன்றுகிறது.

சமீபத்தில் ஆறு தமிழ் கட்சிகளையும் அழைத்து ஜனாதிபதி சந்திரிக்கா பேச்சு நடத்தியிருந்தார்.

ஏற்கெனவே ஐந்து தமிழ் கட்சிகள் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தமது நிலைப்பாட்டை ஒன்றாக முன்வைத்துள்ளன.

ஆனால், ஜனாதிபதி தமிழ் கட்சிகளை அழைத்துப் பேசியபோது கேட்ட கேள்வி, 'சொக்ஸியின் யோசனை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?' என்பதுதான்.

பீம்சிங் என்ன இது புதுக்குழப்பம்? என்று கேட்காத குறைதான் பாக்கி.

யார் அந்த சொக்ஸி? ஐ.தே.கட்சியின் மூத்த உறுப்பினர். முன்னாள் அமைச்சர்.

அவர் எங்கே இதில் வருகிறார்? பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் ஐ.தே.கட்சி சார்பாக கலந்துகொள்ளும் பிரதிநிதிகளில் ஒருவர்.

சொக்ஸி என்ன சொன்னார்? பெரியதாக ஒன்றும் சொல்லவில்லை. மாற்றுத் திட்டம்கூட வைக்கவில்லை. பேச்சோடு பேச்சாக ஒரு கருத்தைச் சொன்னார். ஒற்றையாட்சி முறையை மாற்றாமல் சில திருத்தங்களை செய்ய முடியும் என்று கூறினார்.

அது என்ன திருத்தம்? தற்போதைய அரசியலமைப்பு சட்டத்தில் ஷரத்து 2. இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடு என்பதை கூறுகிறது. ஷரத்து 76. பாராளுமன்றத்துக்கு சட்டமியற்றும் அதிகாரத்தை உறுதிப்படுத்துகிறது.

சொக்ஸியின் கருத்துப்படி இலங்கை ஒற்றையாட்சி நாடு என்பதில் மாற்றம் செய்யாமல், பாராளுமன்றத்தின் சட்டம் இயற்றும் அதிகாரத்தில் சில வரையறைகளைக் கொண்டு வரலாம். மாகாண சபைகளின் அதிகாரங்களை பாதிக்கக்கூடிய சட்டங்களை பாராளுமன்றம் நிறைவேற்றாமல் தடுக்கக்கூடிய வகையில் அந்த வரையறைகள் இருக்கலாம் என்று சொக்ஸி கருதுகிறார்.


ஆனால், ஒற்றையாட்சி முறை நிலவும் போது மாகாண சபைக்கும், மத்திய அரசுக்கும் இடையே அதிகார விடயங்களில் பிரச்சனை ஏற்பட்டால், அதனைத் தீர்க்கும் பொறுப்பு உயர் நீதிமன்றத்திடம் போகும். அப்போது உயர் நீதிமன்றம் மத்திய அரசின் பக்கம்தான் நிற்கும். நிற்கவும் வேண்டும்.

ஆனால் கூட்டாச்சி முறையில் என்றால், உயர் நீதிமன்றம் வேறு முறையில் பிரச்சனையை அணுக வேண்டியிருக்கும்.

இரண்டு அரசுக்களுக்கிடையே ஏற்பட்டுள்ள பிரச்சனையாகக் கருதி, யார் பக்கம் நியாயம் என்று நடுநிலை நின்று நோக்க வேண்டியிருக்கும். அதன்படி தீர்ப்புச் சொல்ல வேண்டியிருக்கும்.

# அரசியல் தீர்வு சதுரங்க நடுவிலே, தமிழர் பலமோ பலவீன வடிவிலே

நாரதர்



ஒற்றையாட்சியின் கீழ் ஒரு அரசுதான் இருக்கும். மாகாண சபை என்பவை நிர்வாக அலகுகளாக கொள்ளப்படுமே தவிர, அரசாங்கமாக கருதப்படமாட்டாது.

அதனால்தான் வடக்கு-கிழக்கு மாகாணசபை தன்னை 'மாகாண அரசு' என்று கூறக்கூடாது என்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா பிரச்சனை கிளப்பியிருந்தார்.

எனவே-சொக்ஸியின் யோசனை நிரந்தர உத்தரவாதமான தீர்வுக்கு வழி சொல்லவில்லை. அதுமட்டுமல்ல, சொக்ஸி சொன்னது அவரது சொந்தக் கருத்தே தவிர, ஐ.தே. கட்சியின் கருத்தும் அல்ல.

என்றாலும்கூட, சொக்ஸியின் யோசனையை ஜனாதிபதி சந்திரிக்காவும், நீதியமைச்சர் பீரிசும் ஒரு திருப்புமுனையான கருத்துப்போல எடுத்துக்கொண்டனர்.

ஒற்றையாட்சியை மாற்றினால் எதிர்ப்பு அதிகரிக்குமோ என்று அவர்கள் பயப்படுகிறார்கள். தாம் முன்வைத்த 'பிராந்திய ஒன்றியம்' என்ற விடயத்தில்கூட அவர்கள் ஊசலாடத் தொடங்கிவிட்டார்கள். அதனை கைவிட ஒரு வாய்ப்பான யோசனை தேடியவர்களுக்கு சொக்ஸியின் யோசனை வரப்பிரசாதம் மாதிரிக் கிடைத்துவிட்டது.

ஆக, இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு தேடுவதைவிட, சிங்கள மக்கள் மத்தியில் தமது வாக்கு வங்கிகளை பாதிக்காத ஒரு தீர்வை தேடும் நிலைக்கு தற்போதைய அரசாங்கமும் வந்திருக்கிறது.

தமிழ் கட்சிகளின் நிலைதான் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

சொக்ஸி சொன்ன யோசனையை ஆராயும் அரசாங்கம், தமிழ் கட்சிகள் முன்வைத்த யோசனைகளைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

தமிழ் கட்சிகள் இப்படி யோசனை தெரிவித்துள்ளன. உங்கள் அபிப்பிராயம் என்னவென்று ஐக்கிய தேசியக் கட்சியைக் கூப்பிட்டு ஜனாதிபதி கேட்கவும் இல்லை.

ஆக, தீர்வு இனப்பிரச்சனைக்கும் அல்ல, தீர்வு யோசனையில் தமிழர் தரப்புக்கு செவி கொடுக்கப்படவும் இல்லை.

சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த, சிங்கள மக்கள் தரப்பிலிருந்து சொல்லப்படும் யோசனைகளை முன்வைத்து, அதனை ஒரு தீர்வாகக் காட்டும் முயற்சிதான் நடக்கிறது.

தமிழ் கட்சிகளும் தமது நிலைப்பாட்டை முன்வைத்து வாதிடுவதைவிட, ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே மத்தியஸ்தர்களாக மாறியுள்ளன.

ஆளும்கட்சி சொல்வதை எதிர்க்கட்சிக்கும், எதிர்கட்சி சொல்வதை ஆளும்கட்சிக்கும் சொல்லிக்கொண்டிக்கும் மத்தியஸ்தர்களால், தமது நிலைப்பாட்டை முன்னிறுத்தி போராட முடியாமல் போய்விட்டது.

இதற்கிடையே வடக்கு-கிழக்கு இணைப்பும் ஒரு முக்கிய பிரச்சனை. உடனடியாக முடிவு செய்யப்படவேண்டிய பிரச்சனை அதுதான்.

ஆனால், ஒற்றையாட்சி விவகாரம் மீண்டும் கிளம்பியதால் வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரம் பின்தள்ளப்பட்டு விட்டது.

வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பு விடயத்தில் ஜனாதிபதி சில யோசனைகளை முன்வைத்துள்ளார்.

அதிலே பிரதானமான யோசனை இதுதான். "வடக்கையும், திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களையும் இணைத்து ஒரே பிராந்தியம். முஸ்லீம் மக்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் ஒரு பிராந்திய அலகு. அம்பாறைத் தொகுதி மட்டும் தனியாக எடுக்கப்பட்டு சிங்கள மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுவிடும்.

இந்த யோசனைக்கு கூட்டணி காதும் காதும் வைத்தமாதிரி சம்மதம் தெரிவித்து விட்டது. ஏனைய தமிழ் கட்சிகள் யோசித்துக் கொண்டிருக்கின்றன.

இப்போதுள்ள முக்கிய பிரச்சனை, விட்டுக்கொடுக்காமல் தமிழ் கட்சிகள் பேசினாலும்கூட, அதற்கு செவிகொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு இல்லை என்பதுதான்.

நிர்ப்பந்தம் கொடுக்கக்கூடிய பலம் தமிழர் தரப்பில் பலவீனமாகிவிட்டது. புலிகளின் பின்னடைவும், அரசியல் ரீதியில் போராட தம்மை பலப்படுத்தாத தமிழ் கட்சிகளின் நிலையும் **தமிழர் தரப்பில்** ஏற்பட்டுள்ள பலவீனங்கள்.

இந்தப் பலவீனங்கள் மத்தியில் தமக்கு சாதகமான ஒரு தீர்வை திணித்துவிடத்தான் அரசாங்கம் முயலும்.

அரசியல் தீர்வு சதுரங்க நடுவிலே. தமிழர்களின் பலமோ பலவீன வடிவிலே.

தமிழர் தரப்பில் உள்ள அரசியல் கட்சிகள் இப்போது செய்யக் கூடியது என்ன? உரிய தீர்வைக் காணமுடியாவிட்டாலும், குறைந்தபட்ச திட்டங்களுக்கு சம்மதம் தெரிவித்து இறங்கிச் செல்லாமல் இருப்பதான். அப்படி இறங்கிச் செல்லத் தொடங்கினால், அடுத்து வருபவர்கள்கூட மேலே ஏறிப்போய் நின்று பேசமுடியாமல் போய்விடும்.

விட்டுக்கொடுக்காமல் நிற்கவேண்டியதில் முதன்மையானது 'ஒற்றையாட்சிக்கு உடன்பட மறுத்தல்'.

## அதிரடி அய்யாத்துரை



**யா**ழ்ப்பாணத்தில் பல வீடுகளுக்கு கூரையே இல்லை. அதனால் வானமே எல்லை. ஆனால் பாருங்கோ, சொந்த வீடுகளுக்கு திரும்புவதில் முந்திக்கொண்டவர்கள் சிலருக்கு இல்லையாம் தொல்லை. பக்கத்து வீடு ஓடுகளைத் தங்கள் வீட்டு ஓடுகளாக மாற்றிப்போட்டினமாம். கொஞ்ச நாள் போனால் ஓடுகள் மட்டுமல்ல, ஒன்றும் மிஞ்சாது. அது தெரிஞ்சதான் கொழும்பில் இருந்தும் சிலர் கப்பலில் ஏறி ஓடுகினம்.

ஒரு தாய். மூன்று பெண்பிள்ளைகள். கொழும்பு வருவதற்கு ரெண்டு எழுத்தாருக்கு கொடுத்த தொகை மூன்றரை இலட்சம். பிள்ளைகளுக்கு தலா ஒரு இலட்சம். அம்மாவுக்கு 50 ஆயிரம்.

தமிழ் கட்சிகள் ஒன்றாகச் சென்று அதிகாரமுடையவரைச் சந்திச்சவையல்லோ. சந்திப்பில் பேசப்பட்டதையெல்லாம் வரிக்கு வரி பத்திரிகைகளுக்கு சொன்னார்களாம் இரண்டு பிரமுகர்கள். பத்திரிகைகளுக்கு சொல்ல வேண்டாம் எண்டு சந்திப்பின்போது சொல்லப்பட்ட விஷயங்களையும் கசியவிட்டுப் போட்டினமாம். அதிகார மட்டத்தில் கசப்பு ஏற்பட்டு விசாரிக்கப்பட்டதாம். தாம் மட்டுமே துணிச்சலாக கதைத்தது போல கூட்டான கட்சி பிரமுகர் ஒருவரும் செய்தி கொடுத்தாராம். கதைவிடுவதில் கெட்டிக்காரர்தானே.

தமிழ் கட்சிகளுடன் சேரமாட்டோம். எம் வழி தனி வழி எண்டு கூட்டான கட்சி அடம்பிடிச்சக்கொண்டிருந்தது தெரிந்த விஷயம்தானே. அதிகாரத் தரப்பு அழைப்பு விடுத்தவுடன் ஏனைய தமிழ் கட்சிகளுடன் சேர்ந்து ஆஜரானது கூட்டான கட்சி. பார்த்தியளோ, தமிழ் கட்சிகளின் ஒற்றுமையும், பிரிவினையும்கூட தமிழ் கட்சிகளின் கையில் இல்லை. தமிழ் கட்சி பிரமுகர் ஒருவர் சொன்னது இது: "நாங்கள் எத்தனைதரம் வெற்றிலை பாக்கு வைச்சு அழைக்காத குறையாகக் கூப்பிட்டோம். வரவேயில்லை. மேலிடம் சொன்னவுடன் பெட்டிப் பாம்பாக வந்து எங்களுடன் ஒட்டிக் கொண்டினம்." என்றார்.

கிழக்கில் சிங்கம் போன்ற தலைவர்கள் இருந்தும், அவர்கள் பல்லாயிரம் வாக்குகள் பெற்றிருந்தும்கூட ஜனாதிபதி சந்திப்பு தூதுக் குழுவில் கூட்டான கட்சியில் அவர்கள் காணப்படவில்லை. அரசியல் தீர்வில் முக்கிய பிரச்சனை, வடக்கு-கிழக்கு இணைப்பு. சந்திப்பில் கலந்து கொண்ட கூட்டான கட்சி தூதுக்குழுவில் கிழக்கின் பிரதிநிதிகள் மிஸ்ஸிங். ஏனைய கட்சிகளைப் பொறுத்தவரை கிழக்கில் இம்முறை வெகுஜனப் பிரதிநிதிகள் இல்லை. கூட்டான கட்சிதானே கொண்டுபோய் பலம் காட்டியிருக்க வேணும்.

**யா**ழ்-புனரமைப்பு சபையில் மருந்துக்கும் ஒரு தமிழர் கிடையாது. யாழ்ப்பாண பண்பாடு கட்டிடக் கலை என்பவற்றை மீறாமலும், மாறாமலும் கட்டிடங்கள் கட்டப்படும் எண்டு மேலிடத்து வாக்குறுதி. யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருத்தர்கூட புனரமைப்பு சபையில் கிடையாது. மேலிடத்தில் சொல்லப்பட்டது யாழ்ப்பாணம் பற்றியோ, 'யாப்பா பட்டுன' பற்றியோ எண்டு எனக்கொரு சந்தேகம்.

கட்டுப்பாட்டுப் பகுதியில் ரெண்டு எழுத்தார் 'கைவீசம்மா கைவீசு' ஸ்ரைலில் நடமாடுகினமாம். முக்கியமான தமிழ் அதிகாரிகளையும் சந்தித்து அன்போடு மிரட்டி நலன் விசாரிச்சவையாம். "மத்தளம் போலாச்சுது எங்கள் நிலை" எண்டு கவலைப்படுகினம் சிலர்.

சென்றனர், கண்டனர், வந்தனர், எண்டு யாழ் நிலை தொடர்பாக செய்திகள் சொல்லப்படுகுது. அதிகார தரப்பில் இருந்து சென்றனர், கண்டனர், வந்தனர் என்பது சரிதான். என்ன செய்தனர்? அரிசி விலையைக் குறைத்தனரா, பருப்பு விலையை வீழ்த்தினரா, விளக்கு வைத்து வெளிச்சம் பாக்க மண்ணெண்ணெய் விலையை என்றாலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனரா? இல்லையே! அதைச் செய்யலாமே.

தமிழ் கட்சிகள் தலைகீழாக நிண்டு கோரிக்கைவிட்டாலும் பச்சைக் கட்சி தன் முடிவில் மாறப்போவதில்லை. கட்சிப் பிரதிநிதிகளுடன் தேநீர் கொடுத்து சிரிச்சுப் பேசினாலும், தீர்வு தொடர்பான பொறுத்த நேரத்திலை பச்சைக்கட்சிக்கு வாய்க்குள் புட்டுத்தான் இருக்கும்.

சம்பத்தில் படித்த கவிதையில் 'அடடே கருத்து புதுசா இருக்கே' என்று நினைக்கவைத்த கவிதை. நீங்களும் நினைக்கக்கூடுமோ?

**காளானே போற்றி**

"நேற்று பெய்த
மழையில் இன்று
முளைத்த காளானே-என்று
தூற்றாதீர்கள்.
ஒரே நாளில் முழுவளர்ச்சி!
அதன் முன்னேற்றத்தையும்
முயற்சியையும்
போற்றுங்கள்."

(வைரச்சந்திரன்)

www.padippakam.com

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

# குண்டு ஒன்று இலக்கு மூன்று!

அற்புதன்-எழுதுவது

## இலக்குகள் மூன்று

கொழும்பில் பாரிய குண்டுத் தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிட்டது ஈரோஸ்.

திட்டம் மிகப் பயங்கரமானது.

ஒரே நேரத்தில் பல இலக்குகள்.

ஜனாதிபதி மாவத்தையில் உள்ள ஜனாதிபதி மாளிகை, தலைமைத் தபால் நிலையம், பொலிஸ் தலைமைக் காரியாலயம் மூன்றும்தான் இலக்குகள்.

மூன்று இலக்குகளையும் ஒரே நேரத்தில் தகர்க்கக்கூடியவகையில், மூன்றுக்கும் பொதுவான இடத்தில் குண்டு வெடிக்க வேண்டும்.

வெடிமருந்து நிரப்பப்பட்ட லொறியை கொண்டு சென்று நிறுத்திவிட்டு வந்து விட்டால் போதும். திட்டம் வெற்றியாகி விடும்.

மூன்று இலக்குகள் என்பதால் பாரிய குண்டுவெடிப்பாக இருக்கவேண்டும். அதனால் முதன் முதலாக பெருமளவான வெடிமருந்தை ஈரோஸ் பயன்படுத்தியது.

மொத்தம் 250 கிலோ வெடிமருந்து லொறியில் நிரப்பப்பட்டது.

ரஞ்சன்-குட்டி ஆகியோர் லொறியில் செல்ல வேண்டும். தலைமைத் தபால் நிலையம் முன்பாக உள்ள வாகனத் தரிப்பிடத்தில் லொறியை நிறுத்திவிட்டு இருவரும் வந்துவிடவேண்டும்.

பகல் நேரம் சரியாக 11.05க்கு லொறி குறிப்பிட்ட இடத்திற்கு சென்றுவிட வேண்டும்.

சரியாக 11.45 மணிக்கு வெடிக்கக் கூடிய வகையில் குண்டு தயார் செய்யப் பட்டிருந்தது.

குண்டுவெடிப்பின் பின்னர் கொழும்பில் தேடுதல் நடிவடிக்கை தீவிரமாகும்.

கொழும்பில் ஈரோஸ் நடவடிக்கைகளுக்கு துடிப்பான பங்காற்றியவர் குட்டி.

அதனால் குட்டியை பாதுகாக்க வேண்டும். மாட்டிக்கொள்ள விட்டுவிடக் கூடாது என்பதும் ஈரோஸ் தலைமையின் அக்கறையாக இருந்தது.

குண்டுலொறியை கொண்டுசென்று விட்டதும் குட்டி ஒரு ஓட்டோ பிடித்துக் கொண்டு ரயில் நிலையம் சென்று,



யாழ்ப்பாணம் போகவேண்டும் என்பது கட்டளை.

## இடையிலே சிக்கல்

11.07.85 அன்று குண்டு லொறியில் இருவரும் ஏறினார்கள்.

லொறி கொட்டாஞ்சேனை செல்லமஹால் தியேட்டர் அருகே செல்லும்போது கடிகாரத்தில் நேரம் பார்த்தார் குட்டி.

11.05க்குத்தானே குறிப்பிட்ட இடத்துக்கு செல்லவேண்டும். அதற்கு இன்னமும் போதிய நேரம் இருந்தது.

அதனால் செல்லமஹால் தியேட்டருக்கு அருகாமையில் லொறியை ஓரம் கட்டி நிறுத்தச் சொன்னார் குட்டி.

லொறியில் இருந்து இறங்கி தொலைபேசி உள்ள ஒரு இடத்திற்கு சென்று, கொழும்பில் இருந்த தமது சகாவுக்கு போன் செய்தார்.

"எல்லாம் சரி. 11.45க்கு ரயிலில் ஏறி விடுவேன்" என்று சொல்லிவிட்டு குட்டி திரும்பினார்.

இதற்கிடையே லொறியில் இருந்த ரஞ்சன் ஒரு காரியம் செய்தார்.

குட்டியும் போய்விட்டார். நேரமும் இருக்கிறது. அருகில் உள்ள தனது நண்பரை எட்டிப்பார்த்துவிட்டு வரலாமே என்று நினைத்து லொறியில் இருந்து இறங்கிச் சென்றுவிட்டார்.

அப்போது அவ்வழியாக வந்தார் போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த ஒரு பொலிஸ்காரர். அந்த இடத்தில் லொறியை நிறுத்தக்கூடாது. எனவே லொறியை நோக்கி அவர் செல்லவும், ரஞ்சன் வந்து லொறியில் ஏறவும் சரியாக இருந்தது.

பொலிஸைக் கண்டதும் ரஞ்சனுக்கு பதட்டம் ஏற்பட்டுவிட்டது. ரஞ்சனுக்கு அனுபவமும் போதாது. இப்படி ஒரு சிக்கல் வரும் என்றும் எதிர்பார்க்கவில்லை. குட்டியையும் காணவில்லை. பதட்டம் அதிகரித்தது.

பொலிஸ்காரர் கேட்ட கேள்விகளுக்கு ரஞ்சனால் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை. தடுமாறினார்.

பொலிஸ்காரருக்கு சந்தேகம் தொட்டு விட்டது. ரஞ்சனுக்கு சிங்களம் தெரியும். ஆனாலும் அவரது பேச்சில் இருந்து தமிழ் ஆள் என்பதும் தெரிந்துவிட்டது.

அதேநேரம் போன் செய்துவிட்டு லொறியை நோக்கி வந்துகொண்டிருந்தார் குட்டி.

லொறிக்கு அருகில் பொலிஸ்காரர் ஒருவர் நிற்பதைக்கண்டுவிட்டார் குட்டி. மெல்ல நழுவினார். வந்த பஸ் ஒன்றில் தொற்றிக்கொண்டு ரயில் நிலையம் சென்றுவிட்டார்.

ரஞ்சனை விசாரித்த பொலிஸ்காரர் கொட்டாஞ்சேனைப் பொலிசாருக்கு தகவல் அனுப்பினார்.

பொலிஸார் வந்து லொறியை சோதனையிட்டார்கள்.

உள்ளே வெடிகுண்டு.

ரஞ்சன் கைதுசெய்யப்பட்டார்.

குட்டி யாழ்ப்பாணம் செல்லும் ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தார்.

இலங்கை அரசாங்கத்திற்கு அதிஷ்டம். லொறி பிடிபட்டிருக்காவிட்டால் கொழும்பில் முதலாவது பாரிய குண்டுவெடிப்பு நிகழ்ந்திருக்கும்.


...ட்டலில் வெடிகுண்டு ...

இலங்கை அரசு அலுவலகங்களில் வெடிகுண்டு பீதி

பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

7-வது மாடியில்

## நேரக்குண்டு ரயிலில்

இலங்கை அரசாங்கத்திற்கு அப்போது உதவி செய்த நாடுகளில் முக்கியமானது பாகிஸ்தான்.

இராணுவ உதவிகளோடு, இராணுவத்தினருக்கு பாகிஸ்தானில் வைத்து பயிற்சியும் வழங்கியது பாகிஸ்தான்.

பாகிஸ்தான் அதிபராக அப்போது இருந்தவர் சியாவுல்ஹக்.

இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார் சியாவுல்ஹக்.

அவரது விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நடவடிக்கை ஒன்றுக்கு திட்டமிட்டது ஈரோஸ்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் ரயில் வண்டியில் நேரக்குண்டு பொருத்தவேண்டும்.

கொழும்பு மருதானை புகையிரத நிலையத்தை நெருங்கும்போது வெடிக்கக்கூடியதாக நேரக் குண்டு தயார் செய்யப்பட்டது.

காங்கேசன்துறையில் வைத்து நேரக் குண்டை வைக்கும் பொறுப்பு குட்டியிடமும், கண்ணனிடமும் ஒப்படைக்கப்பட்டது.

## பாரிய இழப்பு

மொத்தம் மூன்று குண்டுகள் கொண்டு சென்றனர். இரண்டு குண்டுகளை வைத்து விட்டனர். மூன்றாவது குண்டை வைக்க முடியவில்லை.

மூன்றாவது குண்டுடன் குட்டியும், கண்ணனும் திரும்பிக் கொண்டிருந்தபோது,

அந்த குண்டு வெடித்துவிட்டது.

குட்டியும், கண்ணனும் பலியானார்கள்.

இரண்டு குண்டுகளுடன் புறப்பட்டது ரயில். மருதானை ரயில் நிலையத்தைச் சென்றடைய முன்பாக, வியாங்கொடவில் குண்டுகள் வெடித்துவிட்டன.

4 பேர் பலியானார்கள். 10க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

குட்டியும், கண்ணனும் பலியானது ஈரோசுக்கு பலத்த இழப்பாக அமைந்தது.

இருவருமே கொழும்பு நடவடிக்கைகளின் அச்சாணிகளாக இருந்தவர்கள்.

குட்டியின் சொந்தப் பெயர் விஜயரஞ்சன். யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்தவர்.

இலண்டனில் இருந்த குட்டி 1982 இல் ஈரோஸ் இயக்கத்தில் இணைந்துகொண்டார். இலண்டனில் இருந்து திரும்பிவந்தார்.

கண்ணனின் சொந்தப் பெயர் பார்த்திபன். கொழும்பு தெமட்டகொடயைச் சேர்ந்தவர்.

கண்ணன் ஜெர்மனியில் இருந்தபோது 1982இல் ஈரோஸின் தொடர்பு ஏற்பட்டது. ஈரோசில் இணைந்து ஜெர்மனில் இருந்து திரும்பி வந்தார்.

இருவரது இழப்பின்பின்னர் கொழும்பில் ஈரோஸ் நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்டது.

கொழும்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்குகொண்ட ஈரோஸ் உறுப்பினர்களான கரண், ஐ.பி.ரி. வரதன் போன்றோர் பொலிசாரால் தீவிரமாகத் தேடப்பட்டனர்.

எனவே-கொழும்பில் இருந்து குண்டுத் தாக்குதலை நடத்துவதற்கு பதிலாக வேறு ஒரு திட்டம் பற்றி யோசித்தது ஈரோஸ்.

## யாழிலிருந்து வந்த குண்டு

யாழ்ப்பாணத்தில் சமையல் வாயு விற்பனை செய்வதற்கு பிரபல ஏஜண்டுகளாக இருந்தது முகம்மது அலி, அப்துல் அலி ஏஜன்ட்.

அவர்களிடம் காஸ் சிலிண்டர் ஒன்றை வாங்கினார்கள் ஈரோஸ் இயக்கத்தினர்.


காஸ் சிலிண்டரை கவனமாக வெட்டி உள்ளே வெடிமருந்து நிரப்பப்பட்டது. பின்னர் வெட்டிய தடயமே தெரியாமல் சரிசெய்து சிலிண்டரைத் திருப்பி ஒப்படைத்து விட்டனர்.

காஸ் நிரப்பும்போது சிலிண்டர் வெடிக்கக்கூடியவகையில் கச்சிதமாகத் தயார் செய்திருந்தனர்.

பலநோக்கு கூட்டுறவு சங்க லொறியில் வெற்று காஸ் சிலிண்டர்கள் ஏற்றப்பட்டு கொழும்புக்கு கொண்டுவந்து, காஸ் நிரப்பும் ஆலையில் ஒப்படைக்கப்படும்.

வெற்று சிலிண்டர்களோடு சிலிண்டர்களாக வெடிமருந்து நிரப்பப்பட்ட சிலிண்டரும் வந்து சேர்ந்தது.

# மூன்றுநாள் எரிந்தது பெற்றோல் களஞ்சியம்



காஸ் நிரப்பும் வேலை ஆரம்பித்தது. ஈரோஸ் அனுப்பிய சிலிண்டரும் வந்து சேர்ந்தது.

காஸ் நிரப்பப்பட்டுக்கொண்டிருந்த போது சிலிண்டர் வெடித்தது.

காஸ் நிரப்பும் ஆலைக்கு பலத்த சேதம். மூன்றுக்கு மேற்பட்டோர் பலியானார்கள். இது நடந்தது 18.03.86 இல்.

இந்த நடவடிக்கை வெற்றி பெற்றதால் ஈரோசுக்கு அதே பாணியில் மற்றொரு நடவடிக்கை மேற்கொள்ளும் எண்ணம் ஏற்பட்டுவிட்டது.

## அனுராதபுரத்திற்கு

வி.ஜெ.சரவணபவனுக்கு சொந்தமான பெற்றோல் பவுசர்களில் யாழ்ப்பாண பெற்றோல் நிலையங்களுக்கு பெற்றோல் வருவதுண்டு.

வி.ஜெ.சரவணபவன் ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவர். அதனால் அவரது பவுசர்களுக்கு பெற்றோல் நிரப்பும் ஆலைகளில் தனி மரியாதை.

யாழ்ப்பாணத்தில் நின்ற அவரது பெற்றோல் பவுசர் ஒன்றை தமது பாவனைக்கு தருமாறு வாங்கினார்கள் ஈரோஸ் இயக்கத்தினர்.

பெற்றோல் பவுசருக்குள் வெடிமருந்தை நிரப்பிவிட்டு, மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைத்து விட்டனர்.

தமது பாவனைக்குத்தான் பவுசரை ஈரோஸ் இயக்கத்தினர் கொண்டுசென்றனர். பாவனை முடிந்ததும் பத்திரமாகத் திருப்பித் தந்துவிட்டனர் என்று வி.ஜெ.எஸ் நிறுவனத்தினருக்கு நல்ல சந்தோசம்.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட பெற்றோல் பவுசர் அனுராதபுரம் பெற்றோல் நிரப்பும் ஆலைக்குச் சென்றது.

23.04.86. அநுராதபுரம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குள் வி.ஜெ.எஸ் பெற்றோல் பவுசர் அனுமதிக்கப்பட்டது.

பெற்றோல் நிரப்பப்பட்டுக் கொண்டிருந்தபோது பவுசர் வெடித்தது.

எங்கும் தீ பற்றிக் கொண்டது. உடனடியாகத் தீயை அணைக்க முடியவில்லை.

தொடர்ச்சியாக மூன்று நாட்கள் பெற்றோலியக் களஞ்சியம் எரிந்து கொண்டிருந்தது.

குண்டுவெடிப்பில் 9 பேர்வரை கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

பல கோடி ரூபாய்கள் அரசுக்கு நஷ்டம். பெற்றோலியக் களஞ்சியம் முற்றாக நாசமடைந்தது.

இலங்கையின் மிகப்பெரிய பெற்றோலியக் களஞ்சியம் ஒன்றுக்குள் நடத்தப்பட்ட முதலாவது பெரிய தாக்குதல் அதுதான்.

## கொழும்பில் மீண்டும்..

கொழும்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக ஹென்றி என்னும் தமது உறுப்பினரை அனுப்பிவைத்தது ஈரோஸ்.

அவருக்கு கொடுக்கப்பட்ட முதலாவது இலக்கு கொழும்பு தந்திக் காரியாலயம்.

குண்டுப்பார்சலை கொண்டுசென்று உள்ளே வைத்துவிட்டு வந்துவிடவேண்டியதுதான்.

07.5.86 அன்று காலையிலேயே பார்சலுடன் புறப்பட்டுவிட்டார் ஹென்றி.

ஹென்றிக்கு அதுதான் முதல் அனுபவம். பார்சலோடு சென்ற தன்மீது சந்தேகப் பார்வைகள் வீழுவது மாதிரி ஒரு உறுத்தல்.

சாதாரணமான பார்வைகளும் சந்தேகப் பார்வைகள் போலத்தான் தெரிந்தன.

எனவே-குண்டுப்பார்சலை குறிப்பிட்ட இடத்தில் வைக்காமல், வேறு ஒரு இடத்தில் வைத்துவிட்டு திரும்பிவிட்டார்.

காலை 9.22 மணிக்கு குண்டு வெடித்தது.

தந்திக் காரியலயத்தில் நின்றவர்கள் 12 பேர் பலியானார்கள். 2 பேர் படுகாயமடைந்தனர்.

தந்திக்காரியாலய மேல்மாடி இடிந்தது. வெளிநாட்டு, உள்நாட்டு தந்திச் சேவைகள் பாதிப்படைந்தன.

குறிப்பிட்ட இடத்தில் குண்டு வைக்கப்பட்டு இருந்தால் சேதம் மேலும் பல மடங்காகி இருக்கும்.

## மற்றொரு லொறிக் குண்டு

கொலன்னாவயில் உள்ள பெற்றோல் குதம்மீது குண்டுத்தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிட்டது ஈரோஸ்.

திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஹென்றியிடம்தான் ஒப்படைக்கப்பட்டது.

லொறியில் வெடிமருந்தை நிரப்பிக் கொண்டுசென்று தாக்குவதுதான் திட்டம்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனுக்கு பின்புறம் உள்ள இடத்தில் லொறியை நிறுத்தி வைத்திருந்தனர்.

வெடிமருந்து நிரப்புவதற்காக ஹென்றி லொறியை தயார் செய்து கொண்டிருந்தார்.

வெள்ளவத்தை ரயில்வே பாதையில் காவலுக்கு நின்ற பொலிசாருக்கு ஹென்றியின் நடவடிக்கைகள் சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டன.

என்ன செய்கிறார் என்று பார்க்க பொலிஸார் லொறி அருகே வந்தனர்.

ஹென்றி பதட்டமில்லாமல் பொலிசாரோடு பேசி, அவர்களை சமாளித்து அனுப்பியிருக்கலாம்.

ஆனால், ஹென்றி பொலிசாரைக் கண்டதும் ஓடத்தொடங்கிவிட்டார்.

பொலிசார் துரத்தத் தொடங்கினார்கள். ஹென்றி பிடிபட்டார்.

லொறியில் இருந்த குண்டும் மாட்டியது.

கொலன்னாவ எரிபொருள் குதம் அதனால் தப்பியது.

## டயருக்குள் தந்திரம்

கொழும்புக்குள் யாழ்ப்பாணத்திலிருந்து வெடிமருந்தை கொண்டுவந்து சேர்ப்பதற்கு பல தந்திரங்களைக் கையாண்டது ஈரோஸ்.

சுதா மாஸ்டரும் வேறு சில ஈரோஸ் உறுப்பினர்களும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வெடிமருந்துகளை அனுப்பி வைப்பதில் முக்கிய பங்கு வகித்தனர்.

லொறியில் மேலதிகமாக வைக்கப்பட்டிருக்கும் டயரில் (எக்ஸ்ராவீல்) வெடிமருந்தை நிரப்பியும் பல முறை அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

ரியூப்புக்குள் வெடிமருந்தை அடைத்து, மீண்டும் ரியூப்பை ஒட்டுவார்கள். காற்றில்லாமல் இருந்தால் சந்தேகம் வருமல்லவா. அதனால் குறிப்பிட்டளவான காற்றும் அடித்துவிடுவார்கள்.

15 கிலோ காற்றுத்தான் அடிக்க வேண்டும். சற்று காற்றுக் கூடினாலும் ஆபத்து. வெடித்துவிடும்.

பொலிசார் தீவிரமாக லொறிகளை சேதனையிட்டுத்தான் கொழும்புக்குள் அனுமதிப்பர்.

கொழும்பில் தொடராக பல குண்டு வெடிப்புக்கள் நடைபெற்றதால், லொறிகளில் வெடிமருந்துகள் கொண்டுவரப்படலாம் என்ற சந்தேகம் பொலிசாருக்கு ஏற்பட்டிருந்தது.

எனவே-பலத்த சோதனை நடக்கும்.

ஆனால், காற்றுள்ள டயருக்குள் வெடிமருந்து இருக்கும் என்று சந்தேகம் வரவேயில்லை.

ஜனாதிபதி மாளிகை தாக்குதலுக்கு திட்டமிட்டபோது இரண்டு லொறிகளில் எக்ஸ்ரா வீலுக்குள் வெடிமருந்தை கொழும்புக்கு அனுப்பியிருந்தது ஈரோஸ்.

ஈரோஸில் அப்போது இராணுவத் தளபதியாக இருந்தவர் சங்கர் ராஜி. துணைத்தளபதி கரண்.

கொழும்பில் ஹென்றி மாட்டியதால், யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு கொழும்பில் மேற்கொள்ளக்கூடிய மற்றொரு தாக்குதலுக்கு திட்டமிட்டது ஈரோஸ்.

(தொடர்ந்துவரும்)

## ஒரு திருத்தம்

கொழும்பு இராணுவ தலைமையகக் கட்டிட குண்டுவெடிப்பு தொடர்பாக சென்றவாரம் குறிப்பிட்டிருந்தேன். அச் சம்பவம் நடைபெற்ற ஆண்டு தவறுதலாக குறிப்பிடப்பட்டு விட்டது. 29.04.85 அன்று என்பதற்கு பதிலாக 29.04.84 என்று தவறுதலாக குறிப்பிட்டுவிட்டேன். மன்னிக்கவும்.



படிப்பகம்

www.padippakam.com

# ஒற்றுமையைப் பேணத் தவறிய ஒற்றையாட்சி

அலசுவது- இராஜதந்திரி

ஒற்றையாட்சி மூலமான தீர்வுத்திட்டமொன்றின் கீழ் வடக்கு-கிழக்குப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டுவதையே அவர்களது அணுகுமுறைகள் மூலமாக அறியமுடிகின்றது.

கடந்த வாரங்களில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோருடன் தமிழ்க்கட்சிகள் அனைத்துமே சந்திப்புக்களை நடத்தியிருந்தன.

ஐந்து தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்புடன், தமிழர் விடுதலை கூட்டணியும் சேர்ந்து ஜனாதிபதியைக் கடந்த வாரம் சந்தித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈ.பி.டி.பி, டெலோ, ஈரோஸ் ஆகிய ஐந்து தமிழ்க்கட்சிகளும் ஒரே அணியாக இயங்குகின்றன. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்து நிற்கின்றது.

இருந்தபோதிலும், தமிழ்க்கட்சிகள் அனைத்தையும் எதிர்கொண்டுள்ள பொதுப்பிரச்சினையாக வடக்கு-கிழக்கு விவகாரம் விளங்குகின்றது.

ஐந்து தமிழ்க்கட்சிகள் ஓர் அணியாக அரசிடம் தமது தீர்வு யோசனைகளைத் தெரிவித்துள்ளன. மறுபுறத்தே தமிழர் விடுதலைக்கூட்டணி, தனது தீர்வு யோசனைகளைக் கொண்டுள்ளது.

இருந்தபோதிலும், தமிழ்க் கட்சிகள் அனைத்துமே ஒற்றையாட்சியின் கீழான ஒரு தீர்வு வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குப் பரிகாரமாக அமையமாட்டாதென்று ஒரே குரலில் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளமை, அவற்றினிடையே வேற்றுமையிலும் ஒற்றுமை காணப்படுவதனை வெளிப்படுத்தியிருந்தது.

ஒற்றையாட்சியின் தவறான முடிவுகள், ஒற்றையாட்சியின் கீழ் காலத்துக்குக்காலம் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு மாற்றங்கள் என்பனவே வடக்குக்-கிழக்குப் பிரச்சினையை சிக்கலடையச் செய்துள்ளது.

இலங்கை 1948ம் ஆண்டு சுதந்திரமடைந்தது. இதனையடுத்து ஒற்றையாட்சியின் கீழ் அனைத்து உரிமைகளும் பெற்ற சுதந்திரப் பிரஜைகளாக வாழமுடியுமென்றே இலங்கைத் தமிழர்கள் கருதினார்கள்.

ஆனால் ஒரு நேர்த்தியான, பரந்துபட்ட ஒற்றையாட்சியை மெற்கொள்ள கடந்தகால ஆட்சியாளர்கள் தவறியிருந்தனர்.

வடக்கு-கிழக்குப் பிரதேசம் இலங்கையின் பூர்வீகத்தமிழ் மக்களின் பாரம்பரிய பூமியாகும். இப்பாரம்பரிய பிரதேசத்தில் தமிழர்களின் ஒருமைப்பாட்டைக் குலைத்து, தமிழர்களை அந்நியர்களாக்கும் நடவடிக்கைகளே கடந்தகாலங்களில் மும்முரமாக்கப்பட்டன.

தமிழர்களது உரிமைகள் மறுக்கப்பட்ட அதேசமயம், அவர்களது பாரம்பரிய பகுதிகளுக்குள் ஊடுருவல்களும் பேரினவாத ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டன.

இத்தகைய இனவாத நடைமுறைகளுக்கு இலங்கையின் ஒற்றையாட்சி முறையின் கீழிருந்த அம்சங்களே ஆட்சியதிகாரங்களில் இருந்தவர்களுக்குத் துணைபோயின.

அனைத்து அதிகாரங்களையும் தாமே கொண்டிருந்து, தமது விருப்பு வெறுப்புக்களையே ஒற்றையாட்சியின் கீழ் இலங்கையின் ஆட்சியாளர்கள் நிறைவேற்றினர். இதற்கு பேரினவாதிகளும் 'சாமரை' வீசினர்.

இலங்கை சுதந்திரமடைந்தது முதல் இன்றுவரை தொடர்ந்துகொண்டிருக்கும் இனரீதியிலான நடவடிக்கைகள், இலங்கையின் முக்கிய சிறுபான்மை இனமான தமிழினத்தைச் சீண்டிவிடுவதாகவே இருக்கின்றன.

எனவே இலங்கையில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் பூர்வீகக் குடிகளான தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமையைக் கொண்டிருப்பதற்கு ஒற்றையாட்சியின் அம்சங்கள் தடைக்கல்லாகவே இருக்கின்றன.

கடந்த காலங்களில் இந்த ஒற்றையாட்சியை உயிர்த்துடிப்பானதாக மாற்றியிருக்க முடியும். அனைத்து மக்களுமே பங்கேற்றுக் கொள்ளும் ஓர் அழகிய ஆட்சிமுறையாக இந்த ஒற்றையாட்சியை மிளிரச் செய்திருக்கலாம்.

ஆனால் வெள்ளையர்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறியதும் ஒற்றையாட்சி என்பது ஒரு பாரபட்சமான ஆட்சியாக மாறியதே தவிர எவ்வகையிலும், இந்த ஒற்றையாட்சி ஒற்றுமைக்கு வழிவகுக்க வில்லை.

இன்று இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதாரத்துறைகளில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன.

பிரதேசரீதியான வேறுபாடுகள் வலுவடைந்துள்ளன. அனைத்துத்துறைகளிலும் பாரபட்சமும், பாகுபாடுகளும் மலிந்துள்ளன.

இனரீதியாக ஒருவரையொருவர் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் சூழ்நிலைகள் தோன்றியுள்ளன.

மூவின மக்களும் ஒன்றாகக் கல்வி பயின்று பட்டம்பெற்ற கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில்கூட இன்று மூவின மாணவர்களும் ஒன்றாகவிருந்து கல்விகற்கும் சூழ்நிலைகள் இல்லை.

ஏனைய, தொழில்துறைகளில்கூட தமிழர்கள் தமிழ்ப்பகுதிகளிலும், சிங்களவர்கள் சிங்களப்பிரதேசங்களிலும் பணியாற்றும் தன்மைகளே காணப்படுகின்றன.

இன ஐக்கியம், ஒற்றுமை என்று பேசப்படுபவையெல்லாம் வெறும் பாசாங்காகவே இருக்கின்றன.

இனரீதியாக இன்றைய சந்ததியினர் என்றுமில்லாதவாறு பெரிதும் பிளவுபட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் இலங்கையின் அனைத்துப் பிரதேச மக்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தலைவர்கள் தோன்றுவார்களா? என்பது சந்தேகமே.

தமிழரிடையே தமிழ்த்தலைமைத்துவமும், சிங்களவரிடையே சிங்களத்தலைமைத்துவமும், முஸ்லிம்களிடையே முஸ்லிம் தலைமைத்துவமுமே புடைத்து நிற்கும்.

இந்நிலையில் ஒற்றையாட்சி என்பது வெறுமனே 'உப்புச்சப்பற்ற'தாகவே இருக்கமுடியும். மறுபுறத்தே அந்த ஆட்சி தொடர்ந்து நாட்டில் பிரச்சனைகளை அதிகரிக்கச் செய்வதாகவுமே இருக்கும்.

நாட்டில் ஒற்றுமை, ஐக்கியம், ஒருமைப்பாடு என்பன அவசியமே. அத்தகைய ஓர் ஒன்றிணைந்த நிலையை ஒற்றையாட்சி முறையினால்தான் கொண்டுவர முடியும் என்று கொள்வதற்கில்லை.

ஒரே தாயின் வயிற்றில் பிறக்கும் பல பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களானதும் தத்தமது சொந்தக்கால்களில், தத்தமது விடயங்களைக் கவனித்துக்கொள்கின்றன.

இருந்தபோதிலும் அவை தமக்கிடையே கொடுக்கல், வாங்கல்களை மேற்கொண்டும், ஒவ்வொருவருடைய இன்ப-துன்பங்களில் பங்கு கொண்டும் ஒற்றுமையைப் பேணுகின்றன.

இத்தகைய தன்மையே இன்றைய இலங்கையின் இனப்பிரச்சினைக்கும் தீர்வாக அமையமுடியும்.

## வேற்றுமையில் ஒற்றுமைபேணும் புதிய ஆட்சியமைப்பே 21ம் நூற்றாண்டின் இலங்கைக்குத் தேவை!

ஒற்றையாட்சியின் கீழ் தமிழ்மக்கள் தமது நலன்களையும், சிங்களமக்கள் தமது நலன்களையும் முழுமையாகப் பேண முடியாத தன்மை ஏற்படும்.

இந்த நாட்டின் பெரும்பான்மையினராக சிங்களவர்கள் இருக்கின்றனர். ஒற்றையாட்சியின் கீழ், கல்வி, தொழில் வாய்ப்பு என்பவற்றில் தமக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

தத்தமது பிரதேச நிர்வாகங்கள், நடைமுறைகள் என்பன தமது மொழியிலேயே நடைபெற வேண்டும்.

தமது மொழி, மத, கலாசார பாரம்பரியங்கள் உரிய வகையில் பேணிப் பாதுகாக்கப் படவேண்டுமென்றே சிங்கள மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இத்தகைய எதிர்பார்ப்பு எவ்விதத்திலும் தவறானதல்ல. எந்த ஓர் இனமும் அதன் சொந்தக்காலில் அனைத்து உரிமைகள், வசதி, வாய்ப்புக்களைக் கொண்டிருக்கவேண்டும் என்றே எதிர்பார்க்கும்.

இந்நிலையில் தமிழ் மக்கள் கூட தமது உரிமைகள் மற்றும் தமது பிரதேசவளங்கள், வாய்ப்புக்கள் என்பனவற்றைத் தாமே நிர்ணயித்து வாழவேண்டுமென்றே எண்ணுவதிலும் எவ்வித தவறுமில்லை.



எனவே இந்த இரு இனங்களினதும் எதிர்காலம் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாததாகவும், வேற்றுமையிலும் ஒற்றமை காணும் உறவையே கொண்டிருப்பதாகவும் அமைய வேண்டும்.

வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதே சகோதரத்துவமாகும்.

அனைத்து இனமக்களும் ஒரு தேசிய நீரோட்டத்தில் ஒற்றுமையாகச் சிந்திக்கலாம்- செயலாற்றலாம். அத்துடன் ஒருவரது தலைமைத்துவத்தை மற்றையவரும் ஏற்றுக்கொள்ளலாம்.

இத்தகைய தன்மைக்கு எமது அயல் நாடான இந்திய தேசத்தின் ஆட்சிமுறை ஒரு நல்ல உதாரணமாக இருக்கின்றது.

ஹிந்தி மொழியை தாய்மொழியாக்க் கொண்டவர்களே பிரதமர்களாக வந்த இந்திய தேசத்தில் தெலுங்கு, கன்னடமொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டவர்களும் பிரதமர்களாக வந்துள்ளார்கள்.

இதுதவிர இந்தியாவின் அதியுயர் சம்பிரதாயபூர்வப்பதவியான ஜனாதிபதிப் பதவியிலும், ஏறத்தாழ இந்தியாவின் அனைத்து பிரதேசங்களையும், மொழிகளையும் சேர்ந்தவர்கள் இருந்துள்ளார்கள்.

இத்தகைய வேற்றுமையிலும் ஒற்றுமைபேணும் ஆட்சிமுறையினால் இந்தியா சிதைந்து விடவோ அல்லது சீர்குலைந்துவிடவோ இல்லை.

மாறாக தமிழர்களுக்கு தமிழகமும், தெலுங்கு நாட்டவர்களுக்கு ஆந்திராவும், மலையாளத்தவர்களுக்கு கேரளாவும், பஞ்சாபியர்களுக்கு பஞ்சாப்பும், கன்னடக்காரர்களுக்கு கர்னாடகாவும் என்று இந்தியாவின் அனைத்து இன, மொழி மக்களும் தத்தமது உரிமைகளைப் பேணி உயர்ந்த தரத்தில் தேசிய ஒற்றுமையையும் கட்டிக்காத்து வருகின்றனர்.

இலங்கையிலும் வேற்றுமையில் ஒற்றுமைகாணும் ஓர் அழகிய ஆட்சிமுறையை நன்கு அலசி அராய்ந்து திறம்படவடிவமைக்க முடியும்.

ஏனெனில் பூகோள ரீதியாக இலங்கை மிகவும் சிறியது. இதுதவிர இந்தியாவில் போன்று ஏராளமான மொழிபேசுவோரும், மதங்களைச் சார்ந்துள்ளோரும் இலங்கையில் இல்லை.

ஒற்றுமையைப் பேணத்தவறிய ஒற்றையாட்சியில் தொடர்ந்து நம்பிக்கை வைப்பது, 21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைப்பதற்கு எவ்வகையிலும் உதவ மாட்டாது.

இலங்கையின் அடுத்த நூற்றாண்டை நோக்கிய சிந்தனைகள், புதிய கண்ணோட்டத்தில் அமையவேண்டும்.

காலனித்துவ ஆட்சியிலும், இதன்பின்னர் அக் காலனித்துவ அடிவருடிகளின் ஆட்சியிலும், தொடர்ந்து அந்த அடிவருடிகளது வாரிசுகளின் பிடியிலும் இருந்து வரும் இலங்கையை, அனைத்து மக்களும் சுபீட்சமாக வாழும் ஒரு புதிய நாடாக மாற்ற வேண்டும்.

இத்தகைய மாற்றத்துக்கு ஒற்றையாட்சி என்பது காலாவதியாகிப்போன ஒன்றாகவே இருக்கின்றது.

ஒற்றுமையைப் பேணத் தவறிய ஒற்றையாட்சியை நிராகரித்து, இனங்களின் தனித்துவத்தைப் பேணி அவற்றிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தக் கூடிய புதியதோர் ஆட்சிக்கு வழிவிடுவதே இலங்கையின் உய்வுக்கு வழிவகுக்கும். ●

---

# இளைஞர் கலைஞரின் 70 பதில்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

22. உங்களுக்கு கோபம் வந்தால் அடக்கிக் கொள்வீர்களா? வெளிப்படுத்துவீர்களா?
வெளிப்படுத்திவிடுவேன், அதனால் அந்தக் கோபம் கணநேரம் கூடநிற்பதில்லை.

23. அமுதசுரபி உங்கள் கையில் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?
அப்படி ஒரு இதழ், கிடைத்தபோது எல்லாம் படித்திருக்கிறேனே!

24. ஒரு வரலாற்று நாயகனின் பாத்திரத்தில் உங்களை நடிக்க வற்புறுத்தினால் எந்தப் பாத்திரத்தைத் தேர்ந்து எடுப்பீர்கள்?
-விலாசம் தவறி வந்த வினா.

25. நீங்கள் எழுதிய திரைப்படவசனங்களில் 'அடகுட, இது அபாரம்' என்று நீங்கள் வியந்த வசனம் எது?
-'மனச்சாட்சி உறங்கும் போது, மனக் குரங்கு ஊர்சுற்ற கிளம்பிவிடுகிறது.'

26. எந்தப் பானத்தை விரும்பி அருந்துவீர்கள்?
-இளநீர்.

27. உங்களது மிக நெருங்கிய நண்பர் யார்?
உழைப்பில் ஊக்கம்.

28. உங்களது மிக மோசமான எதிரி யார்?
சோகத்தில் சோர்வு.

29. இதுவரை பெறாத வெற்றி எது?
தமிழனைத் தமிழனாகவே காணும் வெற்றி.

30. நீங்கள் விரும்பும் கவிஞர் யார்?
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

31. உங்களிடம் இருக்கும் விலை மதிக்க முடியாத பொருள் எது?
அறிஞர் அணிவித்த கணையாழி.

32. 'முடி விழுந்தோம்' என்று வருந்தியதுண்டா?
இல்லை. அடிக்கடி முடி வெட்டிக்கொள்ளும் தொல்லை அகன்றது என்று மகிழ்ந்திருக்கின்றேன். என்றுமே வருந்தியதில்லை.

33. இன்றைய சூழ்நிலைக்குப் பொருத்தமான பழமொழி எது?
'ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம் உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்.'

34. தவறுகளை மறப்பீர்களா? மன்னிப்பீர்களா?
மன்னித்துவிடுவேன்; மறக்கமாட்டேன்.

35. நீங்கள் திரும்பத்திரும்ப வாசித்த புத்தகம் எது?
மக்சீம் கார்க்கி எழுதிய 'தாய்'

36. பேனாவா, பென்சிலா..... எதனால் எழுதினால் எழுத்தில் திருப்தி தோன்றும்?
பேனா.

37. யாரிடம் பெற்ற வாழ்த்தை மறக்க முடியாது?
தந்தை பெரியாரிடம் பெற்ற வாழ்த்தை!

38. எது உங்களுக்கு அலர்ஜி?
அருகில் சனி பிடித்தவர்கள் அமர்வது.

39. அண்ணா அறிவாலயம், புனித ஜார்ஜ் கோட்டை- இவற்றில், அதாவது இந்த இரண்டில் உங்களுக்கு உத்வேகம் தருவது எது?
அண்ணா அறிவாலயம்.

40. 'வாழ்விலோர் திருநாள்' அது உங்களுக்கு எந்த நாள்?
பாளையங்கோட்டைத் தனிச் சிறையில் அடைக்கப்பட்ட அந்த நாள்.

41. ஒரே ஒரு பொய் சொல்லுங்களேன்?
உலகம் பொய்.

42. உங்களை மிகவும் பாதித்த எழுத்து யாருடையது?
சந்தேகமென்ன: அண்ணாவின் எழுத்துத்தான்.

43. பாரதிக்கு 'குயில் தோப்பு'; உங்களுக்கு?
ஏற்ற விடையை எதிர்காலம் தான் தரவேண்டும்.

44. மனதில் கருக்கொண்டு இன்னும் எழுத்தில் உருவாகாதது எது?
தொல்காப்பியக் கனிவளம்.

45. உங்களுக்குப் பிடித்த அழகி யார்?
இயற்கைச் செல்வி.

46. வெற்றிக்கு குறுக்கு வழி என்ன?
பணம்: பாதாளத்திற்கே குறுக்கு வழி அமைத்திருக்கிறதே இப்போது....

47. பல முறை பார்த்து பரவசப்பட்ட திரைப் படம் எது?
தில்லானா மோகனாம்பாள்.

48. உங்கள் கவிதைகளில் உங்களையே பிரமிக்க வைத்த வரிகள் எவை?
'மானம்- அவன் கேட்ட தாலாட்டு:
மரணம்- அவன் விளையாடிய விளையாட்டு.'




49. உங்களுக்கு யார் மேல் பொறாமை?
இன்னும் இந்த உலகில் வந்து பிறக்காதவர்கள் மீது!

50. 'மூட்' இருந்தால்தான் எழுதுவீர்களா?
எழுதினால்தான் 'மூட்' என்பதே வரும்.

(நன்றி-ஈழகேசரி)

மிகுதி அடுத்தவாரம்



படிப்பகம்

www.padippakam.com

‘30 இலட்சம் அமெரிக்க டொலர்’ தனக்குள் சொல்லிப் பார்த்துக்கொண்டார் சாதீக்.

“என்ன யோசனை குட்டி மகாராஜா உங்கள் பணமா, எங்கள் பணமா? எண்ணெய் முதலாளிகளிடம் நீங்கள் வாங்கிய பணம்தானே!” என்றான் கார்லோஸ்.

“இது அதிகம்”

“பேரம் பேசுவதற்கு கார்லோஸ் ஒருநாளும் ஒத்துக்கொள்வதில்லை. முடிந்தால் தாருங்கள். முடியாவிட்டால் சொல்லுங்கள், உங்கள் கதை முடிய வேண்டியதுதான்.”

“மிரட்டலா?” என்று கேட்டதும், தனது அடிவயிற்றைக் கையால் அழுத்தியபடி சிரித்தான் கார்லோஸ்.

“மிர.....மிரட்டலா..” சிரிப்புக்கிடையே பேசினான். “மிரட்டல்...சாதீக்... என்ன இது சின்னப்பிள்ளைமாதிரி கேட்கிறாய். ஏன் உன்னை மிரட்டவேண்டும்? ஒரே போடாக மண்டையில் போடத்தெரியாதா எனக்கு? சரி, பேச்சை வளர்ப்பானேன்?



கார்லோஸ்

தலைப்புச் செய்தி அதுதான்.

“கார்லோஸ் மரணம்.”

கொலம்பியாவில் மிகப்பெரிய முட்டை வடிவ மேஜைமீதும் அன்றைய பத்திரிகை போடப்பட்டது.

தலைப்புச் செய்தி. தடித்த எழுத்துக் களில் இருந்தது.

“கார்லோஸ் மரணம். திடுக்கிடும் தகவல்.”

**சென்றவாரம்**

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் இலண்டன் தூதரின் சகோதரன் சாதீக் கார்லோஸால் கடத்தப்படுகிறார்

30 இலட்சம் அமெரிக்க டொலர்கள் தந்தால் விடுதலை என்கிறான் கார்லோஸ்.

**இனி......**

## உலகைக் கலக்கிய மனித வெடிகுண்டு

இரத்த வெள்ளத்தில் கிடந்தவனை புரட்டி, அவனது கோட்டின் உள்ளே கையைவிட்டான்.

கார்லோஸின் கையில் மாட்டியது அது. சின்ன ‘ரேப் றெக்கோடர்’

பிரதிநிதிகள் முகங்களில் திகில் விலகி, அந்த இடத்தில் ஆச்சரியம் அமர்ந்து கொண்டது.

‘நமக்குள் ஒரு ஒற்றனா?’ என்பதுதான் அவர்களின் நம்பமுடியாத ஆச்சரியம்.

# யார் கார்லோஸ்?

தரமுடியுமா, முடியாதா?”

சாதீக் சட்டென்று அந்தக் கேள்வியைக் கேட்டார். “நீதான் கார்லோஸ் என்பதற்கு என்ன உத்தரவாதம்.” சாதீக் கேட்டதும் கார்லோஸ் அவரை ஒரு அலட்சியப்பார்வை பார்த்தான்.

“சரி விடு, நான் கார்லோஸே கிடையாது. யாரோ ஒரு ஆசாமி என்று வை. என்ன செய்யப்போகிறாய்? ம்.....என்ன செய்வாய்? பணம் தரமாட்டேன், பிணமாகத்தான் வெளியே போவேன் என்று பிடிவாதம் பிடிக்கப்போகிறாயா? நல்லது.பிடி!”

கார்லோஸ் பேசிய தோரணையில் இருந்தே அவன் சொல்வதெல்லாம் உண்மை என்று புரிந்து, சாதீக் யோசித்து, “ஓ.கே. 20 இலட்சம் அமெரிக்க டொலர்கள் தருகிறேன். எங்கே, எப்படித் தர வேண்டும்?”

“எங்கே, எப்படி என்பது இருக்கட்டும், உன் விருப்பப்படியெல்லாம் தொகையைத் தீர்மானித்தால் அது எப்படி? கார்லோஸ் சொன்னால் சொன்னதுதான் தெரியுமா?”

வேறு வழியின்றி சாதீக் உடன்பட்டார். 30 இலட்சம் அமெரிக்க டொலர்கள். வங்கிக்கட்டளையாக (டிராஃப்ட்) அந்தப் பணம் கார்லோஸின் கையில் வந்தது. பெய்ரூட்டில் அதனைக் காசாக மாற்றினான் கார்லோஸ்.

ஷானுகாவுக்கு நன்றி சொன்னான். “எவ்வளவு வேணும் சொல்?” என்றான்.

“என்ன?” என்றாள்.

“பணம்!” என்றான். ஷானுகா புன்னகைத்தாள். “வெறுத்துப்போய் விட்டது. பணம் கிடைக்கும் வரைதான் அதில் ஆர்வம் இருக்கும். கிடைத்து விட்டால் சலித்துப்போகும். நான் உனக்கு செய்த உதவி பணத்துக்காக அல்ல.”

“வேறு எதற்காக?”

“இரண்டு காரணங்கள். ஒன்று, உனக்கு நாங்கள் உதவினால், எங்களுக்கு நீ உதவுவாய் என்று எங்கள் கூட்டத்தோடு நீ செய்துகொண்ட ஒப்பந்தம். இரண்டு.....”



டமாஸ்கஸில் கார்லோஸ் வசித்தவீடு

“இரண்டாவது என்ன?” கேட்டான் கார்லோஸ்.

“எனக்கு நீ வேண்டும்!” என்றாள். கார்லோஸ் அவளை நெருங்கி அணைத்தான். அவளை அவனும், அவனை அவளும் பிரிக்கத் தொடங்கினார்கள்.

❄ ❄ ❄ ❄

**“கார்லோஸ் இறந்துவிட்டான்”**

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.உயர் அதிகாரி அடித்துச் சொன்னார்.

சொன்னவர் அற்லி பிலிப்ஸ்.

சி.ஐ.ஏ.யில் 25 வருடங்களாக உயர் பதவியில் இருப்பவர். அவரே அப்படி உறுதியாகச் சொன்னது 1987 செப்டம்பரில்.

சர்வதேசரீதியாக பரபரப்பான செய்தியை பார்த்ததும் கார்லோஸ் நகைத்தான். உரத்து வாசித்துக் காட்டினான். கேட்டவர்களும் நகைத்தனர்.

நடந்துகொண்டிருந்தது மிக முக்கியமான மாநாடு. போதைக் கடத்தல் சாம்ராஜ்யத்தின் முக்கிய புள்ளிகள் பலர் ஒரே இடத்தில் கூடுவது அபூர்வம்.

இன்று கூடியிருந்தார்கள்.

கார்லோஸ் தமது கூட்டத்துக்கு வந்து



விட்டதற்காக மரியாதை செய்யக் கூடியிருந்தார்கள்.

கொலம்பியா அரசு நினைத்தால் கூட அந்த இடத்தை தனது படையை அனுப்பி சுற்றிவளைக்க முடியாது.

அந்தளவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள். நவீன இயந்திரத் துப்பாக்கிகளோடு ஒரு படையே காவல் காத்தது. இனிமேல் கார்லோஸ்தான் தளபதி. கிட்டத்தட்ட ஒரு இராணுவம் போலவே கடத்தல் சாம்ராஜ்யத்தின் படையும் கார்லோஸிற்கு அணிவகுப்பு மரியாதை செய்தது.

‘பாலஸ்தீனத்தில்கூட எனக்கு கிடைக்காத மரியாதை இது’ என்று நினைத்துக் கொண்டான் கார்லோஸ்.

“பாலஸ்தீனத்துக்கு நான் பயன்பட்டிருப்பேன். எனக்கு கிடைத்த தலைவர்கள் எனக்குரிய இடத்தைத் தந்திருந்தால். ஆனால் இப்போது....” நினைப்பைத் துரத்தினான்.

அணிவகுப்பு முடிந்ததும் தான் மாநாடு நடந்தது. கார்லோஸ் சின்னதாக உரையாற்றினான்.

“நண்பர்களே! என்னை உங்களுக்கு அறிமுகம் செய்யும் அவசியமில்லை. எனக்கு பிடிக்காத விஷயங்கள் மூன்று. மூன்றே மூன்று. ஒன்று- நம்பிக்கைத் துரோகம். இரண்டு- காட்டிக் கொடுப்பு, மூன்று- நமக்குள் நாணயம் தவறுவது. மூன்றுமே மன்னிக்கமுடியாத குற்றங்கள்.” சொல்லிவிட்டு தன் இடுப்பில் இருந்த பிஸ்டலை உருவி, தன் தலைக்கு மேலே உயர்த்திப் பிடித்தான்.

“நான் சொன்னதை ஏற்றுக் கொள்கிறீர்களா?” என்று கேட்டான். எல்லோரும் கை உயர்த்தி ஆதரவு தெரிவித்தார்கள். கிட்டத்தட்ட நூறுபிரதிநிதிகள் இருந்தார்கள்.

கார்லோஸ் புன்னையோடு தன் பிஸ்டலை தாழ்த்தி, சட்டென்று முன்னோக்கி நீட்டி, விசையைத் தட்டிவிட்டான்.

தோட்டா பறந்தது.

பிரதிநிதி ஒருவரின் நெற்றிப்பொட்டில் துல்லியமாகத் துளைத்துச் சென்றது.

பிரதிநிதி சுருண்டு சரிந்தார்.

ஏனைய பிரதிநிதிகள் பயத்தில் உறைந்து போனார்கள். என்ன செய்வது என்றே தெரியவில்லை.

கார்லோஸ் தன் இருக்கையைவிட்டு எழுந்து கம்பீரமாக நடந்துவந்தான்.

பிரதிநிதிகள் மத்தியில் முணுமுணுப்புக்கள். கார்லோஸை அவர்கள் பார்த்த பார்வையில் ‘நன்றி’ என்று அழுத்தமாக சொன்னது.

“யாருக்கும் வருத்தமில்லையே?” என்றான். “இல்லை” என்றார்கள் ஒரே குரலில்.

**17 தருவது ரசிகன்**

செத்துப்போனவன் அமெரிக்கன் சி.ஐ.ஏ. அவனை விலைக்கு வாங்கியிருந்தது.

கார்லோஸின் மதிப்பு கடத்தல் சாம்ராஜ்யத்தில் உயர அந்தச் சம்பவமே போதுமானதாக இருந்தது.

டமாஸ்கஸ் நகரில் பணக்கார பங்களா. அந்த அரபு ஷேக் பணக்காரச் செழிப்போடு காணப்பட்டார். தனக்கு முன்னால் இருப்பவனை அவர் கூர்ந்து கவனித்து எடைபோட்டுக் கொண்டிருந்தார்.

அவனோ முரட்டுத்தனமாகத் தோற்றம் காட்டினான்.

அரபு ஷேக் பணிவான குரலில் “நீ எதிர்பார்த்து வந்திருப்பது என்னவென்று புரியவில்லை.”

“புரியவில்லையா? புரியாதது போல நடிக்கிறீர்களா?” என்றான் அவன்.

“நான் நினைக்கிறேன் உனக்கு பணம் தேவைப்படுகிறது என்று?”

“மிகச் சரி! எவ்வளவு என்று கேட்க மாட்டீர்களா?”

“எவ்வளவு?”

“10 இலட்சம் அமெரிக்க டொலர்கள்!”

“குட் ஜோக்!” என்றார் அரபு ஷேக். வந்தவன் சட்டென்று எழுந்து, “நான் யார் தெரியுமா?” என்றான். அரபு ஷேக் அசையவில்லை.

“தெரியாது! உண்மையாகவே நீ யார் என்று தெரியாது” என்றார் ஷேக்.

“சொல்லவா?”

“சொல்லாமல் எப்படித் தெரியும்?”

**“நான்தான் கார்லோஸ்!”**

“என்ன பெயர் சொன்னாய்?”

அவன் தனது குரலை பயங்கரமான தொனியில் கொண்டுவந்து, **“கார்லோஸ், நான்தான் கார்லோஸ்”** என்றான்.

அரபு ஷேக் தன் அடிவயிற்றை கையால் பிடித்தபடி உரத்து- குலுங்கி-சிரித்தார். கண்களில் நீர் வரும்வரை சிரித்தார். சிரிப்பின் மத்தியில் கேட்டார்.

“நீ...நீ கார்லோஸா?”

“ஏன், தலையில் இரண்டு கொம்பு வேண்டுமா?”

“கொம்பு தேவையில்லை. தெம்பு வேண்டும். உனக்கு தெம்பு காணாது. நீ கார்லோஸாகவும் இருக்க முடியாது.”

“நான்தான் கார்லோஸ்”

“இருக்கமுடியாதே.”

“ஏன்?”

**“ஏன் என்றால், நான்தான் கார்லோஸ்!”**

அரபு ஷேக் சொல்லியபடியே எழுந்தார். அவர் கையில் எப்போது அந்தப் பிஸ்டல் முளைத்தது என்பது எதிரேயிருந்தவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

(வரும் வாரம் முற்றுப்பெறும்)

# “‘கியர்’ மாற்றுவதில்கூட என்னுடன் விவாதிப்பாள்”

நெல்சன் மண்டேலா, வின்னி மண்டேலா தம்பதியினர் விவாகரத்து பெற்று நிரந்தரமாகப் பிரிந்துவிட்டனர்.

அதனால் வின்னி மனம் தளரவில்லை. தனது பாணியில் அரசியலில் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறார். 1999இல் நெல்சன் மண்டேலாவின் பதவிக்காலம் முடிவடைகிறது. அதன்பின்னர் வின்னிதான் ஜனாதிபதி. அதற்கான முயற்சிகளில் தான் வின்னி ஈடுபட்டுவருகிறார்.

நெல்சன் மண்டேலா-வின்னி காதல் கதையில் சுவாரசியங்களும் இல்லாமல்



இல்லை.

முதன்முதலில் வின்னியை நெல்சன் மண்டேலா சந்தித்தது ஒரு பஸ்நிலையத்தில். வின்னியும் நோக்க, மண்டேலாவும் நோக்க, கண்கள் வழியாக மின்சாரம் பாய, காதல் உற்பத்தியானது. அப்போது நெல்சனுக்கு வயது 41 வின்னிக்கு வயது 24.

நெல்சன் மண்டேலா ஏற்கெனவே திருமணமானவர். முதல் மனைவியின் பெயர் ‘ஈவ்லின் மேஸ்’. கிராமத்துப் பெண். வின்னியோ நேரெதிர். நாகரீக நங்கை. வின்னியை மணந்தார் நெல்சன்.

அரசியலிலும் கணவருடன் கைகோர்த்து நின்றார் வின்னி. திருமணமான சிறிது காலத்திலேயே வின்னியின் வேகத்துக்கு நெல்சனால் ஈடுகொடுக்க முடியவில்லை. தம் மத்தியில் ஒத்துப் போகமுடியாத கருத்துக்கள் இருப்பதாக இருவருமே உணர்ந்தனர்.

நெல்சன் மண்டேலா அந்த நாட்களை நினைவுகூர்ந்து, தன் அனுபவத்தை சொல்கிறார்: “நான் வின்னிக்கு கார் கற்றுக் கொடுக்கும்போதுகூட என் ஆலோசனைகளைக் கேட்கமாட்டாள். ‘கியர்’ மாற்றுவதில்கூட என்னுடன் விவாதிப்பாள். ஒரு முறை பொறுக்கமுடியாமல் ஒரு தெருவில் காரில் அவளை விட்டுவிட்டு வீடு திரும்பியிருக்கிறேன்.” என்கிறார் நெல்சன் மண்டேலா.

நெல்சன் வின்னி திருமணத்தின்பின்னர் ஒருவருட காலத்திற்குள் நெல்சன் சிறைக்குச் சென்றார்.

நெல்சன் சிறையிலிருந்த காலத்தில் வின்னி அரசியல் தலைவியாக மாறினார். வின்னியின் அணியில் இளம்வயதினர் ஏராளம். அதனால் தமது அரசியல் எதிரிகளை பந்தாடினார்கள். இதெல்லாம் நெல்சன் மண்டேலாவுக்குப் பிடிக்காத விசயங்கள்.

வின்னி சுதந்திரமான பெண். அவருக்கும் டால்ம்போஃபு என்னும் வக்கீலுக்கும் இடையே காதல் மலர்ந்தது. நெல்சன் மண்டேலா சிறையில் இருந்த 27 வருடமும் தனிமையில் வாடிய வின்னிக்கு சில ஆறுதல்கள் தேவைப்பட்டன.

சிறையில் தமது சந்திப்புக் குறித்து நெல்சன் மண்டேலா பின்வருமாறு கூறியிருக்கிறார்.

“எனது 27 வருட சிறை வாழ்க்கையில் 21 வருடங்கள் நாங்கள் ஒருவருக்கொருவர் தொட்டுக்கொண்டது கிடையாது. வின்னி என்னைச் சந்திக்க வரும்போது-சில சமயம் மட்டும்- சிறை அதிகாரி பாராமுகமாக இருந்த நேரத்தில் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி உணர்ச்சிகளை வெளிப்படுத்திக்கொள்வோம்.”

அதுவே கடைசிச் சந்திப்போ என்று ஒவ்வொரு முறையும் நடந்துகொள்வோம். ஒரு விதத்தில் சிறைக் காலத்தில்தான் எங்கள் கடைசிச் சந்திப்புக்களும் நடந்தன” என்று சொல்லியிருக்கிறார் மண்டேலா.

சிறையிலிருந்து நெல்சன் விடுதலையான பின்னர் அவரது படுக்கையறைப் பக்கம் வின்னி செல்லவே இல்லை. எனினும் பொது நிகழ்ச்சிகளில் இணைந்து தோன்றினார்கள். திருமண வாழ்க்கை முடிந்தபின்னரும் இருவரும் ஒன்றாக பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

இறுதியாக கடந்த மேமாதம் நீதிமன்றம் விவாகரத்தை உறுதிசெய்தபோது நெல்சன் மண்டேலா புன்னகை புரிந்தார்.

“தென் ஆபிரிக்காவுக்கு இது ஒரு சோகதினம். அற்புதமான இரண்டு மனிதர்களின் பிரிவு துரதிஷ்டவசமானது” என்று தென் ஆபிரிக்கா முழுவதிலும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன.

நெல்சன் மண்டேலாவின் சொத்துக்களில் பாதியைக் கேட்டார் வின்னி. அவர் நீதிமன்றத்துக்கு நேரில் செல்லாததால் அந்தக் கோரிக்கை தோற்றுப் போனது.

நெல்சன் மண்டேலாவுக்கு ஜனாதிபதி என்ற ரீதியில் வருடத்திற்கு ஒரு இலட்சத்து 43 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைக்கிறது. அவரது சொத்துக்களின் மதிப்பு ஒரு கோடி அமெரிக்க டொலர்கள்.

அது தவிர அவரது ‘சுயசரிதை’ நூல் விற்பனைமூலம் கிடைக்கும் பெரும் தொகைப்பணம் தொண்டர் நிறுவனங்களுக்கு போய்ச் சேருகிறது.

சொந்த வாழ்க்கை குழப்பங்கள் நெல்சனையோ, வின்னியையோ எவ்வகையிலும் பாதிக்கவில்லை.

இருவரும் தீவிர அரசியலில் தமது இலக்குகளை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றனர்.

# சத்தம் போட்டால் சுட்டு விடுவார்கள்

பிரிட்டனில் எடுத்தவுடன் துப்பாக்கியைத் தூக்கும் குணம் வளர்ந்து வருகிறது. சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு என்பவை காணாமல் போய்க்கொண்டிருக்கின்றன.

அமெரிக்காவில் ஒரு சதுரகிலோ மீட்டரில் 29 பேர் வசிக்கிறார்கள். பிரிட்டனில் ஒரு சதுரகிலோ மீட்டரில் 258 பேர் வசிக்கின்றனர். இந்த இடநெருக்கடியும் பிரச்சனைகளுக்குக் காரணம்.

உதாரணத்திற்கு சில பிரச்சனைகளைப் பாருங்கள்.

பக்கத்துவீட்டுத் தம்பதியர் காதல்லீலைகளில் ஈடுபடும் போது கேட்கும் ஒலிகள் தன்னை இம்சைப்படுத்துவதாக பொலிசில் புகார் செய்திருக்கிறார் அயல்வீட்டுப் பெண்மணி. “முதலில் கட்டிலுக்கு எண்ணெய் போடச்சொல்லுங்கள்.” என்று எரிச்சல்பட்டாராம்.

“பக்கத்துவீட்டுக்காரன் தொலைக்காட்சி பெட்டியை உரத்த சத்தத்தில் வைக்கிறான். இப்படியே தொடர்ந்து நடந்தால் ஒரு நாள் கொலையே விழும்” என்று மிரட்டியிருக்கிறார் ஒருவர். இறுதியில் அவரே கத்தியால் குத்தப்பட்டார்.

அடுத்த வீட்டு மியூசிக் கருவியின் இரைச்சல் தாங்க முடியவில்லை. துப்பாக்கியை எடுத்துச் சென்று சுட்டுத்தள்ளிவிட்டார் மற்றொருவர். அவர் சுட்டது மியூசிக் கருவியை. நீதி மன்றத்தில் வழக்கு. சுட்டவருக்கு எட்டாயிரம் பவுன்ஸ் அபாரதம் விதிக்கப்பட்டது.

அபராதம் விதித்ததோடு, மியூசிக் கருவியை வைத்து அடுத்த வீட்டிலுள்ளவர்களைப் பற்றி கவலையேபடாமல் இரைச்சல் போட்ட வீட்டுக்காரரையும் கண்டித்தார் நீதிபதி.

இன்னுமொரு சம்பவம். பக்கத்து வீட்டு நாய் குரைத்துக்கொண்டிருந்தது. அயல் வீட்டுக்காரருக்கு பொறுக்கமுடியவில்லை. கத்தியோடு போய் ஒரே குத்து. குத்தியது நாய் உரிமையாளரை. நாய் தொடர்ந்து குரைத்துக் கொண்டிருக்கிறது. உரிமையாளர் செத்துப்போனார்.

அடுத்த வீட்டில் விருந்துக் கொண்டாட்டம். ஒரே அமளிதுமளி. மின்சாரத்தை துண்டித்துவிட்டார் பக்கத்துவீட்டுக்காரர். உற்சாகமான உஷாரில் நடனமாடிக் கொண்டிருந்த ஒரு பெண் இருட்டில் தடுமாறி நாலாவது மாடியிலிருந்து கீழே விழுந்து இறந்து போனாள்.



மற்றுமொரு சம்பவம், பியானோ வாசித்து பயிற்சிபெறும் ஒரு இளைஞனை திட்டித்தீர்த்தாள் பக்கத்துவீட்டுப் பெண். இளைஞனுக்கு கெட்ட கோபம். பக்கத்து வீட்டுப் பெண்ணை சுட்டுக்கொன்றுவிட்டு சிறையில் இருக்கிறான்.

மிக மெல்லிய வீட்டுச் சுவர்கள், மெல்லிய கூரைகள், இடநெருக்கடி என்பவையும் மேற்கண்ட பிரச்சனைகளுக்குக் காரணம்.


பிரிட்டனில் மட்டுமல்ல நம்நாட்டில் கூட மேற்கண்ட சம்பவங்கள் நடக்கலாம். எதற்கும் ஜாக்கிரதையாக நடந்து கொள்வோம்.



படிப்பகம்

www.padippakam.com

# ராணி கையை வைத்தால்



"ராஜா கையை வைத்தால் அது ராங்கா போனதுண்டா?" அது அபூர்வ சகோதரர்கள் படப் பாடல். இந்த ராணி கையை வைத்தாலும் அப்படித்தான். ராணியின் பெயர்-கிறிஸ்டினா. ஸ்பெயின் நாட்டு அழகி. இந்த அழகியின் பொழுதுபோக்கு காளைகளை அடக்குவது. அதுவும் சாதாரண காளைகளை அல்ல. முரட்டுக் காளைகளை.

கிறிஸ்டனாவுக்கு 24 வயது. 18 வயதில் காளைகளை ஒரு கைபார்க்கத் தொடங்கினார். இதுவரை 400 காளைகளுடன் மோதி வெற்றிவாகை சூடியுள்ளார். எந்த முரட்டுக் காளையும் இவர் கைவரிசை முன் பணிந்து மடங்கிவிடும்.

படத்தில் இருப்பது 1300 பவுண்ட் எடையுள்ள காளை. முதலில் முரண்டு பிடித்தது. பின்னர் அடங்கி விட்டது. வெற்றி பெற்றார் கிறிஸ்டினா. இந்த கன்னிக்கு காளை ராசியோ!

ஸ்பெயின் நாட்டில்தான் காளை அடக்கும் போட்டிகள் பிரபலம். இது ஒரு வீர விளையாட்டு. கரணம் தப்பினால் மரணம் நிச்சயம்.

## வன்-டூ-திரீ.... கிளிக்

குடும்பமாக ஒரு புகைப்படம் எடுப்பதென்றால் எவ்வளவு குஷியாக நின்று போஸ் கொடுப்பீர்கள். உங்களுக்கு மட்டும்தான் குடும்ப புகைப்படம் எடுக்கவும், போஸ் கொடுக்கவும் தெரியும் என்று நினைத்துவிடாதீர்கள். படத்தில் இருப்பது கீரிப்பிள்ளை குடும்பம். மனைவியும், கணவனும் நின்றபடி போஸ் கொடுக்க, பிள்ளைகள் பவ்யமாய் அமர்ந்திருக்கின்றன. போஸ் எப்படி? தென் ஆபிரிக்க கீரிவகையைச் சேர்ந்தவை இவை. ஜெர்மனில் உள்ள கலோன் நகர வனவிலங்கு பூங்காவில் எடுக்கப்பட்ட படம் இது.



## தகவல் பெட்டி

## ஜப்பானில் சூப்பர் கார்



ஜப்பானியர்களுக்கு மூளையை வைத்துக் கொண்டு ஒரு மூலையில் சும்மா இருக்கப்பிடிக்காது. ஏதாவது புதுசு புதுசாக செய்துகொண்டே இருப்பார்கள்.


சமீபத்தில் ஒரு மின்சாரக் கார் செய்திருக்கிறார்கள். ஜப்பான் நாட்டின் 'டைஹாட்சு' நிறுவனம் அதனைத் தயாரித்துள்ளது. காருக்கு பெயரும் சூட்டிவிட்டார்கள். 'மினி சுவே.'

மின்சாரத்தில் 'ரீசார்ஜ்' செய்யும் சிறிய பாட்டரியில் இது இயங்கும். மணிக்கு 55 கிலோ மீட்டர் வேகம்போகும்.

உலகில் மிகச் சிறியதும், மின்சாரக்கார்களில் அதிக தூரம் செல்லக்கூடியதும் தமது கார்தான் என்று சொல்கிறார்கள். 'டைஹாட்சு' நிறுவனத்தினர்.

மின்சாரத்தை எப்படியெல்லாம் கையாளலாம் என்று அங்கு யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். நாமும் மின்சாரத்தைப் பற்றி யோசித்துக் கொண்டுதான் இருக்கிறோம், மின்சாரத்தை எந்தெந்தப் பாவனைகளில் கைவிடலாம் என்று! நாம் மட்டும் சளைத்தவர்களா என்ன?!

## விலை உயர்ந்த விருந்துப் பாத்திரம்



படத்தில் இருப்பவை டினர் செட். அதாவது விருந்துகளில் உணவு பரிமாறும் பாத்திரங்கள். பார்க்க அழகாக இருந்தாலும், இவை ஒன்றும் தங்கத்தில் செய்யப்பட்டவையல்ல. ஆனால் இவற்றின் விலை எவ்வளவு தெரியுமா? மூன்று கோடி ரூபாய்!

விலை உயரக் காரணம் இல்லாமல் இலலை. இவற்றை பயன்படுத்தியது யார் தெரியுமா? 18ம் நூற்றாண்டில் ஃபிரான்ஸ் மன்னராக இருந்த லூயிஸின் மனைவி மேரிதான் பயன்படுத்தினார். அதனால்தான் சமீபத்தில் இதனை 3 கோடி ரூபாய் கொடுத்து ஒரு மாபெரும் பணக்காரர் ஏலத்தில் எடுத்துள்ளார். மரியாதை, பாத்திரத்துக்கல்ல, பாத்திரத்தை பயன்படுத்திய மகாராணிக்கு!

## பெரிசு..... பெரிசாக



ஃபிரான்ஸ் நாட்டில் இருக்கிறது 'ஆபிக்னி' என்னும் கிராமம். 'பிக்கர் இஸ் பெட்டர் போ' என்னும் திருவிழா அங்கு கோலாகலமாக நடைபெறும்.

திருவிழாவிற்கு வருபவர்களைக் கவர சின்ன அளவான பொருட்களையெல்லாம் பெரிசு பெரிசாகச் செய்து வைத்து அசத்தினார்கள். படத்தில் இருப்பது என்னவென்று தெரிகிறதா? கொடியில் காயப் போடும் துணி பறந்துவிடாமல் இருக்க பயன்படுத்தப்படும் 'கிளிப்' தான் இது. ராட்சத வடிவில் செய்யப்பட்ட இந்த கிளிப்பின் எடை 200 கிலோ. உயரம் 20 அடி. இந்த மரக் கிளிப்பை உருவாக்கியவர் ஜுன் போல் செய்கின். இந்த கிளிப்பை துணிகாயப்போட பயன்படுத்த முடியாது. கீழே சாயப்போட்டு அழகு பார்க்க வேண்டியதுதான்.

## வேகம்—மகாவேகம்—மரணவேகம்


புலிகளில் ஒரு ரகம் சிறுத்தைப் புலிகள். உலகிலேயே மிக வேகமாக ஓடக்கூடியவை சிறுத்தைப் புலிகள்தான். தாக்குவது, துரத்துவதில் மட்டுமல்ல, ஆபத்தான நேரத்தில் தப்பியோடவும் அந்த வேகம்தான் கைகொடுக்கிறது.

மணிக்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாகச் செல்லக்கூடியவை சிறுத்தைப் புலிகள். மிகக் குறுகிய தூரத்திற்கு செல்வதாக இருந்தாலும் வேகத்தில் மாற்றம் இருக்காது. ஒரே பாய்ச்சல்தான்.

ஆபிரிக்கா, ஆப்கானிஸ்தான், ஈரான், துருக்மெனிஸ்தான் போன்ற நாடுகளில்தான் சிறுத்தைப் புலிகள் அதிகமாக காணப்படுகின்றன.

சிறுத்தைப் புலி ஒன்றின் ஓட்டத்தை தூர நோக்கி கமராவுக்குள் அடக்கியிருக்கிறார் ஒரு கமராக்காரர். ஆபூர்வமான படம் இது.

கின்னஸ் புத்தகத்தில் சிறுத்தைக்கும் இடம் தரப்பட்டுள்ளது. உலகில் மிக வேகமான விலங்கு இதுதான். யாராலும் முறியடிக்க முடியாத சாதனையென்பதால் கின்னஸில் நிரந்தர இடம்தான்.









படிப்பகம்

www.padippakam.com


நெப்போலியன்-சங்கவி படம் பகவத்சிங்

# ரம்பாவைச் சாடுகிறார் மீனா

பல படங்களில் பல ஹீரோக்களுடன் நடித்திருந்தும், அனுபவம் பல பெற்றிருந்தும், மீனாவை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருப்பவர் கமலஹாசன்தான். திறந்த வாய் மூடமுடியாமல் கமலைப் புகழுகிறார் மீனா.

'அவ்வை சண்முகி' படம் முடிவதற்கு இடையில் கமலிடம் கற்கவேண்டியதையெல்லாம் கற்று முடித்து விடுவேன் என்று ஒரு மாணவியின் ஆர்வத்தோடு பேசுகிறார் மீனா.

தமிழிலும், தெலுங்கிலும் மீனாவுக்கு இப்போது போட்டி ரம்பாதான்.

நக்மா அலை ஓய்ந்துகொண்டிருக்கிறது. ரோஜாவுக்கும் வரிசையாக தோல்விப்படங்கள். ரம்பாதான் இப்போது ஒரு ரவுண்ட் வரத்தொடங்கியிருக்கிறார்.

தெலுங்கில் மீனாவுக்கு கிடைக்க இருந்த பல வாய்ப்புக்களை தந்திரமாக தட்டிப்பறித்துக் கொண்டாராம் ரம்பா.

மீனாவைச் சுற்றி சுற்றி வந்த தயாரிப்பாளர்கள் சிலர் இப்போது ரம்பாவின் பின்னால் சுற்றத் தொடங்கிவிட்டார்கள்.

தெலுங்கில் பெரும்புள்ளியான தயாரிப்பாளர் ஒருவர் மீனாவின் பயங்கரமான ரசிகர். மீனா ஆந்திராப் பக்கம் சென்றால் தனது ரசிகரின் பங்களாவில் தங்கி ரசிகரின் விருப்பத்தை பூர்த்திசெய்யத் தவறுவதில்லை.

அந்த தீவிர ரசிகரும் கட்சிமாறிவிட்டார். ரம்பாவை வைத்து புதிய படம் ஒன்றுக்கு பூஜை போட்டுள்ளார். விஷயம் அறிந்த மீனா பயங்கர டென்ஷனில் இருக்கிறார். மாபெரும் வருமான இழப்பை நினைத்து கலங்கிப் போனார். மீனாவின் தாய்க்குலம் ரம்பாவைப் பற்றி திட்டித்தீர்த்துக் கொண்டிருக்கிறார்.

தெலுங்கு சஞ்சிகை ஒன்று மீனாவைப் பேட்டி கண்டது.

"சில நடிகைகள் தந்திரத்தால் முன்னேறத் துடிக்கிறார்கள். மார்க்கெட்டை பிடிப்பதற்காக எதையும் இழக்கத் தயாராக இருக்கிறார்கள். நான் அப்படியல்ல. அதனால்தான் என்னை தேடிவந்து நல்ல கதை சொல்லும் தயாரிப்பாளர்களின் படங்களில் மட்டுமே நடிக்கிறேன்." என்று மீனா பேட்டி கொடுத்திருகிறார்.

ரம்பாவை மனதில் வைத்தே மீனா அந்தப் போடு போட்டிருக்கிறார். மீனாவை விட ரம்பாவின் கவர்ச்சி ரசிகர்களை கவர்கிறது. ரசிகர்களை மட்டும்தானா? முன்னணி ஹீரோக்கள் சிலரையும்தான்" என்கிறது தெலுங்கு சினிமா வட்டாரம். தமிழிலும் அதே கதைதான்.

## 'ஹிட்ல...

மம்முட்டி நடித்து ம...
பெற்ற படம் ஹிட்லர்...
தயாரிக்கப்போகிறார்க...
னாக நடிக்கப்போகிறா...
ஹிட்லர் படத்தில்...
சகோதரிகள். தமிழில் ஐ...
யாரை நடிக்கவைக்க...
நடந்துவருகிறது.
இயக்கம்-சிபிமலை...
இயக்குநர்தான்.
சிவாஜிகணேசன்...
உமாநாத் என்ற படத்...
தோல்வி. இப்போது பிர...
நடிக்கப்போகிறார்.

## ரஜினியின்...

அமிதாப் பச்சன்-...
இந்திப் படத்தை துவக்கி...
என்பது தெரியும் அல்...
போது பேச்சோடு பேச்...
பிடம் சொன்னாராம்,
ஒரு தமிழ் படத்தில்...
அதற்கு அமிதாப் சி...
சொன்ன பதில்; "நான்...
தில் நடி...
கேட்...
பட...



## மீண்டும் இணைகிறார்கள்

'பிரியம்' படத்தில் அருண் குமாருடன் ஜோடியாக நடித்து வருகிறார் மந்த்ரா. இப்படம் வெளிவருவதற்கு முன்னரே இவர் விஜய் ஜோடியாக 'செல்வா' என்ற படத்தில் நடிக்க ஒப்பந்தமானார். ஏனோ தெரியவில்லை இப்படத்தில் இருந்து மந்த்ரா தூக்கப்பட்டு இவருக்குப் பதிலாக சுவாதி நடித்து வருகிறார். சுவாதி தமிழில் கதாநாயகியாக அறிமுகமான 'தேவா' படத்தில் கதாநாயகனாக நடித்தவர் விஜய். 'தேவா'வை அடுத்து விஜய்-சுவாதி 'செல்வா'வில் மீண்டும் இணைகிறார்கள்.

## மினி சினி

* தமிழ்நாட்டில் திருநெல்வேலி போன்ற இடங்களில் 'இந்தியன்' படத்தின் நீளத்தைக் குறைத்துள்ளார்கள். 'பச்சைக்கிளிகள்.....' பாடல் காட்சி உட்பட பல காட்சிகள் வெட்டப்பட்டு விட்டன.

* அமீர்கான்-ஊர்மிளா நடித்து இந்தியில் ஒரு கலக்குக் கலக்கிய 'ரங்கீலா' தமிழ் பேசப்படவிருக்கிறது. 'ரங்கீலி' என்ற பெயரில் இப்படத்தைத் தயாரிப்பவர் விஜயசாந்தியின் கணவர் பிரசாத்.

* விஜயகாந்த்தின் 'தாயகம்' படத்தை இயக்கியவர் ஏ.ஆர்.ரமேஷ். இவர் அடுத்து அர்ஜுன் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவிருக்கிறார்.

* தமிழில் மணிரத்னத்தின் 'ஆனந்தம்' படத்தில் மட்டும் நடித்து வரும் கௌதமி, தெலுங்கில் நாகார்ஜுனா, மோகன்பாபு, ஜெகபதிபாபு ஆகியோருக்கு ஜோடியாக மூன்று புதிய படங்களில் நடித்து வருகிறார்.

* ஒளிப்பதிவாளர் அப்துல் ரகுமான் இயக்கும் 'மனசு' படத்திற்கு வசனம் எழுதுபவர் ஷாகுராஜ். இவர் 'புது வருஷம்' ,'ஒரு வழிப்பாதை'ஆகிய படங்களை ராஜ்கமல் என்ற பெயரில் இயக்கியவர்.

* சரத்குமாருடன் 'நேதாஜி' படத்தில் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமான ரம்பா இப்போது அந்தப்படத்தில் நடிக்கவில்லை. ரம்பாவுக்குப் பதில் 'நேதாஜியில் பம்பாய் நடிகை ஒருவர் நடிக்கவுள்ளார்.

* ஆர்.சுந்தர்ராஜன் இயக்கத்தில் விஜய் நடிக்கும் புதிய படமொன்றுக்கு 'காலமெல்லாம் காத்திருப்பேன்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் விஜய் ஜோடியாக டிம்பிள் என்ற புது முகம் அறிமுகமாகிறார்.

* கே. பாலச்சந்தரின் 'கல்கி' மற்றும் 'சொர்ணமுகி' ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்துவரும் பிரகாஷ்ராஜ், கன்னடத்தில் 'நாகபரணா' என்ற படத்தில் இரட்டை வேடத்தில் நடித்து வருகிறார்.

* 'சீவலப்பேரி பாண்டி', 'முஸ்தபா' ஆகிய படங்களைத் தயாரித்த பி.ஜி.ஸ்ரீகாந்த் தயாரிப்பில், பாரதிராஜா இயக்கத்தில் ராஜ்கிரண் ஒரு படத்தில் நடிப்பதாக இருந்தார். தற்போது இத்திட்டம் கைவிடப்பட்டுவிட்டது.

* 'ஜல்லிக்கட்டுக்காளை' படத்திற்குப் பின் மணிவாசகம் இயக்கத்தில் பிரபு நடிக்கும் புதிய படத்தில் பிரபுவிற்கு வழக்கம் போல் இரட்டை ஜோடி. ஒருவர் செண்பகா. மற்றவர் 'புதையல்' சாக்ஷி.

## வினிதா மறுக்கவில்லை

'பண்டிட் குயீன்' படத்தில் சீமாபிஸ்வாஸ் நிர்வாணமாக நடித்திருக்கிறார். அதேபோல நீங்களும் நடிக்கத் தயாரா? என்று வினிதாவிடம் கேட்டார்கள்.

"ஒரே ஒரு பூலான்தேவிதானே இருந்தார். அவரது கதை படமாகிவிட்டது. இனிமேல் அப்படி நடிக்கும் அவசியமுள்ள கதை வராது." என்று மறுப்புமில்லாத, ஏற்புமில்லாத பதில் சொல்லியிருக்கிறார் வினிதா.

"தணிக்கைக் குழுவின் அளவுகோல் தெரிந்து அந்த எல்லைக்குள்தான் கவர்ச்சிகாட்டமுடியும்." என்றும் சொல்லியுள்ளார் வினிதா. தணிக்கை மட்டும் இல்லா விட்டால் வினிதா எங்கேயோ போய் நின்றிருப்பார். நல்லவேளை தப்பினோம்.

'பண்டிட் குயீன்' படம் பற்றி ஒரு தகவல். அந்தப் படத்தில் நடித்ததற்காக விருது வாங்கிய நடிகை சீமா பிஸ்வாஸ். அவர் விருது வாங்கிய கையோடு அவரது கையில் விவாகரத்து நோட்டீஸ் கொடுத்துவிட்டுச் சென்று விட்டார் கணவர். நிர்வாணமாக நடித்ததில் இருந்து ஏற்பட்ட தகராறு.


வினிதா

## தந்தை இயக்கத்தில் மகன்

'தமிழ்செல்வன்' படத்திற்குப் பின் பாரதிராஜா இயக்கும் படம் 'கண்களால் கைது செய்' தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் உருவாகும் இப்படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார் பாரதிராஜாவின் மகன் மனோஜ். நடனப்பயிற்சி, சண்டைப்பயிற்சி பெற்றுள்ள இவர், 'பம்பாய்' படப்பிடிப்பின்போது மணி... திடம் உதவியாளராகப் பணிபுரிந்திருக்கி...

ஏ.ஆர்.ரகுமானிடம் இசையமைக்கக் ...டுள்ள பாரதிராஜா, இப்படத்தில் மனோ... ஜோடியாக நடிப்பதற்கு பம்பாய் நடிகை ஒருவரை நடிக்க வைக்க முடிவு செய்துள்ளார்.

## பானுவின் மகிழ்ச்சி

'இந்தியன்' படத்தில் கமலஹாசன் ஜோடியாக நடிக்க முதலில் பானுப்பிரியாவைத்தான் அழைத்தார்களாம். அவர் மறுத்துவிட்டார். சுகன்யா நடித்த கிழவி வேஷத்துக்குத்தான் பானுப்பிரியாவை கேட்டார்களாம். அதனால்தான் மறுப்பு. அதன்பின்னர் ஊர்மிளா நடித்த பாத்திரத்தில் நடிக்கக் கேட்டார்கள். கதைப்படி முக்கியத்துவம் இல்லாத பாத்திரம் என்பதால் அதையும் தள்ளிவிட்டாராம் பானுப்பிரியா. இரண்டையும் மறுத்துவிட்டு இறுதியாக ஊர்மிளாவுக்கு பின்னணிக் குரல் மட்டும் கொடுத்திருக்கிறார் பானுப்பிரியா.

'இந்தியன்' போன்ற பெரிய படத்தில் என் குரல் ஒலிப்பது மகிழ்ச்சிதான என்கிறார் பானுப்பிரியா. உங்கள் குரல் இளமையின் இரகசியம் என்ன பானுப்பிரியா?

கதாநா...
என்றதும், ஒ...
விட்டார் சா...
'காலம்...
பிடிப்பில்...
தான் சங்கீ...
காரணம்...
பாடல்...
விடம் வ...
கைவரிசை...
ராஜன். ப...
வேண்டாம்...
போனாரா...
"இனிமேல்...
ஆள்கூட ஜே...
நடிக்க ம...
என்று...
சொல்லிய...
ராம்.


ராஜா-அனந்தராஜ்-மோகினி படம் அந்தநாள்



படிப்பகம்

www.padippakam.com

...ர் பிரபு

...லையாளத்தில் வெற்றி ... தமிழில் அதனைத் ...ள். பிரபு கதாநாயக ...ர்.
...மம்முட்டிக்கு ஐந்து ...ந்து சகோதரிகளாக ...ாம் என்று தேர்வு ...யில். மலையாள
...முன்னர் ஹிட்லர் ...ல் நடித்தார். படம் ...ு 'ஹிட்லர்' படத்தில்

... வியப்பு

...ஜயசாந்தி நடிக்கும் ...வைத்தது ரஜினிகாந்த் ...வா. படப்பூஜையின் ...ாக ரஜினி அமிதாப் ...'அமிதாப்ஜி நீங்கள் ...நடிக்க வேண்டும்." ...ித்துக் கொண்டே ...ரெடி. உங்கள் படத் ...வும் ஓ.கே." பதிலைக் ... ரஜினி ஆச்சரியப் ...ப் போனாராம்.



# சினி விசிட்

## கனகாவின் பிடிவாதம்

'சூர்யா' என்றொரு மலையாளப்படம். கனகாவும், பிரியாராமனும் கதாநாயகிகளாக நடிக்கின்றனர். படப்பிடிப்பின்போது இருவரும் லேசாக பிரச்சனைப்பட்டுக்கொண்டார்கள்.

என்ன பிரச்சனை? ஒரு கவர்ச்சிக் காட்சிக்காக இருவருக்கும் கொடுக்கப்பட்ட உடைகள் தான் பிரச்சனைக்கு காரணமாம். ஒருவருக்கு ஆகக் குறைச்சலான ஆடையும், இன்னொருவருக்கு சற்று கூடுதலான மறைப்புள்ள ஆடையும் கொடுத்திருக்கிறார்கள். கனகாவுக்குத்தான் கூடுதல் மறைப்புள்ள ஆடையாம்.

சரி, யார் பிரச்சனைப்பட்டது என்கிறீர்கள்? கனகாவேதான். பிரியாராமன் தன்னைவிட கவர்ச்சியில் அசத்திவிட்டால் என்ன செய்வது? அதுதான் கனகாவின் கோபம். அதன்பின்னர் கனகாவுக்கும் அவரது கட்டுடலை வெளிப்படுத்தும் குறைவான உடை வழங்கப்பட்டதாம். அப்போதுதான் கனகாவுக்கு திருப்தியே வந்ததாம். என்னவொரு ஈடுபாடு! யப்பா!

## ரஞ்சிதா ஊறுகாய்

உயரமான நடிகைகளுக்கு உள்ள முக்கியமான, அத்தியாவசியப் பிரச்சனை யாதெனில், சகல ஹீரோக்களையும் கட்டியணைத்து நடிக்க இயலாது.

நடிகை ரஞ்சிதாவுக்கும் அதே தொல்லைதான். அப்படியிருந்தும் தமிழ், தெலுங்கு, மலையாளம் மூன்றிலும் தலைகாட்டிக் கொண்டிருக்கிறார்.

ரஞ்சிதாவின் அம்மா ஊறுகாய் வியாபாரம் செய்கிறார். ரஞ்சிதாவும் பிரமாதமாக ஊறுகாய் போடுவாராம். சினிமா வாய்ப்பு பறிபோனாலும் இருக்கவே இருக்கிறது ஊறுகாய் வியாபாரம்.

## அப்பா சாமி

அரவிந்தசாமிக்கு புதுப்பதவி கிடைத்திருக்கிறது. அப்பாவாகிவிட்டார். பெண் குழந்தை பிறந்துள்ளது. படப்பிடிப்பு எதிலும் கலந்து கொள்ளாமல் மனைவிக்கு பக்கத்திலேயே இருக்கிறார். அடுத்த இரண்டு மாதங்கள் மனைவிக்கு அருகில்தான் இருப்பாராம். வெளியூர் படப்பிடிப்பு எதிலும் கலந்துகொள்ளமாட்டார். பொறுப்புள்ள அப்பா.

## கண்ணாடி ஆடை

'பிரியம்' படத்தில் 'மந்த்ரா' வுக்கு மழைக்காட்சி ஒன்றுக்காக கொடுக்கப்பட்ட ஆடை பயங்கரமானது. கண்ணாடிபோன்ற ஆடை. அதனுடன் மழையில் வேறு தெப்பமாக நனைகிறார். ரசிகர்களின் கதி என்னாகப்போகிறதோ?

உடையைக் கண்டதும் மந்த்ரா முரண்டு பிடிப்பார் என்று நினைத்தாராம் இயக்குநர். ஆனால் 'மந்த்ரா'வோ வெகு அலட்சியமாக வாங்கி அணிந்துகொண்டு நடித்தாராம்.

ஒத்துழைப்பு விடயத்தில் பெயர் பெற்றுவருகிறார் மந்த்ரா. பிழைத்துக்கொள்ளத் தெரிந்தவர்.

## பாடலுக்கு 15 இலட்சம்

'புது நிலவு' படம் வெளிவந்துவிட்டது. கவுண்டமணியும், ஜோதிமீனாவும் ஜோடியாகப் பாடி ஆடிய பாடல் காட்சிக்காக செலவான தொகை பத்து இலட்சம்.

இப்போது 'பிரியம்' படத்தில் வடிவேலுவுடன் ஆடுகிறார் ஜோதிமீனா. புது நிலவைவிட பிரமாண்டம் காட்டவேண்டும் என்று சொல்லி விட்டார் வடிவேலு. ஜோதிமீனாவும் பிரமாண்டம் காட்ட, கிட்டத்தட்ட பதினைந்து லட்சம் ரூபா செலவில் பாடல் காட்சி எடுக்கப்பட்டுள்ளதாம்.

இப்போதெல்லாம் வடிவேலுவுடன் பிசின் மாதிரி ஒட்டிக்கொண்டிருப்பவர் ஜோதிமீனா தான். 'பிரியம்' படத்திலும் அந்த நெருக்கம் தெரியும்.

## யார் கொலையாளி?

ரகுமான், நிரோசா நடித்து விரைவில் வெளியாகவுள்ள படம் 'வசந்தம்.' சரத்பாபு, நிழல்கள் ரவி, கோவை சரளா ஆகியோரும் நடிக்கின்றனர். இசை, இளையராஜா. இயக்கம், சிறுமுகை ரவி.

உயிருக்கு உயிராக காதலித்த பெண் வேறொருவனை திருமணம் செய்துகொள்கிறாள். காதலன் கொதிப்படைகிறான். அந்த நேரம் பார்த்து அவள் கொலை செய்யப்படுகிறாள். கொலை செய்தது யார்? அதுதான் கதை. சஸ்பென்ஸ் கலந்த படம்.

## பிரபுவின் முழக்கம்

"அரசியலில் நடிகர்கள் குதிப்பது நல்லதா?" இந்தக் கேள்விக்கு பிரபு சொன்ன பதில்:

"எனக்கு அரசியல் ஆர்வம் கிடையாது. ஒரு இந்தியக் குடிமகன் என்ற முறையில் பத்திரிகை படிக்கிறேன். சட்டத்தரணி, டாக்டர், என்ஜினியர் போன்றோர் அரசியலுக்கு வரும்போது நடிகர்கள் வருவதில் என்ன தவறு?

கடந்த முப்பது வருடங்களாக தமிழ் நாட்டு தலைவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்? சினிமாவில் இருந்துதானே. நாங்கள் பிரஜைகள் இல்லையா? மக்களுடன் நாங்கள்தான் நெருங்கிப் பழகுகிறோம்." என்று சொல்லியுள்ளார் பிரபு.

பிரபு-சத்யராஜ் நடித்துள்ள 'சிவசக்தி' விரைவில் வெளியாகப்போகிறது. அதையடுத்து பிரபு-மதுபாலா நடித்துள்ள 'பாஞ்சாலங்குறிச்சி', பிரபு-நக்மா நடித்துவரும் 'பெரியதம்பி' ஆகிய படங்கள் வெளியாகும்.



தபு
படம்: காதல் தேசம்



## சிட்டி பஸ்

கவுண்டமணி, செந்தில், எஸ்.வி. சேகர் மூவரும் இணைந்து தரப்போகும் நகைச்சுவை விருந்து 'சிட்டி பஸ்' கதாநாயகிகளும் மூன்றுபேர். கலையரசி என்னும் புதுமுகம் அறிமுகமாகிறார். கோவை சரளா, இளவரசி ஆகியோரும் நடிக்கின்றனர். இருவருக்கும் கதாநாயகிகளாகச் சான்ஸ் கிடைத்திருக்கிறது.

இயக்கம், விஜயசிங், இசை; சங்கர் கணேஷ்.

### முகப்பில்

விஜயகாந்த்
சரத்குமார்
மீனா

### கடந்தவாரத் தவறு

சென்றவாரம் முகப்பில் கவுண்டமணி- என்பதற்கு பதிலாக விஜயகாந்த் என்று தவறுதலாக இடம்பெற்றிருந்தது. முகப்பு படங்களில் கடைசி நேரத்தில் செய்யப்பட்ட ஒரு மாற்றத்தால் ஏற்பட்ட தவறு அது.

வடிவேலு-ஜோதிமீனா
படம்: பிரியம்

## பாண்டியராஜனின் கைவரிசை

'காலம் மாறிப் போச்சு' படத்தில் பாண்டியராஜனுக்கு ஜோடியாக நடித்தவர் சங்கீதா. படமும் ஹிட்.

தனது அடுத்த படம் ஒன்றுக்கும் சங்கீதாவை சிபாரிசு செய்தார் பாண்டியராஜன். படத்தின் பெயர்; 'மனைவி ஒரு மகாலட்சுமி' சங்கீதாவை ஒப்பந்தம் செய்யப் போனார் தயாரிப்பாளர்.

... யார் என்று கேட்டார் சங்கீதா. 'பாண்டியராஜன்' ...கும்பிடுபோட்டு தயாரிப்பாளரை திருப்பி அனுப்பி...ர்.

...ப் போச்சு' படப் ...் ஒரு சம்பவம் ...ன் மறுப்புக்குக் ... தகவல்.
...சியில் சங்கீதா ... தாண்டியும் ...டிவிட்டார் பா. ...டிப்பை குழப்ப ...ு அனுசரித்துப் ...கீதா. அப்போதே ...ந்த ...ாக ...ன்" ...தா ...தா

## இந்தியில் ஜீவா

பிரபல ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராமிடம் உதவியாளராகப் பணிபுரிந்து பின்னர் மோகன்லால் மலையாளத்தில் நடித்த 'அபிமன்யு' (தமிழில் 'அரசன்') படத்தின் மூலம் ஒளிப்பதிவாளராக அறிமுகமாகியவர் ஜீவா. 'அபிமன்யு'விற்குப் பின் ஷங்கர் இயக்கிய 'ஜென்டில் மென்', 'காதலன்', 'இந்தியன்' ஆகிய படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தார்.

தமிழ், மலையாளம் ஆகிய மொழிப் படங்களைத் தொடர்ந்து இவர் அனில்கபூர்-மாதுரி டிக்ஷிட் நடிக்கும் 'புகார்' என்ற படத்தின் மூலம் இந்தியில் நுழைகிறார்.

## நடு இரவில் சில்க்

பிருதிவிராஜ் என்பவனுடன் நெருக்கமாகப் பழகுகிறார் சில்க் சுமிதா-ஒருநாள் போதையில் வரும் பிருதிவிரார்ஜ் சில்க் சுமிதாவை கட்டியணைக்கிறான். சுமிதா திமிறுகிறார். அவனோ முத்தமிடத்துடிக்கிறான். சுமிதா வெகுண்டெழுந்து ஒரே அறை! போதை முறிந்தது அவனுக்கு. "உன்னை கொலை செய்தே தீருவேன்." என்று சொல்லிவிட்டுப் போகிறான். ஒருநாள் சில்க் சுமிதா கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறாள்?

தான் கொலை செய்யவில்லை என்கிறான் பிருதிவிராஜ். அப்படியானால் கொலையாளி யார்? 'நடு இரவில்' படம் வந்தால்தான் புதிருக்கு விடை தெரியும்.

சில்க் சுமிதா கதாநாயகியாக நடிக்கும் படம் 'நடு இரவில்'. பிருதிவிராஜ், ஒய்.ஜி. மகேந்திரன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

சில்க் சுமிதாவை விளம்பரப் படங்களுக்கு போஸ் கொடுக்கும் அழகியாக நடிக்கவைப்பதால், கவர்ச்சிக்கு குறைச்சல் இருக்காது.



பிரசாந்த்-கஸ்தூரி





## மனைவியின் ஞாபகத்தில்

இந்தித் திரையுலகையும் விட்டு வைக்கவில்லை ரம்பா. தற்கொலை செய்து செத்துப்போன திவ்யபாரதிமீது இந்திப் படத் தயாரிப்பாளர்கள் பலர் பைத்தியமாக இருந்தார்கள். அவர்களில் ஒருவர் சாஜித் நாடியாவாலா. அவர் வேறு யாருமல்ல. நடிகை திவ்யபாரதியின் கணவர்.

அவரது புதுப்படம் ஒன்றில் நடிக்கிறார் ரம்பா. பம்பாயில் ரம்பா தங்கியிருக்கும் ஹோட்டலுக்கு அடிக்கடி சென்று வருகிறார் நாடியாவாலா.

ரம்பாவைக் கண்டதும் சாஜித் நாடியாவாலாவுக்கு பழைய ஞாபகங்கள் வந்துவிட்டதாக்கும். ரம்பாவும் தாராளமனதுடன் அவரைத் தட்டிக் கொடுத்துவருகிறார் என்று பம்பாய் வட்டாரம் கிசு, கிசுக்கிறது.

## பாண்டியனின் மயக்கம்

சினிமாவில் நடன இயக்குநரிடம் உதவி நடன இயக்குநராக பணியாற்றுகிறான் பாண்டியன். படப்பிடிப்பின்போது கதாநாயகிக்கு நடன அசைவுகளைச் சொல்லிக்கொடுக்கிறான். அந்தச் சமயம் பார்த்து அங்கு வருகிறாள் ஜானகி. பணக்கார வீட்டுப் பெண். பாண்டியனின் நடனத்தைக் கண்டு மனதைப் பறிகொடுக்கிறாள். ஜானகியின் அழகில் பாண்டியனும் மயங்குகிறான்.

இருவரும் தீவிரமாக காதலிக்கத் தொடங்க, ஜானகி வீட்டில் எதிர்ப்புக் கிளம்புகிறது. அதனால் அருவரும் இரகசியத் திருமணம் செய்துகொள்கின்றனர்." இக் காட்சி இடம்பெறும் படம் 'அவ்வை சண்முகி.'

பாண்டியனாக கமலும், ஜானகியாக மீனாவும் நடித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# நல்ல தம்பதிகளாக நடந்து கொள்ள...

கணவன்-மனைவி எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

ஏன் இவர்களுக்கிடையே பூகம்பம் வெடிக்கின்றது?

இவர்கள் என்றும் ஒற்றுமையாக இருக்க எப்படி நடந்து கொள்வது?

'சிக்னேச்சர்' என்ற ஆங்கில இதழ் சில யோசனைகளைத் தந்திருக்கின்றது. அவற்றிலிருந்து சில...

* முன்னர் இருந்த அந்த அழகு இப்போது இல்லையே என்று கல்யாணத்தின்பின் ஒருவரைப் பார்த்து ஒருவர் புலம்பாதீர்கள்.
* கல்யாணத்திற்குப் பிறகு உங்களுக்கு யார் முக்கியம்? உங்கள் பெற்றோர்கள் அல்ல; உங்கள் துணைவர்தான் கடைசிவரை நிரந்தரம். எனவே எந்தச் சங்கதிகளையும் மறைக்க முயற்சிக்காதீர்கள். இரகசியம் என்பதே உங்களுக்குள் இருக்க இடந்தராதீர்கள். அன்றைய சம்பவங்களை நல்லதோ; கெட்டதோ பயமின்றி உங்கள் மனைவி/கணவனிடம் சொல்லி விடுங்கள்.
* உங்களைப் பற்றி, உங்கள் ரசனையைப் பற்றி, விருப்பு வெறுப்புகளைப் பற்றி, உங்கள் உணர்வுகளைப் பற்றி-உங்கள் மனைவியிடம்/கணவனிடம் நாசூக்காகச் சொல்லுங்கள். அதற்காக எந்த நேரமும் உங்களைப் பற்றியே பேசி போரடிக்காதீர்கள்.
* நல்லதோ கெட்டதோ இருவரும் சேர்ந்தே முடிவெடுங்கள். அப்படி இல்லாமல் தனியாக கணவனோ/மனைவியோ ஒரு முடிவை எடுத்து அது சரியில்லாமல் போகும்போது ஒருவர் மேல் ஒருவருக்கு வீணான கசப்புணர்ச்சி ஏற்பட வாய்ப்புண்டு.
* ஒருவர் கோபப்பட்டால் மற்றவர் சாந்தமாகி விடுங்கள். இரண்டு கை தட்டினால் தானே ஓசை வரும்! சின்ன சம்பவமென்றாலும் வாக்கு வாதத்தில் பேசப்படும் சொற்களால் எங்கேயோ திசை திரும்பிவிடும். சண்டை- சம்பவம் பற்றி இருக்காது. பேசிய சொற்களில் தான் இருக்கும். எனவே நீயா? நானா? என வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள்.



* உங்கள் பிறந்த வீட்டினரின் முன்னால் உங்கள் கணவனையோ; மனைவியையோ குற்றம் குறை சொல்லாதீர்கள். இது தன்மானப் பிரச்சனையை உண்டு பண்ணும். தாங்க முடியாத கோபத்தையும் உருவாக்கும்.
* கோபம் இருவருக்கும் பொதுவானது. கணவன்மாரே! கோபம் உங்கள் மனைவிக்கும் வரும். ஆகவே கணவன்மாரே யோசித்துக் கோபப்படுங்கள். இப்படி யோசித்து கோபித்தால்... போங்கள் உங்களுக்கு கோபம் வருமா? பாருங்கள். வராதே!
* மேசை ஒழுங்கில்லை: உடுப்பு அழுக்கு; பூமரங்களுக்கு தண்ணீர் ஊற்ற வில்லை; சேட் பொத்தான் தைக்கவில்லை: இப்படியான சில்லறை வேலைகளை மனைவி மேல் சுமத்தாதீர்கள். இதற்காக எரிந்து விழாதீர்கள். இவைகளை நீங்கள் செய்தால் என்ன? குறைந்தா போய்விடும்? இவைகளை மனைவிதான் செய்ய வேண்டும் என சட்டதிட்டம் போட்டு மனைவியை வருத்தாதீர்கள்!
* வீட்டிலே மனைவியை அடைத்து வைக்காதீர்கள். கோவில், சினிமா, பீச், உறவினர்கள் வீடு என நேரம் கிடைக்கும்போது அழைத்துச் செல்லுங்கள். நேரம் இல்லையென ஒதுங்கி விடாதீர்கள். அப்படி ஒதுங்கினால் மனைவியும் ஒதுங்கி விடுவாள்.
* நேரடியான பதிலைச் சொல்லி மனம் நோகச் செய்யாதீர்கள். உதாரணமாக உங்கள் கணவர் சினிமாவுக்கு அழைத்துச் செல்வதில்லை என்றால் அதை அவருக்கு உணர்த்த.. 'பாருங்க சினிமா பார்த்து கனநாளுங்க... எனக்கு விருப்பமில்லை... பிள்ளைங்க தான்..' என நைசாக சொல்லுங்க, போதும்.

சரி-படிச்சு முடிச்சிட்டீங்கதானே! பாருங்க இனி நீங்க நல்ல தம்பதிகள்தான் பாருங்க.

**திருமலை சுந்தரப்பிரியா.**

# விருந்தோ விருந்து

விருந்து மற்றும் சாப்பாடு போன்ற முறைகளிலும் பழக்க வழக்கமானது பரிசுத்தமான முறையில் இருக்க வேண்டும்.

ஒருவரது வீட்டிற்கு விருந்துக்குச் செல்லும்போது, அதாவது சிலவகை உணவுகளை உட்கொள்வது உங்களுக்குப் பிடிக்கவில்லை எனில் அல்லது உங்களது சமய நெறி முறைக்குப் பொருந்தாதிருப்பின் உங்களுக்கு விருந்து கொடுப்பவரிடம் அதைத் தெளிவாகச் சொல்லிவிடுங்கள். அத்தோடு உணவு வகைகளில் உங்களுடைய விருப்பு-வெறுப்புக்களை முன்கூட்டியே விருந்து தருகிறவர்களிடம் கூறுவது நலம் பயப்பதாகும். அதாவது தொலைபேசி எண் குறிக்கப்பட்டிருந்தால், உங்கள் இசைவைத் தொலைபேசியிலேயே தெரிவித்து விடலாம்.



உங்களுக்கு வழித்துணையாகவோ அல்லது நண்பராகவோ ஒருவரை விருந்துக்கு அழைத்துச் செல்ல விரும்பினால், அத்தகவலை உங்களுக்கு விருந்து கொடுக்கும் நண்பர் அல்லது அம்மையாரிடம் இசைவு கேட்பது நல்ல பழக்கமாகும்.

குறித்த நேரத்தில் போவது மிக முக்கியம். காலந்தாழ்த்திப் போவதை வழக்கமாகக் கடைப் பிடித்தால், நீங்கள் மற்றவர்களை அவமதிப்பதாகக் கருதப்படும். நீங்கள் ஒருவரைச் சந்திக்க ஒப்புக்கொண்டு போய்ச் சேருவதற்குச் சில நிமிடங்களுக்கு மேல் தாமதம் ஆகுமெனின் கூடுமானவரை அந்த அன்பருக்கு அறிவித்துவிட வேண்டும்.

சில அழைப்புகளில் இரவு 9 மணி என்பது போன்று ஏதாவது ஒரு நேரத்தைக் குறிப்பிட்டிருப்பார்கள். வேறுசில அழைப்புக்களில் மாலை 5 மணிக்குமேல் 7.30 மணிக்குள் வரலாம் என்பது போல, கால அளவு தாராளமாகக் குறிப்பிட்டிருக்கலாம். அப்படியானால் நீங்கள் அந்த நேரத்திற்குள் எப்பொழுது வேண்டுமானாலும் செல்லலாம். ஆனால் அது கடைசி அரைமணி நேரத்திற்குள் போய்ச் சேரலாகாது.

விருந்துக்குப் பின், உங்களுக்கு விருந்து படைத்த அம்மையாருக்கு நன்றி கூறிக் கடிதம் எழுதுவது பண்பின் இலக்கணமாகும். நீங்கள் இன்னொருவர் வீட்டில் விருந்தினராக இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கியிருந்தால், அவர்களுடைய விருந்தோம்பலைப் போற்றி எழுத வேண்டும்.

யாராவது ஒருவருடைய பிறந்த நாள் அல்லது திருமண ஆண்டுவிழா, கிறிஸ்துமஸ், ரம்ழான் போன்ற பண்டிகையைக் கொண்டாடுவதற்காக அழைக்கப்பட்டிருந்தாலன்றி ஏனைய நாட்களில் உங்களுக்கு விருந்து தரும் அன்பர் அல்லது அம்மையாருக்கு அன்பளிப்புப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டியதில்லை.

விலையுயர்ந்த பொருட்களைத்தான் அன்பளிப்பாகக் கொடுக்க வேண்டும் என்பதுமில்லை. உங்களுக்கு விருந்து நல்கும் அம்மையார், உங்களுடைய அன்பளிப்புப் பொருட்களை விட உங்களுடைய நல்லெண்ணத்தையே பெரிதும் போற்றுவார்.

# உணவுப் பழக்கங்கள்

அமெரிக்க மக்கள் சாப்பிடும் உணவு வகைகளில் முப்பது சதவிகித உணவுப் பொருட்கள்-பாற்பொருட்களாகும். அதாவது பாலில் இருந்து தயாரிக்கப்பட்ட உணவு வகைகள்.

பசும்பாலைவிட ஆட்டுப்பால்தான் உலகம் முழுவதும் அதிகம் விரும்பி அருந்தப் படுகிறது.

வெஜிட்டபிள் பிரியாணி, இந்தியாவுக்குப் படை எடுத்து வந்தபோது- மகா அலெக்ஸாண்டரால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். மட்டன் (ஆட்டிறைச்சி) பிரியாணியைக் கண்டு பிடித்தவர் சாஜஹான் மன்னரின் காதலி மும்தாஜ். இவருக்குத்தான் அவரது அன்புக் கணவரால் தாஜ்மஹால் கட்டப்பட்டது.



உலகில் அதிகமாக கோப்பி குடிக்கும் மக்கள் உள்ள நாடு சுவீடன்.

உலகில் அதிகமாக மட்டன் சாப்பிடும் மக்கள் உள்ள நாடு ஆர்ஜென்டினா. தினசரி கால் கிலோ அளவு மட்டன் ஒவ்வொருவரின் உணவிலும் இங்கே இடம்பெறுகிறது.

ஒரு மனிதன் ஆண்டு தோறும் ஒரு தொன் எடையுள்ள உணவையும், பானங்களையும் சாப்பிடுகிறான். கண்டபடியாகச் சாப்பிடும் மக்கள் இந்தக் கணக்கில் சேரவில்லை.

உலகம் முழுவதும் அதிகம் விரும்பிச் சாப்பிடப்படும் பழம் எது? அதிகம் விளையும் பழம் எது? ஆதிமனிதர்கள் சாப்பிட்ட பழம் எது? புவி ஈர்ப்பு விசையைக் கண்டுபிடிக்க உதவிய பழம் எது? நான்கிற்கும் ஒரே பதில்: அப்பிள் பழம்.

உலகில் உருளைக்கிழங்கு அதிகமாகச் சாப்பிடுவது அமெரிக்கர்களே. ஆண்டு தோறும் 60 கிலோ உருளைக்கிழங்கை ஒவ்வொரு அமெரிக்கரும் சாப்பிடுகின்றனர்.

# சமைப்போம் சுவைப்போம்

## மாங்காய் துவையல்

**தேவையானவை:**

| | |
|---|---|
| பெரிய மாங்காய் | - 1 |
| பச்சை மிளகாய் | - 8 |
| பூண்டு | - 10 பல்லு |
| உப்பு | - சிறிதளவு |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |
| கடுகு | - சிறிதளவு |
| எண்ணெய் | - அளவாக |

தொகுத்துத் தருவது: சுகந்தினி

**செய்முறை:**

மாங்காயின் தோலைச் சீவி, தேங்காய்த் துருவியில் வைத்துத் துருவிக் கொள்ளவும். அத்துடன் பச்சை மிளகாய் போட்டு ஆட்டுக் கல்லிலோ அல்லது மிக்ஸியிலோ தேவையான அளவு உப்புக் கலந்து விழுதாக அரைக்கவும். கடைசியில் பூண்டை உரித்துப் போட்டு அரைக்கவும். அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து எண்ணெய் விட்டுக் கொதித்ததும், கடுகு தாளித்துக் கறிவேப்பிலை போட்டு வெடித்தவுடன், அரைத்ததை அதில் போட்டு நன்கு வதக்கி எடுக்கவும். தயிர் சாதத்திற்கு மிகவும் சுவையாக இருக்கும்.

# பிள்ளைகளைப் பாராட்டுங்கள்

தன்னம்பிக்கை என்பது ஒருவர் பிறக்கும் போதே உடன்பிறக்கிற குணம் இல்லை. பெற்றோரால், ஆசிரியரால், சுற்றி இருப்பவர்களால்- நாம் பெறுகின்ற தோல்விகளால் தன்னம்பிக்கை வளர்க்கப்படுகிறது. அழகு, தோற்றம், திறமை இவைகளும் தன்னம்பிக்கையூட்டுகின்றன.

மகனோ, மகளோ ஏதாவது ஒன்றைச் செய்தால்-பாராட்டத் தகுந்ததாக இருந்தால், நன்றாக மனம் விட்டுப் பாராட்டவேண்டும். அதற்காக 'ஆஹா ஓஹோ' என்று பாராட்டவும் வேண்டாம்.

"கண்ணா! கட்டுரை நன்றாக, அழகாக எழுதியிருக்கிறாய். இன்னும் நிறையப் படிச்சு, இன்னும் நன்றாக எழுது; நானும் உனக்கு உதவி செய்கிறேன்," என்று அப்பா, அம்மா சொல்லும் பொழுது மகனுக்கு உற்சாகம் கரைபுரளும். நிறையப் படிக்கவேண்டும். நல்லா எழுதவேண்டும். எல்லாரும் பாராட்டும் படியாகச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எழும். சின்னதாக எரிகிற விளக்குக்கு ஒரு தூண்டுகோல் தான் தன்னம்பிக்கை.



# ஆரோக்கிய அழகு

மருதோன்றி இலையை அரைத்துக் கைகளில் இட்டுக் கொள்வதால் அழகு மட்டும் தருவதில்லை. ஆரோக்கியமானதும் கூட. உடல் குளிர்ச்சி பெறும். செயற்கை முறையில் கைகளில் மருதோன்றி பூசிக் கொள்வது உடலுக்குக் கேட்டை விளைவிக்கும். நகம் சம்பந்தமான நோய்கள் வராது.

தேனுடன் முட்டையைக் கலந்து சாப்பிட்டால் ஆஸ்துமா குணமடையும். குளிர்ந்த நீரில் தேன் கலந்து சாப்பிட்டால் சளி பிடிக்காது. தேனுடன் வெங்காயச்சாற்றைக் கலந்து சாப்பிட்டால் கண்பார்வை பிரகாசம் பெறும். தேனுடன் மாதுளம் பழச்சாற்றைச் சம அளவு சேர்த்துச் சாப்பிட்டால் இருதய நோய் நீங்கும்.

# கன்னத்தைக் கிள்ளாதீர்



நம் உடல் பளபளப்பாகவும், ஆரோக்கியமாகவும், இளமையாகவும் இருக்கப் புரதம், கொழுப்பு, மாச்சத்து, விட்டமின்கள், தாதுப் பொருட்கள் ஆகியவை மிகவும் அவசியம்.

பழங்கள், பழச்சாறுகள் (முக்கியமாக எலும்மிச்சை, தோடம்பழவகை) தேன் முதலியவை இரத்தத்தை சுத்திகரித்து நம் சருமத்தை அரோக்கியமாகவும், பளபளப்பாகவும் வைக்க உதவும். அதுவும் கோடைக் காலத்தில் நம் சருமத்திற்கு இவை மிகவும் அவசியம்.

பூசணி, வெள்ளரி, முலாம்பழம், வத்தகைப் பழம், இளநீர் இவற்றைத் தவிர சிறிது சீரகத்தை நீரில் போட்டுக் காய்ச்சி அந்த நீரை அருந்தினால் கோடைகாலத்தில் சருமத்தின் நிறம் மங்காமல் காக்கும். சிவப்பும், செழுமையும் அதிகரிக்கும்.

நம் தோலின் அழகைப் பாதிக்கும் முகப்பரு தொல்லைகளை விட்டமின் 'ஏ' கிறீம் களை உபயோகித்துப் போக்க முயல வேண்டும். கையால் கிள்ளி விடக்கூடாது. எனவே நகத்தை விரல்களிலிருந்து வெட்டி விடுங்கள்.

# படுத்துக்கொண்டு படிக்கலாமா?

எக்காரணம் கொண்டும், படுத்துக் கொண்டு படிக்கக்கூடாது. இதனால் உடலுக்கும், மூளைக்கும் பல விதங்களில் தொல்லை.

உதாரணமாக, ஒருக்களித்துப் படுத்துக் கொண்டே படிக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இச்சமயத்தில் கண்களைப் புவி ஈர்ப்புக்கு எதிராக மேல்நோக்கியும், கீழ்நோக்கியும் ஓட்ட வேண்டும். நிமிர்ந்து படுத்தவாறு வாசித்தால் புத்தகத்தை உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டு படிக்க வேண்டும். இது கடினமான செயலாகும்.

குப்புறப்படுத்துக் கொண்டு படிக்கும் போதும் கண்ணின் தசைகள் பூமியை நோக்கி இழுக்கப்படும். இதனால், கண்களுக்கு ஒளியைத் தாங்கும் சக்தி குறைவதுடன், கண்களை இயக்குவதும் கடினமாகிவிடும்.

படுத்திருக்கும்போது மூளை மற்ற நிலைகளை விட மந்தமாகவே வேலை செய்யும். அதாவது நாம் படுத்திருக்கும்போது நம் மூளையும் படுத்துவிடும்.



# நன்றாகத் தூங்கட்டும்

குழந்தைகளைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டுங்கள். நன்றாகக் காய்ந்து சுத்தமான துணியால் குழந்தைகளை மூடி தூளியில் அல்லது தொட்டிலில் கிடத்த வேண்டும். குழந்தைக்கு இசை பிடித்தால் தாலாட்டுப் பாடித் தூங்க வைக்கலாம். இளம் சுடுநீரில் குழந்தையைக் குளிப்பாட்டிய பின்பு தூங்க வைக்க வேண்டும். குழந்தையின் வயிறு நிறைந்திருந்தால் நன்றாகத் தூங்கும். குழந்தையைத் தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்துக் கொண்டே சிறிது தூரம் நடந்தாலும் தூங்கி விடும்.

# எது அழகு

மெலிதான தேக அமைப்புக் கொண்ட பெண்கள் பெரிய பூக்கள் கொண்ட சேலையையும் கொஞ்சம் தடிமனான பெண்கள் சிறிய பூக்கள் கொண்ட சேலையையும் அணிந்தால் கவர்ச்சியாக இருக்கும்.

ஒல்லியான பெண்கள் முடியைப் பின்னிக் கொள்ள வேண்டும். தடிமனான பெண்கள் கொண்டை போட்டுக் கொண்டால் அழகாக இருக்கும்.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## விந்துல்லை வாசகிக்கு அதிஷ்டம்

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | எஸ். லச்சுமி |
| | பீ-26, வட்டகொட பஸார், லிந்துல்ல. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்


**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** X

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 13-07-1996

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




படிப்பகம்

www.padippakam.com

## மௌனம் கலைத்து வா

பிரிய ஸகீ...!
பனியாய் உருகிய
பாசப் பொழுதுகள்
எங்கே ஒழிந்துக்கொண்டன?
***
மௌன இறுக்கத்தில்
நம் வாலிபம்
கொள்ளையடிக்கப்படுவது ஏன்?
***
பௌர்ணமி ஹிருதயம்
அமாவாசைக் கறுப்புப்பூசி
பகிஷ்கரிப்பது ஏன்?
***
தென்றலாய் ஸ்பரிசிக்க
வேண்டிய மூச்சுக்காற்று
எரிமலையாய் தீய்ப்பது ஏன்?
***
கல்லெறிபட்டும்
கொள்கையை விடாத
நதிகள் போல...
நகர்கிறது என் ஜீவிதம்!
***
அழுத்தும் சிலுவையை
ஏற்றிக்கொண்டும்
புன்னகைக்கும்
இயேசுநாதர் போல
உன் புதிய விளக்கம்!
***
தகர்க்கவே முடியாத
உன் இரும்பு மனதினை
சற்று தளர்த்திக்கொள்;
பிடிவாதத்தையும்கூட
***
இமைகள் சிறகடிக்க
பனிப்பார்வை வீசு,
என்னுள்ளத்து எரிபாறைகள்
பஸ்பமாகிவிடும்!
***
ஷேக்ஸ்பியரின்
காவியநாயகியே..!
தமிழ் இலக்கிய சாகரத்தில்
நாகம் தீர்க்க வா..
மௌன மயக்கத்தை
கலைத்து விட்டு!

ஆத்மராஜா நூர்ச்சந்திரிக்கா.



தேன் கிண்ணம்

## மறக்க முடியவில்லை

நடு இரவில்
சாரத்தைப் பிடித்தபடி
உள்ள இன்னும் போடாமல்
நாலு ஊர்தாண்டி
ஓடி ஒளித்ததை
மறக்க முடியவில்லை...!
**
அதிகாலையில்
வேலைக்குப்போன அப்பா
மாலையாகியும்
வீடு திரும்பவில்லை;
என்ன ஆச்சோ?
என்னமோ ஏதோ என்று
பதறிய நாட்களை
மறக்க முடியவில்லை....!
**
கிடைக்கின்ற நேரமெல்லாம்
நண்பரோடு இருவராக
சைக்கிள் ஏறி
அதாலபோய் இதாலவந்து
குமருகள்
போன இடமெல்லாம்
வேர்க்க(க்) களைக்க
மிதி மிதித்து
காய்ந்து வழிந்து...
பின்னால்
வீடு வந்து
அம்மா திட்ட...
அப்பா கடிக்க...
முஞ்சி நீண்டபடி
மூலையில்
குந்திய நாட்களையும்
மறக்க முடியவில்லை...!
**
அறையில்
இருந்த என்னை
வீட்டுக்குள் வந்த
படையினர் பிழந்தனர்;
தலைமயிரைப்பிடித்து இழுத்தனர்;
அவனும் அடித்தான்;
உடனும் அடித்தான்;
ஐயகோ.....
இன்றும்
மறக்க முடியவில்லை....!
**
முக்கை(ச்) சுழித்தபடி
முத்திர ஒழுங்கையிலே
நானும் விட்டதையும்;
சுத்தித் திரித்துவிட்டு
மலையில்
சம்பலோடு பெரியவடை
உண்டதையும்,
விடிய வாத்துவைத்த
வாழித் தண்ணியிலே
அலம்பிய கிளாசன்
தேநீர் குடித்ததையும்
இன்றும்
மறக்க முடியவில்லை....!
**
பெற்ற தாயைவிட்டு
வளர்த்த தந்தை பிரிந்து
சகோதரரை தவிக்கவிட்டு
பிறந்த மண்ணையும்
அதுடன் உறவும் விட்டு
இங்கு வந்து
கலங்கிய நாட்களை
மறக்க முடியவில்லை....!
**

மாதனையூர் கோபன்.ம
-நோர்வே.

## அது ஒரு காலம்



வெளிநாட்டுப் பெண்ணுக்கு சேலை கட்டக் கற்றுக் கொடுப்பவர் யார் தெரிகிறதா? எம்.ஜி.ஆர்தான். எம்.ஜி.ஆரிடம் தெரியும் வித்தியாசத்தைக் கவனித்தீர்களா? கறுப்புக் கண்ணாடியையும், தொப்பியையும் காணவில்லை.



உடனே சொல்லிவிடுவீர்களே, "அட.... ரஜினி" என்று. பஸ் நடத்துநராக இருந்த 'ரஜினி அபூர்வராகங்கள்' படத்தில் நடித்துவிட்டு, தன் பஸ் நடத்துநர்களான நண்பர்களைச் சந்தித்து மகிழ்ச்சியைப் பரிமாறியபோது.



மேடையில் பேசும் இந்தப் பெண்மணி யார் என்று தெரிகிறதா? [illegible]

## ஜனநாயகம்

உடம்புக்கும்
உயிருக்கும்
நல்லது!
சுயமாக எதையும்
உன்னால்
தீர்மானிக்க முடியாது.
"
இது
ஜனநாயக நாடு!
நாங்கள்
குடிமக்கள்!
"
சொல்வதை கேட்டு
சம்மா இருப்பதே
தலைவர்கள் சொல்வதை
கேள்; அவர்கள்
"காலத்தை வென்றவர்கள்!"
"
நீ
வாழ நினைக்கலாம்;
குப்பைத் தொட்டியில்--உன்
பிணம் ஒதுங்கும்!
"
தற்கொலை செய்ய
நினைத்தால்--
"சட்ட விரோதம்"
நீ
தூக்கிலிடப்படுவாய்!
பிறரோடு சேர்ந்து
வாழப்பழகு!
"
பிறரின் கருத்துக்கு
மதிப்புக் கொடு!
"
அவர்கள் உன்னை
கொல்ல நினைத்தாலும்
ஏற்றுக்கொள்....!
"
ஏன் எனின்....
இது ஜன"நாயக" நாடு!
நாம்
அதன் குடிமக்கள்!
அந்தோடு தமிழ்!
"
சுபா வரன், கண்டி.

புயலின் வீதியில்
நடக்க ஆசைப்படும்
தென்றலாய்த்தான்
வாழ்க்கை!
***
நெருப்பு மெத்தையில்
துயிலும் குழந்தையாய்
எரியும் சமாதானம்
கண்ணீர் புகைகக்கி
துர்மணம் வீசுகிறது!

***
தங்கத்தட்டில்
மனுஷத் துண்டை
கொத்தித் தின்னும்
ராஜாளியாய்
போய்விட்ட
வெண்புறா!
***

## ஆயுதஜீவிகள்!



'தட்டுங்கள்
திறக்கப்படு'மென்று
பேச சொன்னதைக்
கேட்டுக் கொண்டு
கேட்டுக் கேள்வி
இல்லாமலேயே எங்கள்
கதவுகள் தட்டப்படும்
கறுப்புப் பொழுதுகளில்
உயிர்க்கொடி
ஊசலாடும்...!
***
ஒரு கணம்,
சமாதானம் தான்
வந்துவிட்டதோவென
நாங்களும்
கதவைத்திறப்போம்!
***
கைகளுக்கு
விலங்கு மாலை சூட்டி
வீதிகளில் ஊர்வலமாய்
அழைத்துச்
செல்லப்படுவோம்!
***
பிறந்த போதில்
எங்களுக்கும்
வாழ்வைப் பற்றிய
கனவொன்று இருந்தது;
இப்போதோ எமது
நித்திரைகளுக்கும்
சித்திரவதை வந்ததால்
கனவுகளும்
மடிந்து போயின!
***
சேவல் கூவி,
கிழக்கு வெளுத்து
பனி கரைக்க
பகலவன் மட்டும்
தினசரி வந்தாலுமே,
எங்களின் வாழ்வது
இருண்டுதான் போயிருக்கும்!





***
ஏனெனில் நாங்கள்
ஆயுத மயப்படுத்தப்பட்ட
ஜீவிதக் காரர்கள்!
*** புண்டுலோயா மெய்யன் நடராஜ்.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 07.07.96 முதல் 13.07.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன ஒற்றுமை, செலவு மிகுதி. | காலை 8 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன நிம்மதி. | காலை 6 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பகல் 12 | மணி |
| புதன்- காரிய சித்தி, பணவரவு. | மு.ப. 9 | மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், அலைச்சல். | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், செலவு அதிகம். | பி.ப. 2 | மணி |
| சனி- காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 7 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | காலை 6 | மணி |
| செவ்வாய்- புதிய சிநேகம், பணச் செலவு. | பி.ப. 1 | மணி |
| புதன்- உறவினர் சுகயீனம், அலைச்சல். | பி.ப. 2 | மணி |
| வியாழன்-பதட்ட நிலை, பணச் செலவு. | காலை 7 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பகல் 12 | மணி |
| சனி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. 3 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகவாசம், உற்சாகம். | பகல் 12 | மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், பொருள் இழப்பு. | காலை 7 | மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், மனச் சஞ்சலம். | மு.ப. 9 | மணி |
| புதன்- துயர் நீங்கும், மன நிம்மதி. | மாலை 6 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, காரிய சித்தி. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, பதட்ட நிலை. | காலை 6 | மணி |
| சனி- தேககசுகம் பாதிப்பு, பணச் செலவு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், வருவாய் குன்றும். | பி.ப. 3 | மணி |
| திங்கள்- பொருள் நட்டம், மனச் சஞ்சலம். | காலை 6 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, நிம்மதி நிலை. | பி.ப. 1 | மணி |
| புதன்- அந்நியர் பகை, செலவு மிகுதி. | காலை 7 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பொருள் வரவு. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, சோர்வு நிலை. | காலை 7 | மணி |
| சனி- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பணச் செலவு. | மு.ப. 10 | மணி |
| திங்கள்- பிரயாசை மிகுதி, காரிய சித்தி. | காலை 6 | மணி |
| செவ்வாய்- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | காலை 7 | மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவம். | பி.ப. 1 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பணவரவு. | காலை 7 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, நிம்மதி | பி.ப. 3 | மணி |
| சனி- காரிய சித்தி, கவலைகள் மறைவு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன், புதன் |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| இடபம் | - வெள்ளி, செவ்வாய். |

★ சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, இனசன சேர்க்கை. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, காரியானுகூலம் | காலை 6 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பண வரவு. | மு.ப. 9 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, காரிய சித்தி. | பகல் 12 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 6 | மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, மனக்குறை நீங்கும். | காலை 7 | மணி |
| சனி- தேககசுகம் பாதிப்பு, மனச் சோர்வு. | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2 .

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தேககசுகம் பாதிப்பு, திடீர்ப் பயணம். | காலை 8 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- காரியக் கேடு, பொருள் நட்டம். | பி.ப. 1 | மணி |
| புதன் - தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பகல் 12 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | மு.ப. 9 | மணி |
| வெள்ளி- அதிகார விருத்தி, பணச் செலவு. | பி.ப. 2 | மணி |
| சனி- அனுகூலத் தகவல், மன மகிழ்ச்சி. | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- அந்நியர் சகவாசம், உல்லாச வாழ்க்கை. | காலை 7 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பண வரவு. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, காரியானுகூலம். | காலை 7 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், தேககசுகம் பாதிப்பு. | மு.ப. 10 | மணி |
| வியாழன்- மனக்கிலேசம், பணச் செலவு. | பகல் 12 | மணி |
| வெள்ளி- இனசனச் சேர்க்கை, காரிய தாமதம். | பகல் 10 | மணி |
| சனி- நண்பர் உதவி, சோர்வு நீங்கும். | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன மகிழ்ச்சி, தெய்வானுகூலம். | பகல் 12 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பணவரவு. | மாலை 6 | மணி |
| செவ்வாய்- அந்நியர் பகை, அலைச்சல். | பி.ப. 2 | மணி |
| புதன்- குடும்ப சுகம், கௌரவம். | பகல் 12 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், பணச் செலவு. | காலை 8 | மணி |
| வெள்ளி- தெய்வ தரிசனம், மன நிம்மதி. | பி.ப. 2 | மணி |
| சனி- சகோதரர் பிணக்கு, மனச் சஞ்சலம். | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனப் போராட்டம், பொருள் இழப்பு. | காலை 6 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | பி.ப. 3 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், காரியானுகூலம். | காலை 8 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், பொருள் வரவு. | காலை 7 | மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், அந்நியர் உறவு. | காலை 6 | மணி |
| சனி- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தெய்வ தரிசனம், மன நிம்மதி. | காலை 8 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, கௌரவம். | காலை 7 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. 2 | மணி |
| புதன்- தெய்வானுகூலம், பெரியார் சகவாசம். | பகல் 12 | மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பகல் 11 | மணி |
| வெள்ளி-பயனுள்ள செயல், உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| சனி- தேககசுகம் பாதிப்பு, பணச்செலவு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி: சுப நேரம்


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 8 | மணி |
| திங்கள்- முயற்சி மேன்மை, எண்ணியது ஈடேறும். | பகல் 12 | மணி |
| செவ்வாய்- உறவினரால் சோகம், பணச் செலவு. | பி.ப. 2 | மணி |
| புதன்- மனக் கலக்கம், பொருள் பேறு. | காலை 7 | மணி |
| வியாழன்- அந்நியர் எதிர்ப்பு, பணச் செலவு. | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- அரச விரோதம், உறவினர் உதவி. | காலை 7 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, மன நிம்மதி. | காலை 8 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-6


படிப்பகம்





## மானுடத்தைப் பாடுவோம்

நூறு நூறு கவிதைகளை
வீறு கொள்ளப் பாடுவோம்!
பார் முழுதும் மானுடத்தின்
பாங்குதனைக் கூறுவோம்!
*****
தேறிடாத மாந்தர் தம்மை
நேரில் நின்று சாடுவோம்!
ஆறிடாத நெஞ்சங்களை
ஆற்றி அமுதூற்றுவோம்!
*****
ஊறு செய்யும் எதிரிகளை
கூறு போட்டு நீக்குவோம்!
ஒற்றுமைக்குப் பாலமாகும்
உயர்ந்தவரைப் போற்றுவோம்!
*****
வறியவரின் பகைவரை நாம்
சிறியராகக் காட்டுவோம்!
உரிமைதனை மறுப்பவரை
ஊர்நடுவே நிறுத்துவோம்!

எம்.ஏ.இசார்தீன்.

காலை எழுந்தவுடன் படிப்பு-பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
மாலை முழுதும் விளையாட்டு-என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா!

-சுப்பிரமணிய பாரதியார்.

பாப்பா முரசு சிறுகதை

# பிறந்தநாள் பரிசு

அந்தக் காட்டில் அன்று ஏக தடபுடலான அலங்கார வளைவுகளும், தோரணங்களும் அமர்க்களமாக இருந்தன. அன்று நரிக்குட்டிக்கு முதலாவது பிறந்தநாள் விழா. அது ஒரு பணக்கார நரிக்குட்டி.

அந்தக் காட்டில் பல மிருகங்கள், பறவைகள் எல்லாம் இருந்தன. நரிக்குட்டியும், அதன் பெற்றோரும்தான் பணக்காரக் குடும்பம்.

முதலாவது பிறந்தநாள் என்பதால் நரிக்குட்டியின் பெற்றோர் காட்டிலுள்ள எல்லாப் பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் விருந்திற்கு அழைப்பு விடுத்திருந்தனர். நரிக்குட்டி மிகவும் மகிழ்ச்சியுடன் ஒரு பெரிய தோட்டத்தில் போடப்பட்டிருந்த அழகான கதிரையில் அமர்ந்திருந்தது.

வரிசையாக ஒவ்வொரு மிருகமும், பறவையும் நரிக்குட்டியிடம் சென்று அதற்கு தன்னிடமிருந்த பரிசுப்பொருட்களைக் கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தன.

அங்கு பெரிய பெரிய தட்டுக்களில் வைக்கப்பட்டிருந்த பழங்கள், பிஸ்கட்டுக்களை எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தன.

நரிக்குட்டிக்குப் பிடித்தமான முயல் ஒன்று ஒரு ஓரமாக நின்றது. எல்லாரும் வரிசையாகச் சென்று கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்த நரிக்குட்டி,

"முயல் அண்ணா வாருங்கள்! ஏன் அங்கேயே வெகு நேரமாக நின்று கொண்டிருக்கிறீர்கள்?" என்று கூப்பிட்டது.

முயல் மெதுவாக நரிக்குட்டியிடம் சென்றது.

"இந்தா என் பரிசு, நீண்ட நாள் நீ நன்றாக ஆரோக்கியமாக வாழ வேண்டும்," என்று கூறித் தன் பரிசைக் கொடுத்தது.

அங்கிருந்த ஓநாய் பலமாகச் சிரித்தது.

"ஏன் சிரிக்கிறாய்?" என்றது முயல்.

"எல்லோரும் பெரிய பரிசாகக் கொடுக்கும்போது, நீ சின்னதாக ஒரு போத்தலைக் கொடுத்து, அதைப் பரிசு என்று கூறி வாழ்த்துகிறாயே, அதைப் பார்த்துச் சிரிப்பு வந்து விட்டது! பாவம் நீ என்ன செய்வாய்? நீ ஏழையாயிற்றே?" என்று பரிதாபப்படுவது போல் கேலியாகக் கூறியது ஓநாய்.

முயலுக்கு அழுகையும், வேதனையும் சேர்ந்து மனம் வருந்தி சாப்பிடாமலேயே சென்று விட்டது.

எல்லாம் முடிந்து சாப்பாடு நடந்து கொண்டிருந்தது. பறவைகளும், மிருகங்களும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டே சாப்பிட்டன.

திடீரென பரபரப்பு.

நரிக்குட்டிக்கு அஜீரணம் ஏற்பட்டு வாந்தி எடுத்தது.


"கரடி டாக்டரைக் கூப்பிடுங்கள்," என்று எல்லோரும் கரடியைத் தேடி ஓடினர்.

ஆனால் அதற்குள் வயதான ஒரு யானை, நரிக்குட்டியின் பரிசுப் பொருட்களில் ஒன்றான, முயல் கொடுத்த சிறு குப்பியைப் பார்த்தது. அது அரிய பல மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கசாயம் ஆகும். அதை உடனே எடுத்து உடல் நலமில்லாது வாந்தி எடுத்த நரிக்குட்டியின் வாயில் ஊற்றியது. சிறிது நேரத்தில், நரிக்குட்டி நன்றாக ஓடித் திரிந்து விளையாடியது. எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

அப்போது ஓநாயைப் பார்த்து யானை "முயல் ஏழை. அதன் பரிசுப்பொருள் நன்றாக இல்லை என்று கூறினாயே! இப்போது முயல் கொடுத்த கசாயம் தான் நரிக்குட்டிக்கு மருந்தாகியது. நரிக்குட்டியின் அஜீரணம் சரியாகி அதன் பிறந்தநாளில் அது மகிழ்ச்சியாக இருக்கிறது. இனிமேல் யாரையும் கேலி செய்யாதே!" என்று புத்திமதி கூறியது.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.07.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 148
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 146

பரிசுக்குரியவர்:
J. புஸ்பபாலினி.
பிரதான வீதி, கொஸ்லாந்தை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எஸ்.சிந்துஜா. புனுமெண்டல் பாலிகா மகாவித்தியாலயம், கொழும்பு-13. | சராபத் மஹாசின். மன்னார் ரோட், புத்தளம். |
| கே.ஷனாஸ் மொஹமட். தமிழ் மகாவித்தியாலயம், பலாங்கொடை. | V. பாலச்சந்திரன். டெஸ்போர்ட்.த.வி, நானு ஓயா. |
| பி.ரெபெக்கா பொன்மலர். க/வெஸ்ட்ஹோல் தமிழ் வித்தியாலயம், கெட்டபுலா. | அ.அ.முஹம்மது அஸாம். சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். |
| பாதிமா றஸ்னா. காமசோலை முஸ்லிம் வித்தியாலயம், நீர்கொழும்பு. | செல்வி.கஜாந்தி கணேசலிங்கம். கனல் வீதி, நீர்கொழும்பு. |
| செல்வி:எஸ்.எஸ்.கலா. நு/டயகம சிங்கள பாடசாலை, டயகம. | மு.ரவிசங்கர் ரனபிம றோயல் கல்லூரி, கண்டி. |

## நியூஸிலாந்து

தலைநகர்- வெலிங்டன்
பரப்பு- 2,69,057 சதுர கிலோமீட்டர்.
மக்கள் தொகை- 35,00,000
மொழி- ஆங்கிலம், மௌரி கிளைமொழி
எழுத்தறிவு- 99%
சமயம்- கிறிஸ்தவம்
நாணயம்- நியூஸிலாந்து டொலர்
தனி நபர் வருமானம்- 12,680 டொலர்

அமைவிடம்:-

தென் பசிபிக் கடலில் அவுஸ்திரேலியாவின் தென்கிழக்கில் அமைந்துள்ளது. வடக்குத்தீவு, தெற்குத் தீவு என்னும் இரண்டு பெரிய தீவுகளையும், பல சிறிய தீவுகளையும் உள்ளடக்கியது.

வாரம் ஒரு நாடு



வரலாறு:-

பிரிட்டிஷ் காலனியாக இருந்தது. கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் மகாராணியின் பிரதிநிதியாவார். 1907இல் டொமினியன் அந்தஸ்து பெற்றது.

பொருளாதாரம்:-

முக்கிய தொழில்கள் பால் பண்ணைப் பொருட்கள், மாட்டிறைச்சி, கம்பளி தயாரித்தல் ஆகியன. பிரதான விளைபொருட்கள் கோதுமை, ஓட்ஸ், பார்லி ஆகியன. நிலக்கரி, தங்கம் கிடைக்கிறது. காகிதக்கூழ், காகிதத் தொழிற்சாலைகள் மிகுந்த வளர்ச்சி பெற்றுள்ளன. இரும்பு, உருக்கு, அலுமினியம் ஆகியன புதிய தொழில்கள்.

## செங்கிஸ்கான்

**★ செங்கிஸ்கான் என்பவர் யார்?**

சரித்திரப் புகழ்பெற்ற சிறந்த வீரர்களில் இவரும் ஒருவர்.

**★ இவர் எங்கு பிறந்தார்?**

மங்கோலியாவில் 1162ம் ஆண்டு பிறந்தார். இவரது பெற்றோர் இவருக்கு 'டெமுஜின்' என்று பெயரிட்டனர். 'டெமுஜின்' என்றால் 'இரும்பு மனிதன்' என்று அர்த்தம்.

**★ இவர் எப்போது தலைவரானார்?**

இவரது தந்தை பழங்குடியினரின் தலைவர். அவர் இறந்ததும் தனது 13ம் வயதில் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

**★ இவருக்கு செங்கிஸ்கான் என்ற பெயர் எப்படி வந்தது?**

மங்கோலியாவில் இருந்த பழங்குடியினரின் கூட்டத்தை ஒருங்கிணைத்து மங்கோலிய அரசர் ஆனார் டெமுஜின். அந்தக் கூட்டங்களின் தலைவர்கள் ஒன்று சேர்ந்து இவருக்கு செங்கிஸ்கான் என்ற பட்டத்தை அளித்தனர். செங்கிஸ்கான் என்றால் 'எவராலும் வெல்ல முடியாத வீரர்' என்று பொருள்.

**★ இவர் முதன் முதலில் கைப்பற்றிய நாடு எது?**



வடமேற்கு சீனா. 1215ம் ஆண்டு பீகிங் நகரைக் கைப்பற்றினார். 1218ம் ஆண்டு மத்திய ஆசியாவின் மீது படையெடுத்து வெற்றி பெற்றார். 1223ம் ஆண்டு உஸ்பெகிஸ்தான், ரஷ்யா ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார். 1227ம் ஆண்டு இவர் இறந்தார்.

## எந்த நாடு தெரியுமா?

★ வருமானவரி இல்லாத நாடு-**குவைத்**
★ மாணவர்களுக்கு இரண்டு கைகளாலும் எழுதக் கற்றுக் கொடுக்கும் நாடு-**கென்யா**
★ எதிர்க்கட்சி இல்லாத பாராளுமன்றம் உள்ள நாடு-**சிங்கப்பூர்.**
★ பிரதமரும், மந்திரிகளும் இல்லாத நாடு-**சுவிற்ஸர்லாந்து.**
★ முதன் முதலில் மருத்துவமனைகள் தோன்றிய நாடு-**இத்தாலி**
★ முதன் முதலில் பொருளாதாரம் மந்த நிலையை அடைந்த நாடு-**அமெரிக்கா.**

தொகுப்பு:என்-ராம்.

## இரட்டைப் பிறவிகள்



உலகிலேயே அமெரிக்க நீக்ரோக்களுக்குத்தான் இரட்டைக் குழந்தைகள் அதிகம் பிறக்கின்றன.

இரட்டையர்கள் அதிக நாள் உயிர் வாழ மாட்டார்கள் என்பது தவறு.

நோர்வே நாட்டில் பிறந்த இரட்டையர்களில் ஒருவரான குல் பிராண்ட் என்பவர் 101 ஆண்டுகளும், குல் பென்ட் என்பவர் 105 ஆண்டுகளும் உயிர் வாழ்ந்தார்கள்.

அமெரிக்காவில் மட்டும் இருபது இலட்சம் இரட்டையர்கள் வாழ்ந்து வருவதாகக் கணக்கெடுத்துள்ளனர்.

## ஆழ்கடல் அதிசயம்

★ உலகின் கடல்களில் மொத்தம் 300 மில்லியன் கன மைல் தண்ணீர் இருப்பதாக விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர்.

★ ஒலியானது கடல் நீரில் விநாடிக்கு 4800 அடி வீதம் ஆழத்திற்குச் செல்கிறது என ஒரு விஞ்ஞானி கண்டு பிடித்துக் கூறினார்.

★ கடலுக்கடியில் முதல் புகைப்படம் 1893ம் ஆண்டு எடுக்கப்பட்டது.

★ பசிபிக் கடலில் மிகப்பெரிய கடலடி நீரோட்டம் ஒன்று உள்ளது. இது 900 அடி



ஆழமும், 180 அடி அகலமும் 5400 மைல் நீளமும் கொண்டது.

கடலிலிருந்து பெட்ரோல் முதன் முதலாக 1934ம் ஆண்டு மெக்ஸிக்கோ வளைகுடாவில் தான் எடுக்கப்பட்டது.

## சின்னச் சின்ன செய்திகள்



இதன் பெயர் நான்கு கண் வண்ணத்துப் பூச்சி. ஆனால் இதற்கு உண்மையில் இரண்டு கண்கள்தான். இதன் உண்மையான கண்களை விடப் பெரிதாக வால் பக்கம் இரண்டு கண் உருவங்கள் இருக்கின்றன. எதிரிகளிடமிருந்து தப்பிக்க இயற்கையின் படைப்பு.

***



செம்மறி ஆடுகள் நடக்கும்போது, அதன் குளம்புப் பிளவிலிருந்து சுரக்கும் திரவம் தரையில் ஒரு வித வாடையை உண்டாக்குகிறது. எனவே ஓர் ஆடு செல்லும் பாதையை மற்ற ஆடு மோப்பம் பிடித்துத் தொடர்ந்து செல்லும்.

***



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# திகில் 20

# நீ! நீயா!

நகவும் எளிதாகச் சாவியைச் செருகி வட்ட வட்ட எண்களை சீரமைத்தாள்.

'டக்'கென்று சின்ன ஓசையுடன் பீரோ கதவு திறந்து கொண்டது. பூரிப்புடன் பார்த்தாள்.

டிராயர்கள் ஒவ்வொன்றாக இழுத்துப் பார்த்து மகிழ்ந்து போனாள்.

நகைகள்! அந்தக் காலத்து கிழங்கு கிழங்கான நகைகள்!

மின்விளக்கு ஒளிபட்டு மின்னும் வைரங்கள் தாங்கிய நகைகள்! கற்றை கற்றையாகப் பணம்!

சிரித்தாள். வாய்விட்டுச் சிரித்தாள். வெறி பிடித்தாற்போல் பார்த்தாள்.

பெட்டியைத் திறந்து வைத்து முதலில் நகைகளை அள்ளி அள்ளி வைத்தாள். பிறகு பணத்தைக் கட்டுகளாகத் தூக்கி செங்கல் அடுக்குவது போல பெட்டியில் அடுக்கினாள்.

இனிமேலும் வைத்தால் பெட்டி பூட்ட முடியாமல் போகும் என்ற நிலை வந்ததும் தான் நிறுத்தினாள்.

பெட்டியை அமுத்திப் பூட்ட முயலும் போது தான் அந்த ஓசை கேட்டது.

'டக்' கென்று தாழ்ப்பாள் நீக்கும் ஓசை.

அவசரமாகத் திரும்பி வாசல் கதவைப் பார்த்தாள்.

உட்பக்கமாகப் பூட்டி இருந்தது. சந்தேகமாகக் குளியலறைப் பக்கமாகத் திரும்பும் போது-

அந்த வரதராஜன் நின்றிருந்தான். இவளை-இவள் முகத்தை ஆராய்ந்தவாறு இருந்தவன்- இருந்தாற்போலிருந்து கூவினான். "இவள்தான். இதே பெண்தான் அண்ணைக்கு லைட்டர் கேட்டு வாங்கினவள். சார் இவள் தான்."

"வா! மூன்று தடவை தப்பினவளே! இந்தத் தடவை நீ தப்ப முடியாது." என்று கைப்பையிலிருந்து துப்பாக்கியை உருவி எடுக்க-

"துப்பாக்கி ஐயேங் துப்பாக்கி" என்று இவன் கதற-கத்த-

சடாரென்று திறந்து குளியலறைக் கதவைத் தள்ளி வந்த இன்ஸ்பெக்டர் வேதநாயகம் சுட்டதும், அவள் கைத்துப்பாக்கி எகிறிப் பறந்தது.

"அனாவசியமான முயற்சிகள் வேணாம் மிஸஸ் ராஜேஸ்வரி!"

ராஜா, ஜென்னி-திருக்குமரன்-ஜோதி என்று ஒரு கும்பலே இருந்தது அறைக்குள்ளே.

சரிந்து நாற்காலியில் அமர்ந்தாள் ராஜேஸ்வரி கம்பீரமாக.

"இன்ஸ்பெக்டர்! என்னுடைய திட்டமெல்லாம் வீணாகி விட்டது. இப்ப நான் வாக்கு மூலம் தர ஆசைப்படறேன். ஒப்புதல் வாக்குமூலம்."

"தயாராகத்தான் வந்திருக்கேன்." என்ற ஜென்னி சுருக்கெழுத்து நோட்டையும், காபியிங் பென்சிலையும் எடுத்து தயார் நிலையில் நின்றாள்.

"இன்ஸ்பெக்டர் சார்! உங்களுக்காக நான் நோட்ஸ் எடுக்கலாமா?"

"அவசியம்." என்றார்.

"நான் ராஜேஸ்வரி சுய நினைவுடனும், யாருடைய வற்புறுத்தலுமின்றி யார் பயமுறுத்தலுக்கும் ஆளாகாமல் தெளிந்த மனதுடன் தரும் ஒப்புதல் வாக்குமூலம்.

நானும் அபிராமியும் ஒரே தாய்க்குப் பிறந்த பெண்கள். உருவத்திலிருந்த ஒற்றுமை எங்கள் குணத்திலில்லை. நான் சாது. கணவன், குடும்பம், குழந்தைகள் என்றே என் ஆசையை வளர்த்துக் கொண்டவள். ஆனால் அவள்....

சின்ன வயதிலிருந்தே தான்தோன்றித்தனமாக வாழ்ந்தவள். சின்ன சின்ன விஷயங்களுக்கும் பொய் சொல்லுவாள். தப்பான நடவடிக்கைகளில் மிகச் சாதாரணமாக ஈடுபாடு வைத்துக் கொண்டவள். சிகரெட். ஆண்சினேகிதம். போதை எல்லாமே-

தேவை ஏற்பட்டால் வீட்டிலேயே கூட நகையும் பணமும் திருட ஆரம்பிச்சாள். அதிலிருந்து அம்மா நொண்டி வேஷம் போட்டு ஹாலிலேயே கஜானா அறைக்கு எதிரே காவலிருக்கிற அளவுக்குத் திருடினாள்.

கண்டிச்சுப் பார்த்து அலுத்துப் போயிட்டோம். நான் கல்யாணமாகிப் போயிட்டேன்.....

அவளோட நடவடிக்கைகள் அடிக்கடி என் காதில் விழத்தான் செய்தன. கஷ்டப்பட்டு அமைதி காட்டினேன். பொறுமையைக் கடைப்பிடித்தேன்.

கொஞ்ச நாள் முன்னால் ஜோதியின் காதலனைப் பிரிக்கப் பார்த்தாள். அந்தக் கோபத்தில் ஜோதி என்னிடம் கத்தவே அவளுக்காக நியாயம் கேட்கப் போனேன்.....

பெரிய வாய்ச் சண்டையே நடந்தது. நான் அவமானப் படுத்தினதற்கு பழிவாங்காம விடமாட்டேன்னு சபதம் செய்தா.....

இவளால் என்னை என்ன செய்ய முடியும்னு அலட்சியப்படுத்தினேன். அவளைப் பார்க்கிறதையும் தவிர்த்தேன்......

ஆனா கொஞ்ச நாளாக என் கணவர் பேச்சும் போக்கும் எனக்கு விபரீதமாகப் பட்டது...

அடிக்கடி வீட்டுக்கு வந்து என் கண் முன்னாலேயே அவரைக் கொஞ்சினாள். இவரும் வெட்கமில்லாம நான் பார்த்துக் கொண்டிருக்கிறப்பவே அறைக்குள்ளே போய்....

என்னால் தாங்கிக்கவே முடியல்ல... கொட்டக் கொட்ட குளவியாக மாறினேன். ரெண்டு பேரும் வியாபாரங்களை மூடிட்டு விற்றுவிட்டு அமெரிக்காவுக்கே போய் செட்டில் ஆகிறதாக தீர்மானம் செய்தது தெரிஞ்சதும் என்னால தாங்கிக்கவே முடியல்லை. வெடிச்செழுந்தேன்...."

"விடக்கூடாது. திருந்தாத அவங்களை தீர்த்துக் கட்டத் தீர்மானிச்சேன்."

மிஸஸ் நிம்புபாணி என்கிற பெயரிலே பிஸினஸ் செய்யப் போகிறதாகவும் இரும்புக் கடற்கரை ஹோட்டல்ல அன்றைக்கு வந்து பேசச் சொல்லியும் என் பம்பாய் சினேகிதி மூலமாக தந்தி கொடுக்கச் சொன்னேன்.....

ஏமாந்து போய் வந்துட்டாங்க. விஸ்கி பாட்டிலில் நிறையத் தூக்க மாத்திரைகளை கலந்து வைச்சு ஒளிஞ்சிருந்து பார்த்தேன்.....

இரண்டு பேரும் ரிசப்ஷனில் கேட்டு விசாரிச்சு வந்தாங்க. ஆளில்லாததினால் சும்மா இருக்கப் பிடிக்காம விஸ்கியைக் குடிக்க ஆரம்பிச்சாங்க.....

என் எதிர்பார்ப்பு சரியாக இருந்தது. மயங்கி விழுந்துட்டாங்க. இரண்டு பேரையும் கைத்தாங்கலாகக் கூட்டி வந்து காரின் பின்ஸீட்டில் போட்டேன். அவள் அடிக்கடி குமட்டவே- துடைக்கத் தேவைப்படும்னு நினைச்சு ஒரு பெட்ஷீட்டை எடுத்து வந்து அவள் வாயைத் துடைச்சு விட்டேன்....

நடமாட்டமில்லாத அந்த பங்களா மாடிக்குக் கூட்டிப்போய் ஜீவாதாரமான இடத்தில் துப்பாக்கியை வைச்சு சுட்டேன். கத்தக்கூட நேரமில்லாம செத்துப் போனாள்.....

ரத்த சகதியாகிப் போன பெட்ஷீட்டை எடுத்து வந்தேன். மறுபடி காரோட்டிப் போய் ரயில் கேட் பக்கத்தில் நிறுத்தி, என் கணவன் என்கிற அந்தத் துரோகியை நடத்தி கூட்டிப் போய் வேலியோரத்தில் தள்ளி அவரையும் அதே மாதிரி சுட்டுத்தள்ளி திரும்பறச்ச தான் அந்த ரத்தக்கறை பெட்ஷீட் கையிலிருந்தது தெரிந்தது. புழக்கமில்லாத அந்த காபின் மேலே வீசி எறிஞ்சிட்டு வந்துட்டேன்.....

மறுநாள் இன்பவல்லி வீட்டு விழாவுக்குப் போனேன். அந்த அபிராமி மாதிரியே தலைவிரிச்சுப் போட்டு நெற்றியில் பொட்டு இல்லாம அவளோட டிரஸ்ஸையே மாட்டிக்கிட்டுப் போனேன்.

போலீசைத் திசை திருப்பி விடறதுக்காக செத்தவள் உருவத்தில் நடமாடி அவள் உயிரோட இருக்கிற மாதிரியே இமேஜை உருவாக்கினேன். கணவரைப் பற்றி ஏற்கனவே வியாபார விஷயமா வெளிநாட்டுக்குப் போயிருக்கிறதாகச் சொல்லியிருந்ததினால யாரும் அவங்களைத் தேடல....

அவங்க மரணம் யார் மனசிலும் எந்த பாதிப்பையும் ஏற்படவிடாம கவனமாக நடிச்சேன்.....

பார்ட்டியில இந்த ஆள் நான்- அவள் பையைத் திறந்து சிகரெட் லைட்டர் எடுத்ததைப் பார்த்திருக்கிறான் என்கிறதை அறிந்து தூக்கத்தில் கூட சில சமயம் அவள் பெயரைச் சொல்லி 'அபிக்குட்டி'ன்னு புலம்ப ஆரம்பிச்சார்....

நான் கண்டிச்சுப் போட்டப்ப என்னை அடிச்சுத் துன்புறுத்தினார். இனிமேல் என்ன ரகசியம்னு அவளோட சேர்ந்து வாழப் போகிறதாக பகிரங்கமாகவே சொன்னார்.... தனியாக ஒரு வீடு எடுத்து அங்கே அவளை...

என்னைப் பார்க்க வருகிற சாக்கில் எப்பயாவது இவனைத் தீர்த்துக் கட்டிடணும்னு நான்தான் ஜோதி பெயரால் போன் செய்து பார்க்குக்கு வரவழைச்சு சுட்டுத் தள்ளினேன். தப்பிச்சிட்டான்....

துப்பறியும் பாக்டரி மூலமாக கிழவன் வேஷத்தில ஹோட்டல்ல தங்கியிருக்கிறதை ஜோதி மூலமாக தெரிஞ்சுக்கிட்டு, அங்கேயும் போன் செய்து காலிசெய்துட்டு ஓடறதைப் பார்த்து சுட்டுத் தள்ளினேன் அதிலும் ஏமாற்றம்.

அது வேறு ஏதோ கிழவன் அநியாயத்துக்கு செத்தான்.



"கொலையும் செய்வாள் பத்தினிங்கறது சரியாகத்தான் இருக்கு பொஸ்"

சாமர்த்தியமாக நீங்க வருகிறப்ப அங்கே அபிராமியாகவும், இங்கே வருகிறப்ப ராஜேஸ்வரியாகவும் மாறி மாறி நடிச்சேன்.....

ஆனாலும் எனக்குப் பயம் வந்து விட்டது. இத்தனை பேரும் ஆராய்ந்து பார்க்கிறப்ப நான் மாட்டிக்கொள்ளுவேனோ என்கிற பயம்.

அதனாலதான் ஊரைவிட்டு நாட்டை விட்டே ஓடிடறதாக தீர்மானம் செய்தேன், திருடி வைச்சிருந்த வைர நெக்லஸ் சாவியைப் பயன்படுத்தி ஆனமட்டும் பணத்தைச் சுருட்டி....

அதே சமயம் புருஷனோட சேர்ந்துதான் மேல் நாட்டுக்குப் போனதாக நம்பவைக்க அவரோட போன் பேசினதாக ஜோதியை நம்பவைச்சேன்."

## மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார்

"அங்கே தான் அண்ணி தப்பு செய்துட்டே."

ஜோதி சொன்னாள். "நீங்க அந்தப் பக்கம் போனதுமே எக்ஸ்சேஞ்சிலேர்ந்து ஆள் போன் செய்தார். ஏதோ கேபிள் ஃபால்ட் ஆனதினால இந்த ஏரியாவிலே எந்த போனும் வேலை செய்யல. இப்பத்தான் சரி செய்தோம். குரல் கேட்குதா பாருங்க. அப்படியே எங்க நம்பரை முயற்சி செய்யுங்க. வருகிறதா பார்க்கலாம்னு சொன்னார். அப்போ தான் முதல் முதலாக. உங்கமேலே எனக்கு சந்தேகமே வந்தது. ஆபிஸுக்கு வேற போகிறேன்னு சொன்னீங்களா.....

தவிர அன்றைக்கு நான் முழுபோதையோட வந்தப்ப அந்த நெக்லஸைக் காணோம்னு தேடிப் பார்த்து சொன்ன முதல் ஆளே நீங்கதான். அதனாலதான் சந்தேகப்பட்டு எல்லாரையும் கூட்டிட்டு உனக்கும் முன்னால வந்து பாத்ரூம் உள்ளே ஒளிஞ்சு நின்றோம்."

"கொலையும் செய்வாள் பத்தினிங்கறது சரியாகத்தான் இருக்கு பாஸ்!" ஜென்னி சொன்னாள்- "ஆனாலும் இவ சாமர்த்தியத்தைப் பாராட்டாமலிருக்க முடியல்ல! இல்ல?"

"அடையாளம் தெரியாத பிணங்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டன." என்றது பத்திரிகைத் தலைப்பு.

இன்ஸ்பெக்டர் வேதநாயகம் நிமிர்ந்து நின்று கமிஷனரிடம் சல்யூட் அடித்தார். ஐ.ஜி.யின் பாராட்டுகளைப் பெற்றுக் கொண்டார்.

ராஜாவுக்கும் ஜென்னிக்கும் நன்றி சொன்னார்.

"இனிமேல் நான் வெளியே தெருவே போகலாமா?" என்ற வரதராஜனைப் பார்த்து சிரித்தார்கள்.

"கோ அஹாட் அதான் கொலைகாரியைப் பிடிச்சு ஆச்சே! ஆனா இரு."

"ஏன்?"

"ஒரு விஷயம் சொல்லிட்டுப் போ."

"என்ன?"

"அந்த அபிராமியும் ராஜேஸ்வரியும் அனேகமா ஒரே மாதிரித்தான் இருக்கிறாங்க. அதுவும் பார்ட்டிக்கு வந்தப்ப அவள் அபிராமி மாதிரியே மேக்கப்பில வந்திருக்கிறா."

"ஆமாம்."

"அப்படியிருக்க அந்தப் படத்தைப் பார்த்து கண்டிப்பாக வந்தவ இவளில்லேன்று சாதிச்சியே அது எப்படி?"

"ஏதோ மாறுதல் இருந்ததாக மனசில பட்டது. அதனாலதான்..... அதாவது என்னமோ குறைஞ்ச மாதிரி இருந்தது."

"அப்புறம் அவளைப் பார்த்ததும் எப்படி உடனே இவள்தான்னு கத்தினே?"

"அப்ப அவள் படத்தில இல்லாத ஒண்ணு நேரில் இந்தப் பெண்ணைப் பார்த்தப்ப இருந்தது. அதனால கண்டு பிடிச்சேன்."

"என்ன அது?"

"தாலி!"

"என்னது?"

"ஆமாம் மேடம்! அன்னைக்கு பார்ட்டியில அபிராமியாக வந்தவள் அவளைப் போல எல்லாம் மாத்திக்கிட்டா, சிகரெட் பிடிச்சா. எல்லாம் செய்த புத்திசாலி, தாலியை மட்டும் மறந்துட்டாள் போலிருக்கு."

"எப்படியோ இன்ஸ்பெக்டர் வேதநாயகத்துக்கு வழக்கை முடிச்சுக் கொடுத்தோம். நம்ம நியூசன்ஸ் கேஸில் மாட்டிகிட்ட தாருணி கேஸை தள்ளுபடி செய்வாரா? கேட்டுப் பார்ப்போமா?"

"அவளுக்குப் பதிலாக நீ உள்ளே போறியான்னு கேட்பார்."

சிரித்தார்கள்.

இப்போதெல்லாம்-

வீட்டில் ராஜா அதிகாரம் செய்யும் போதெல்லாம் ஜென்னி நினைவுபடுத்துகிறாள்-

"கொலையும் செய்வாள் இந்த பத்தினியும் கூட."

அடங்கித்தான் போகிறான் ராஜா.

முடிந்தது




ஐந்தே ஐந்து வாரத் தொடர்

புதுமையான பாணியில் மர்மக்கதை

ஒரு வித்தியாச முயற்சி

அடுத்தவாரம் முதல் ஆரம்பம்

எழுதுவது

பட்டுக்கோட்டை பிரபாகர்

விறு விறு நாவல்



## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: பி. பாபு.
வயது: 20
முகவரி: 262/1, பிரதான வீதி, இரத்தினபுரி.
பொழுது போக்கு: பத்திரிகை, புத்தகம்.



பெயர்: வனிதா வடிவேல்.
வயது: 17
முகவரி: கடற்கரை வீதி, கல்முனை-01.
பொழுது போக்கு: கதைப்புத்தகம், வானொலி.



பெயர்: எஸ். சுவர்ணன்.
வயது: 30
முகவரி: P.O.BOX-47226, CODE NO-64023, FAHAHEEL, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: நபாயிஸ் கான்.
வயது: 19
முகவரி: 27, ஸாவியா வீதி, தர்கா நகர்.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: நஸ்மியா பேகம்.
வயது: 17
முகவரி: 516/17, உதய மாவத்தை, அநுராதபுரம்.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எம். ஷிஹான்.
வயது: 23
முகவரி: P.O.BOX-10023, HAFARAL BATIN-31991-K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி., உதைபந்து.

பெயர்: எம். ஷபீக்.
வயது: 20
முகவரி: 225/225, பொருசன் வீதி, நவகம்கொட, கொழும்பு-15.
பொழுது போக்கு: பத்திரிகை, நாவல்.

பெயர்: மொஹமட் சியாஜ்.
வயது: 17
முகவரி: 50, பறங்கியர் வீதி, கல்பிட்டி.
பொழுது போக்கு: பேனா நட்பு.

பெயர்: எஸ். ஜெயராம்.
வயது: 18
முகவரி: மாரியம்மன் கோவில் வீதி, துறைநீலாவணை-07.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி., வானொலி.

பெயர்: கே. புவனேந்திரன்.
வயது: 24
முகவரி: குயின்ஸ் டவுன் மேல்பிரிவு, ஹாலி-எல.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: ரீ. சூரியராஜ்.
வயது: 22
முகவரி: 3737. BEATRICE STR ## B.S.M.T., VANCOUVER B.C. V5N 4H4, CANADA.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். முய்னாஸ்.
வயது: 18
முகவரி: 170, பாடசாலை வீதி, துந்துவ, கபுறுகல.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

கையில் சூடுபட்ட மாதிரி அவள் திடுக்கிட்டுப் போனாள். தன்னுடைய மகனது முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்; எனினும் அதில் அவளுக்கு எந்தப்பதிலும் கிடைக்கவில்லை. பாவெலின் நீலக் கண்கள் வழக்கம் போலவே அமைதியோடும் அழுத்தத்தோடும் சிரித்துக்களித்தன.

"வருகிறேன்." என்று பெருமூச்சுடன் சொன்னாள் அவள். மீண்டும், ஒருமுறை அவளது மகன் தன் கரத்தை நீட்டினான்; அவனது முகத்தில் அன்பின் சாயை படர்ந்தோடியது.

"போய்வா, அம்மா."

அவள் அவனைப் போகவிடாமல் அப்படியே நின்றாள். "கவலைப்படாதே, கோபமும் படாதே" என்றான் அவன்.

இந்த வார்த்தைகளும் அவனது நெற்றியிலே அழுந்தித் தோன்றிய உறுதியான ரேகையுமே அவளுக்குப் பதிலளித்தன.

"அட, கண்ணு" என்று தலையைத் தாழ்த்திக் கொண்டே சொன்னாள். "நீ என்ன சொல்கிறாய்......"

அவனை மீண்டும் ஒருமுறை நிமிர்ந்து பார்க்காமலேயே அவள் வெளியே வந்தாள். தனது கண்களில் பொங்கும் கண்ணீரையும் நடுங்கும் உதடுகளையும் தன் மகன் பார்த்துவிடக் கூடாதே என்ற தவிப்பில் விறுட்டென வெளிவந்து விட்டாள். வீட்டுக்குள் வந்துசேருகிற வரையிலும், அந்தக் காகித உருண்டையை வாங்கிய கரம் கனத்தது. தொங்குவது போலவும், தோளில் ஓங்கி அறை வாங்கியது போலவும், அதனால் அது வலியெடுத்து வேதனைப் படுவது போலவும் அவளுக்குத் தோன்றியது. வீட்டுக்குவந்த மாத்திரத்தில் அவள் அந்தக் காகிதத்தை நிகலாய் இவானவிச்சிடம் கொடுத்தாள். கொடுத்துவிட்டு, அவன் அந்தக்காகிதத்தை விரித்துப் பிரித்துப் படிக்கத் தொடங்கும் வரையிலும், இதயத்திலே நம்பிக்கை படபடத்துத் துடித்துக் கொண்டிருக்க, அப்படியே காத்து நின்றாள். ஆனால் நிகலாயோ அவற்றைக் கவனிக்கவில்லை.

"ஆமாம். அவன் இதைத் தான் எழுதியிருக்கிறான்." என்று கூறிவிட்டு அதை வாசிக்கத் தொடங்கினான். "'தோழர்களே, நாங்கள் தப்பி வருவதற்கு முயலமாட்டோம். எங்களால் முடியாது. எங்களில் எவராலும் முடியாது. அப்படிச் செய்தால் நாங்கள் எங்கள் சுயமரியாதையையே இழந்து விடுவோம். ஆனால் சமீபத்தில் கைதான அந்த விவசாயிக்கு நீங்கள் உதவ முயலுங்கள். அவனுக்கு உங்கள் கவனிப்புத்தேவை. நீங்கள் உங்களால் முடிந்ததையெல்லாம் அவனுக்காகச் செய்யுங்கள்; அவன் அதற்குத் தகுதியானவன். அவனுக்கு இங்கு பொழுது போவதே பெரும்பாடாய் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் அவன் அதிகாரிகளோடு சண்டை பிடித்துக் கொண்டிருக்கிறான். ஏற்கெனவே அவன் இருள் கொட்டடியில் இருபத்துநாலு மணி நேரமாய்க் கிடந்து வருகிறான். அவர்கள் அவனைச் சித்திரவதை செய்தே கொன்றுவிடுவார்கள். நாங்கள் அனைவரும் அவன் சார்பில் கோரிக்கை விடுக்கிறோம். அம்மாவுக்கு ஆறுதல் சொல்லுங்கள். அவளுக்கு எல்லாவற்றையும் சொல்லுங்கள்; அவள் புரிந்து கொள்வாள்!"

தாய் தன் தலையை உயர்த்தி, அமைதி யோடு நடுநடுங்கும் குரலில் சொன்னாள்:

"சொல்வதற்கு என்ன இருக்கிறது? எனக் குப் புரிகிறது."

நிகலாய் வேறொரு பக்கமாகத் திரும்பிக் கொண்டு, மூக்கைப் பலமாகச் சிந்தினான்.

"எனக்கு என்னவோ சளிதான் பிடித்திருக்கிறது போலிருக்கிறது....." என்று முணுமுணுத்தான்.

அவன் கைகளை உயர்த்தி, தன் மூக்குக் கண்ணாடியைச் சீர்படுத்திக் கொண்டே, மேலும் கீழும் நடந்தான்.

"உண்மை இதுதான். எப்படியானாலும் நமக்கு இனிமேல் நேரமே இல்லாது போயிற்று."

"அது சரிதான். விசாரணையாவது நடக்கட்டும்" என்று முகத்தைச் சுழித்துக் கொண்டு இதயத்திலே மூட்டமாய்ப் படிந்த சோகத்தோடு சொன்னாள் அவள்.

"இதோ, இப்போதுதான் பீட்டர்ஸ்பர்க்கிலுள்ள ஒரு தோழரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது......"

"எப்படியும், அவன் சைபீரியாவிலிருந்து தப்பி வந்து விடலாம். இல்லையா?"

"நிச்சயமாய். விசாரணை சீக்கிரமே நடைபெறப் போகிறதென்றும், ஆனால் தீர்ப்பு- அவர்கள் அனைவரையும் நாடு கடத்துவதென்று தீர்ப்பு-செய்துவிட்டதாகவும் அவர் எழுதியிருக்கிறார். இந்த ஏமாற்றுக் காரர்கள் தங்களது சொந்த நீதிமன்றங்களைக்கூட ஓர் ஆபாசக் கேலிக்கூத்தாக மாற்றிவிடுகிறார்கள். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். விசாரணை ஆரம்பமாவதற்கு முன்பே, பீட்டர்ஸ்பர்க்கில் தீர்ப்பு நிச்சயமாகி விடுகிறது!"


"கவலைப்படாதே நிகலாய் இவானவிச்!" என்று உறுதியுடன் கூறினாள் தாய். "நீங்கள் எனக்கு இதை விளக்கவும் வேண்டாம்; ஆறுதல் கூறவும் வேண்டாம். பாவெல் சரியான காரியத்தைத்தான் செய்வான். எந்த விதக் காரணமுமின்றி அவன் தன்னையும் தன் தோழர்களையும் கஷ்டத்துக்கு ஆளாக்கிக் கொள்ள மாட்டான். அவன் என்னை நேசிக்கிறான். அவன் என்னைப்பற்றி எவ்வளவு கவலைப்படுகிறான் என்பதை நீங்களே அறிவீர்கள். 'அவளுக்கு விளக்கிச் சொல்லுங்கள்' என்று சொல்கிறான் அவன், 'ஆறுதல் கூறுங்கள்' என்கிறான்......"

அவனது இதயம் மூர்க்கமாகப் படபடத்தது; உணர்ச்சி வேகத்தால் அவள் கண்கள் இருண்டு மயங்கின.

"உங்கள் மகன் அருமையான பேர்வழி!" என்று இயற்கைக்கு மீறிய உரத்த குரலில் சொன்னான் அவன். "அவன் மீது எனக்கு அபாரமதிப்பு!"

"ரீபினுக்கு உதவுவதற்கு நாம் வேறொரு வழியைக் கண்டு பிடிக்க வேண்டும்" என்று சொன்னாள் தாய்.

அவள் உடனடியாக ஏதாவது செய்ய விரும்பினாள். எங்காவது போக, களைத்துப் போய்க் கீழே சாய்கிற வரையிலும் நடந்தே போக விரும்பினாள்.



"இந்த ஏமாற்றுக்காரர்கள் தங்களது சொந்த நீதிமன்றங்களைக் கூட ஓர் ஆபாசக் கேலிக் கூத்தாக மாற்றி விடுவார்கள்"

"நல்லது" என்று கூறிக்கொண்டே அறைக்குள் நடந்தான் நிகலாய். "இப்போது சாஷா நமக்குத் தேவை......"

"அவள் வந்துவிடுவாள். நான் என்றெல்லாம் பாவெலைப் பார்த்துவிட்டு வருகிறேனோ, அன்றெல்லாம் அவள், வந்து விடுவாள்."

நிகலாய் சோபாவில் தாய்க்கு அருகே உட்கார்ந்தான். அவன் சிந்தனை வயப்பட்டவனாய்த் தலையைக் குனிந்து உதட்டைக் கடித்து, தாடியைத் திருகிக் கொண்டிருந்தான்.

"இந்தச் சமயத்திலே என் அக்காவும் இல்லாமல் போனது துரதிருஷ்டம்தான்......"

"பாவெல் அங்கிருக்கும் போதே நாம் இந்தக் காரியத்தைச் செய்து முடித்துவிட்டால் நல்லது. அவனும் அதைக் கண்டு சந்தோஷப்படுவான்" என்றாள் தாய்.

அவர்கள் இருவரும் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்கள்.

"அவனுக்கு ஏன் இதில் விருப்பமில்லை என்பது எனக்குப் புரியவே இல்லை....." என்றாள் தாய்.

நிகலாய் துள்ளியெழுந்தான். அதற்குள் வாசலில் மணியடித்தது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்:

"சாஷாவாய்த்தான் இருக்கும்" என்று மெதுவாகச் சொன்னான் நிகலாய்.

"அவளிடம் இதை எப்படிச் சொல்வது?" என்று தானும் மெதுவாகக் கேட்டாள் தாய்.

"ஹும்-ஆமாம்....."

"அவளை நினைத்தால் வருத்தமாயிருக்கிறது."

மீண்டும் மணியடித்தது. ஆனால் இந்தத் தடவை உரத்து ஒலிக்கவில்லை. வாசலில் நிற்கும் ஆசாமி உள்ளே வருவதற்குத் துணியாதது மாதிரி தோன்றியது. நிகலாயும் தாயும் கதவினருகே சென்றார்கள். சமையல் கட்டுக்குள் சென்றவுடன் நிகலாய் ஒருபுறமாக நின்று கொண்டு சொன்னான்.

"நீங்கள் மட்டும் போவதுதான் நல்லது......"

"அவன் மறுத்துவிட்டானா?" என்று கதவைத் திறந்து விட்டவுடனேயே தாயிடம் தைரியமாகக் கேட்டாள் அந்தப் பெண்.

"ஆமாம்."

"அவன் இப்படிச் செய்வான் என்று எனக்குத் தெரியும்." என்று வெறுமனே சொன்னாள் சாஷா. எனினும் அவளது முகம் வெளுத்துவிட்டது. அவள் தனது கோட்டுப் பித்தான்களைக் கழற்றினாள்; மீண்டும் அதை மாட்டினாள். அந்தக் கோட்டைத் தன் தோளில் சிறிது நழுவிக் கிடக்குமாறு செய்ய முயன்றாள்.

## மக்சீம் கார்க்கி 83

"மழையும் காற்றும்-பொல்லாத பருவம்!" என்று சொன்னாள் அவள். "அவன் சௌக்கியமா?"

"ஆமாம்."

"சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறான்." என்று மெதுவாகக் கூறிவிட்டு, தன் கையையே பார்த்துக் கொண்டு நின்றாள் சாஷா.

> "அவன் இருள் கொட்டடியில் 24 மணி நேரமாய் அடைக்கப் பட்டுள்ளான். அதிகாரிகள் அவனைச் சித்திரவதை செய்தே கொன்று விடுவார்கள்"

"நாம் ரீபினை விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவன் எழுதியிருக்கிறான்" என்று அந்தப் பெண்ணை ஏறிட்டுப் பார்க்காமலேயே கூறினாள் தாய்.

"அப்படியா? நாம் அதற்கேனும் நமது திட்டத்தை உபயோகித்துப் பார்க்க வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது" என்று மெதுவாகச் சொன்னாள் அந்த யுவதி.

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்." என்று கூறிக்கொண்டே வாசல்நடைக்கு வந்தான் நிகலாய்: "வணக்கம், சாஷா."

அந்த யுவதி தன் கரத்தை நீட்டியவாறே கேட்டாள்:

"ஏன் கூடாது? எல்லோரும் இது ஒரு நல்ல திட்டம் என்று தான் கூறுகிறார்கள்."

"ஆனால், இதை நிறைவேற்றிவைப்பது யார்? நமக்கெல்லாம் ஒரே வேலையாயிருக்கிறதே."

"நான் செய்கிறேன்." என்று கூறிக் கொண்டே எழுந்தாள் சாஷா. "எனக்கு அவகாசம் இருக்கிறது."

"ரொம்ப சரி. ஆனால் மற்றவர்களைக் கேட்டுக் கலந்து கொள்ள வேண்டும்...."

"நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போதே போகிறேன்."

மீண்டும் அவள் தனது மெல்லிய விரல்களால் தனது கோட்டுப் பித்தான்களை அவசர அவசரமாக மாட்ட முயன்றாள்.

"முதலில் கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்." என்றாள் தாய்.

"எனக்கு ஒன்றும் களைப்பாயில்லை" என்று அமைதியான புன்னகையோடு கூறினாள் அந்தப் பெண்.

வாய் பேசாது அவர்களோடு கை குலுக்கிவிட்டு அவள் மீண்டும் பழைய விறைப்போடும் கடுமையோடும் வெளிச் சென்றாள்.

தாயும் நிகலாயும் ஜன்னலருகே சென்றார்கள். வெளி முற்றத்தைக் கடந்து வாசல் வழியாக அவள் சென்று மறைவதை இருவரும் கவனித்தார்கள். நிகலாய் லோசாகச் சீட்டியடித்தவாறே மேஜை முன் வந்து உட்கார்ந்து எழுதத் தொடங்கினான்.

"அவளுக்குச் செய்வதற்கு மட்டும் ஏதாவது வேலை கொடுத்து விட்டால் போதும். உடனே அவள் மனம் தேறி விடுவாள்" என்று ஏதோ யோசித்தவாறே கூறினாள் தாய்.

"ஆமாம்" என்றான் நிகலாய். பிறகு அவன் தாயின் பக்கமாகத் திரும்பி, அன்பு ததும்பும் புன்னகையோடு பேசினான்: "நீலவ்னா, உங்களுக்கு அந்த அனுபவம் இல்லை போலிருக்கிறது. தான் காதலிக்கும் மனிதனுக்காக ஏங்கித் தவிப்பது எப்படியிருக்கும் என்பது உங்களுக்குத் தெரியாது என்றே தோன்றுகிறது."

"ப்பூ!" என்று கையை ஆட்டிக் கொண்டே சொன்னாள் தாய். "எனக்குத் தெரிந்த ஒரே உணர்ச்சியெல்லாம்- என்னைக் கல்யாணம் பண்ணிக்கெடுத்து விடுவார் களே என்ற பயம் ஒன்றுதான்!"

"என்றுமே நீங்கள் யாரையேனும் விரும்பியதில்லையா?"

"எனக்கு நினைவில்லை. விரும்பியதாகத்தான் நினைக்கிறேன். யாரையோ நான் விரும்பத்தான் செய்தேன். ஆனால், ஞாபகம்தான் வரவில்லை."

அவள் அவனைப் பார்த்தாள்; பிறகு எளிமையாக அமைதியான சோக உணர்ச்சியோடு பேசினாள்:

"என் புருஷன் கொடுத்த அடியிலும் உதையிலும் என் கல்யாணத்துக்கு முன்னே என் வாழ்க்கையில் நிகழ்ந்த அத்தனையுமே நினைவை விட்டு ஓடிப் போய் விட்டன."

நிகலாய் மேஜைப் பக்கம் திரும்பி உட்கார்ந்தான். தாய் அந்த அறையை விட்டு ஒரு கணம் வெளியே சென்றாள். அவள் திரும்பி வந்தபோது நிகலாய் அவளை அன்பு ததும்பப் பார்த்தவாறே இனிய அருமையான நினைவுகளில் திளைத்தான்.

(தொடர்ந்து வரும்)

# ஊனம்

"எணை அம்மோய்! எனக்குக் கலியாணம் வேண்டாமெண்டு எத்தினை தரமெணை உனக்குச் சொல்லிப் போட்டன்?" கொஞ்சம் சத்தமாகவே சொன்னாள் சரசு.

"மோளை நானென்னடி செய்யுறது? உன்ரை நிலமை எனக்குத் தெரியாதா? ஆனால் கொப்பர் எல்லே எப்பிடியாச்சும் முடிச்சு வைப்பம் எண்டெல்லே மாப்பிளை தேடுறார்" செல்லாச்சி மகளை ஆறுதல் படுத்தினாலும் சரசுவுக்கு மனம் அந்தரப்பட்டுக் கொண்டே இருந்தது.

சரசுவுக்கும்- கலியாணம், நல்ல குடும்பம், அழகான கணவன், ஓடிப் பிடித்து விளையாடும் சின்ன குட்டிகள் போல குழந்தைகள் எல்லாம் ஆசைதான். கனவும் தான். "சரசுக்கு என்னகுறை?" இப்படித்தான் சிலபேர் கேட்டார்கள். ஆனால் கேட்பவர்களெல்லாம் கேட்ப தோடுசரி. எத்தனை பெண்கள் அனுதாபப்படுவார்கள்? அவர்களின் அண்ணன் மாரையோ அல்லது தம்பிமாரையோ கலியாணம் செய்து கொடுத்தாலென்ன? அதற்கெல்லாம் அவர்களது மனது இடங்கொடாது, பொய் அனுதாபங்கள்; பொய்வேஷங்கள்.

எட்டு வயதுக்கு முதல் சரசுவும் நல்ல வாளிப்பான மொழுமொழு என்று இரண்டு கால்களால் ஓடி பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டிகளிலெல்லாம் வென்றவள்தான். போலியோக்கிருமி இரத்தத்தோடு இரத்தமாய் கலந்து அவளின் வலதுகாலை ஊனமாக்கி விட்டு ஓய்ந்து கொண்டது. முதலில் காய்ச்சல்.. நெருப்புமாதிரி; அதற்குப் பின்னால் வலது காலில் உளைவு; பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் சூம்ப ஆரம்பித்தது. முழங்காலுக்குக்கீழ் சூம்பினதன் பின்னால், அப்படியே நின்று விட்டது. குதி உயர்ந்து போய் கெந்திக் கெந்தி சரசுவின் காலம் போகிறது.

சிவப்பிரகாசத்தாருக்கு பரவாயில்லை. அவர் பெயரில் ஒன்பது ஏக்கர் வயல்காணி இருக்கிறது. மேலதிகமாக மிளகாய்க் கன்றுத்தரை ஒரு மூன்றே கால்ஏக்கர். பணத்திற்கு பஞ்சமில்லை. எப்படியாகினும் சரசுவை நல்லவன் ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுக்க வேண்டுமென்றுதான் இரவுபகலாக சிவப்பிரகாசம் ஐயாவுக்கு கவலை. பார்க்கிற மாப்பிளைகள் எல்லோரும் முதலில் வயல் காணிக்கும் கல்வீட்டிற்கும் ஆசைப்படுவார்கள். சரசுவின் காலைக் கண்டவுடன் சீதனம் மறந்து ஊனம் மட்டும் தான் அவர்களுக்குத் தெரியும். மறுத்துவிடுவார்கள்.



சரசுவின் அழகு நிறைகுடம். பிறைநெற்றி, கார்த்திகை மலர்க்கன்னம், அழகான விழி- சிவந்தவாய், கூர்மையான நாசி. சரசு சிரித்தால் மனம்கிறங்கும். எத்தனை ஆண்களுக்கு அவள் தேவதை. பார்த்தால் கண்விலகாமல் தரித்துநிற்கும் அழகு. கலியாணம் இல்லாததற்கு கால் மட்டும்தான்குறை.

☆☆☆☆

சிவப்பிரகாசத்தார் சந்தோஷத்தில் இருந்தார். என்றுமில்லாதவாறு இன்று மட்டும் மனப்புளகாங்கிதம். வெகு உச்சாய்ப்பில் செல்லாச்சி பக்கத்து வீட்டு ஜெமீலாவோடு சேர்ந்து பரக்கப் பரக்க வேலை செய்தாள். பலகாரம் வைப்பது. வாழைப்பழத்தை பவ்வியமாக உரித்துக் கொடுப்பது. சம்பந்திகள் மனச்சந்தோஷப்பட்டால் போதும். செல்லாச்சிக்கும் என்றுமில்லாதவாறு இன்று சந்தோஷம்.

புறோக்கர் பொன்னம்மானை நன்றிக் கண்ணோடு பார்த்தார் சிவப்பிரகாசத்தார். ஏனெனில் இந்த மாப்பிளை கட்டாயம் சரசுவை விரும்புவார்.

கம்பஸிலை டிகிரி செய்திருக்கிறார். எல்லோராலும் மதிக்கப் படுகிற ஆசிரியர் ஸ்ரீஸ்கந்தராஜா. பக்கத்து ஊர்ப்பிள்ளை. தாய் தந்தையோடு சரசுவை பெண்பார்க்க வந்திருக்கிறார். குணநலமானவர். அவரின் கையாலை எத்தனையோ பிள்ளைகள் ஏ-எல். பாஸ் பண்ணியிருக்குதுகள். நல்ல உடல்கட்டு. சரசுவின் அழகுக்கு ஸ்ரீ தான் தோது. மனதுக்குள் எத்தனை தரம் ஜோடிபார்த்துப் பூரித்துக் கொண்டார் சிவப்பிரகாசத்தார். செல்லாச்சியும் அப்படித்தான்.

சரசுவை சோடிச்சு வைத்திருந்த அறைக்குள் போய் பெண்ணைப் பார்க்கச் சொன்னார்கள். சரசு ஒரு கதிரையில் அமர்ந்திருந்தாள். கதவைத் திறந்து கொண்டு ஸ்ரீஸ்கந்தராஜா போனார். ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டார் அவர். 'என்ன இது- இந்திர லோகத்திலிருந்து கொண்டு வந்து இறக்கி வைத்த சுந்தரத் தேரா? அல்லது பிரம்மதேவன் எனக்கென்றே படைத்து வைத்த தேவதையா இது?' உள்ளம் அலைக்கழிந்தது ஆச்சரியத்திலிருந்து மீள பல நிமிடங்கள் எடுத்தன அவருக்கு.

வெட்கம், பதட்டம் ஒன்று சேர்ந்து வாட்ட கண்கள் கலங்கி இமைகள் படபட வென்று அடித்தன. ஸ்ரீஸ்கந்தராஜா கேட்ட கேள்விகளுக்கு சரசுவிடமிருந்து ம்.."" என்ற பதில் மட்டும் தான் கிடைத்தது. அவரும் மனத்திருப்தியோடு அறையை விட்டு வெளியில் வந்தார்.

வரும்போது கவனிக்கத் தவறிய ஒன்றை, மாஸ்டர் அறையை விட்டுப் போகும்போது கவனித்து விட்டாள் சரசு. மாஸ்டரின் இடது கால் செயற்கை. கெந்திக் கெந்திப் போனார். அவருக்கும் ஊனம்.

சிவப்பிரகாசத்தாரின் முகம் நிறைய மகிழ்ச்சி. செல்லாச்சிக்கு தலைகால் புரியவில்லை. வந்தவர்கள் நிறைய பலகாரமும் வாழைப்பழமும் சாப்பிட்டு முடித்தார்கள்.

"ஐயா கொஞ்சம் இஞ்சை வாங்கோவன்" சரசு கூப்பிட்டாள். சிவப்பிரகாசத்தார் சரசுவின் அறைக்குள் போனார். 'இனியென்ன கலியாணம் முடிஞ்ச மாதிரித்தான்.' எண்ணிக் கொண்டார். சரசு தகப்பனிடம் முதல் முறையாகப் பேசினாள். "ஐயா எனக்கு உந்த மாப்பிள்ளை வேண்டாம்".



படிப்பகம்

www.padippakam.com

# தரைக்கு வராத பறவைகள்

ஒரு வித்தியாசமாக இருக்கட்டுமே என்று வழக்கத்தைவிட – சற்றுப் பெரிய சிறுகதை. எழுதியிருப்பவர்– தமிழக க்ரைம் கதை மன்னன் ராஜேஸ்குமார்.
வழக்கமாக துப்பறியும் கதை எழுதும் ராஜேஸ்குமாரும், தன் வழக்கத்தில் இருந்து வேறுபட்டு எழுதியுள்ளார். உங்களுக்கும் பிடிக்கும்.




உச்சி வெய்யில் மண்டையில் உறைக்கிற அந்த மத்தியான நேரத்தில் கிராமத்து மண் ரோட்டு புழுதியை தன் உடம்பு பூராவும் அப்பிக்கொண்ட அந்த டாக்ஸி தன் பிரபலமான வீட்டுக்கு முன்பாய் வந்து நிற்பதை ஜன்னல் வழியாய் பார்த்த அகிலம் குங்குமம் தரித்த நெற்றியில் குழப்பத்தையும் தரித்துக் கொண்டாள்.

"இந்த நேரத்துல யார் வர்றா.....?" தனக்குள்ளே முனகிக் கொண்டு வாசலுக்கு வந்தாள்.

டாக்ஸியின் கதவுகளை நான்கு பக்கமும் திறந்து கொண்டு-முப்பது வயதுக்குட்பட்ட அந்த நான்கு இளைஞர்களும் இறங்கினார்கள். படித்த பணக்கார முகங்கள்.

அகிலம் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்க ஒருவன் கேட்டான்:

"சபேசன் வாத்தியார் வீடு இது தானே....?"

"ஆமா....."

"அவர் இருக்காரா.....?"

"இருக்கார்....நீங்க.....?"

"நாங்க நாலுபேரும் அவர்கிட்ட படிச்ச மாணவர்கள். அவரை பார்க்கலாம்னு வந்திருக்கோம்....அவருக்கு உடம்பு சரியில்லைன்னு கேள்விப்பட்டோம்....."

"உள்ளே வாங்க...."

அவர்கள் நாலு பேரும் வாசற்படியேறி-கதவின் நிலை இடித்துக் கொள்ளாமல் ஜாக்கிரதையாய் வளைந்து உள்ளே போனார்கள்.

மண் தரை. சுண்ணாம்பு காணாத சுவர்கள். வலது பக்க சுவரோரமாய் ஒரு கட்டில் தெரிய-அதில் படுத்துக் கிடந்த ஒற்றை நாடி சரீரம் திரும்பிப் பார்த்தது.

அகிலம் பக்கத்தில் போய் குரல் கொடுத்தாள்.

"என்னங்க.....உங்களைப் பார்க்கிறதுக்காக பழைய ஸ்டூடண்ட்ஸ் வந்திருக்காங்க....."

சபேசன் மெதுவாய் எழுந்து உட்கார்ந்தார். வந்த நான்கு பேர்களின் கண்களிலும் துல்லியமாய் அதிர்ச்சி.

"இவர் சபேசன் வாத்தியாரா?"

'எப்படி ஆஜானுபாகுவாய் இருந்தவர் இப்படி ஈர்க்குச்சி மாதிரி இளைத்துப் போயிருக்கிறாரே.....?'

சக்கையாய் தளர்ந்துபோன உடம்பில்–எலும்புகள் ஆங்காங்கே துருத்திக் கொண்டு தெரிந்தன. கண்களில் மட்டும் பழைய சபேசன் வாத்தியார் தெரிந்தார்.

"வணக்கம்......"

சபேசனின் சுருக்கம் படிந்த நெற்றி மேலும் சுருக்கத்துக்கு உட்பட்டது. ஒருவன் அவர்க்குப் பக்கத்தில் குனிந்தான்.

"ஸார்...எண்பதுல உங்ககிட்ட படிச்சோம்....டென்த் ஸ்டாண்டட் 'ஏ'செக்ஷன். நான் பாலாஜி. இவன் கிருஷ்ணகுமார், இவன் லோரன்ஸ், அவன் ஜெயபால்...."

சபேசனின் வற்றலான முகத்தில் ஒரு மலர்ச்சி பரவியது. "எண்பதுல படிச்சவங்களா?"

"ஆமா.....ஸார்....."

"எல்லோரும் இப்ப என்ன பண்ணிட்டிருக்கீங்க?"

"ஸார்....நான் ஒரு சிவில் என்ஜீனியர். கிருஷ்ணகுமார் எலக்ட்ரரேட்ஸ் ஆபிஸரா இருக்கான்.... லோரன்ஸ் ஹைகோர்ட்ல ப்ராக்டீஸ் பண்ணிட்டிருக்கான்....ஜெயபால் என்.டி.ஸி. மில்லில் ஸ்பின்னிங் மாஸ்டரா இருக்கான்."

சபேசன் வாயிலிருந்த மிச்சப் பற்களில் சிரித்தார். "கேட்கவே சந்தோஷமாயிருக்கு....."

"எல்லாம் உங்க ஆசீர்வாதம் ஸார்....."

பாலாஜி கையோடு கொண்டு போயிருந்த பழக்கூடையை அவர் முன்னால் வைத்தான்.

"இதெல்லாம் எதுக்கு.....?"

"இருக்கட்டும் ஸார்....."

"என்னை ஞாபகம் வெச்சுகிட்டு பார்க்க வந்ததுக்கு ரொம்ப சந்தோஷம்...."

அறைக்குள் சில விநாடி மௌனம் பிடிவாதமாய் நிலவியது. பின் லோரன்ஸ் தயக்கமாய் ஆரம்பித்தான்.

"ஸ....ஸார்....."

"ம்...."

"நாங்க நாலு பேரும் ஒரு விஷயம் கேள்விப்பட்டுத்தான் வந்திருக்கோம்......"

சபேசன் வாத்தியார் தன் ரோம முன் தாடையை இடது கை விரல்களால் தடவிக் கொண்டே கேட்டார்.

"என்ன கேள்விப்பட்டீங்க?"

"உ....உங்களுக்கு...?"

"எனக்கு....?"

"ஆஸ்டியோ ப்ராஸிஸ்ங்கிற எலும்புச் சிதைவு நோய் தாக்கியிருக்கின்னு கேள்விப்பட்டோம்...."

"யார் சொன்னது உங்களுக்கு?"

"உங்களுக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டிருக்கிற டாக்டரை நேத்து ரிக்ரியேஷன் கிளப்ல வெச்சுப் பார்த்தோம்.....இப்போ வந்துட்டிருக்கிற புதுப்புது வியாதிகளைப் பத்தி பேசிட்டிருக்கும் போது ஆஸ்டியோ பிராஸிஸ் வியாதியைப் பத்தியும் சொன்னார்.... அந்த சமயத்துல உங்கபேரும் அடிபட்டது. அந்த டாக்டர்கிட்ட உங்களைப் பத்தின விபரங்களைக் கேட்டுகிட்டு....புறப்பட்டு வந்தோம்.

சபேசன் சிரித்தார். "உடம்புன்னு இருந்தா ஏதாவது வியாதி வரத்தான் செய்யும்....இந்த ஆஸ்டியோ ப்ராஸிஸ் நோய் கொஞ்சம் கொடூரம். எலும்புகள் மொதல்ல வெந்து போய் பிறகு கொஞ்சம் கொஞ்சமா....சிதைஞ்சு....எலும்புகளோட கட்டுக்கோப்பு குலைஞ்சு அப்புறம் மரணம் வரும். மரணம் வரட்டுமே...இப்ப என்ன....?"

"ஸார்.....உங்க நோய் சம்பந்தமா ஒரு ஆஸ்டியாலாஜிஸ்ட் ஒருத்தரை பார்த்து கன்சல்ட் பண்ணினோம். உங்களோட இந்த நோயை குணப்படுத்த முடியும்னு அவர் சொன்னார்...."

"எப்படியாம்...?"

"நீங்க....ப்ளோரைடு ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டா....மூணே மாசத்துல குணமாயிடலாமாம்...."

"அந்த ட்ரீட்மெண்டைப் பத்தி எனக்கும் தெரியும்! அதுக்கு கிட்டத்தட்ட ரெண்டு லட்ச ரூபாய் செலவாகும்னு டாக்டர் சொல்லியிருக்கார். அவ்வளவு பணம் செலவழிக்க எனக்கு சக்தி இல்லேப்பா....."

"உங்க நிலைமை தெரிஞ்சுதான் ஸார்....நாங்க நாலு பேரும் வந்திருக்கோம்....உங்களை அந்த ஸ்பெஷலிஸ்ட்கிட்டே கூட்டிட்டுப் போய் ட்ரீட்மெண்ட் எடுக்க முடிவு பண்ணிட்டோம்..... செலவைப் பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம் ஸார்...."

"என்னப்பா சொல்றீங்க....? ட்ரீட்மெண்ட் செலவு ரெண்டு லட்ச ரூபாய்..... ரெண்டாயிரம் இல்லை......"

"அந்த தொகைக்கான ஏற்பாட்டையும் பண்ணிட்டோம் ஸார்......"

"எப்படி....?"

"ஓல்ட் ஸ்டூடண்ட்ஸ் அஸ்ஸோசியேஷன் மூலமா உங்க ட்ரீட்மெண்டுக்காக நிதி திரட்டப் போறோம் ஸார்....."

"வேண்டாம்பா...."

"ஏன் ஸார் வேண்டாங்கறீங்க....? எங்க கல்விக் கண்ணைத் திறந்த உங்களுக்கு இதுகூட பண்ணலைன்னா...எப்படி...?"

"இது தளர்ந்து போன உடம்பு. ரெண்டு லட்சம் செலவு செஞ்சி அந்த நோயைக் குணப்படுத்தினாலும் இந்த உலகத்துல இன்னும் எவ்வளவு நாள் வாழ்ந்துடப் போறேன்....? ஏதோ கொஞ்ச நாள் இப்படியே இருந்துட்டு போயிடறேன்....."

"ஸார்! நீங்க உயிரோட இருக்கிற ஒவ்வொரு நாளும் எங்களுக்கு சந்தோஷமான நாள். ரிடையரான பிறகும் கூட சாயந்தர வேளைகள்ல...ஏழைக் குழந்தைகளுக்கு நீங்க இலவசமா ட்யூஷன் எடுக்கிறதாக் கேள்விப்பட்டோம்...அந்த ப்ளோரைடு ட்ரீட்மெண்டாலே....உங்க உடம்பு குணமாகி அதன் காரணமாக..... ஒரு பத்து வருஷ காலம் உயிரோடு இருந்தா ஏழைக் குழந்தைங்க வாழ்க்கையில வெளிச்சம் கிடைக்கும்......"

சபேசன் பெருமூச்சுவிட்டார். "உங்க அக்கறையும் ஆர்வமும் என்னை நிறையவே சந்தோஷப்படுத்துது.... ஆனா....வேண்டாம். என்கிட்ட படிச்ச மாணவர்கள்கிட்ட கையேந்தி நிக்கறதை நான் விரும்பலை."

"ஸார்....வந்து....."

பேச வந்த லோரன்ஸை கையமர்த்தினார்.

"என்னோட கேரக்டரைப் பத்தி உங்களுக்கே தெரியும்....நான் டீச்சரா வேலை பார்த்த காலத்துல...எந்த மாணவனையும் என்னோட சொந்த வேலைக்குப் பயன்படுத்தினதில்லை..... டஸ்டர் எடுத்துட்டு வா...சாக்பீஸ் கொண்டு வா.....காப்பி வாங்கிட்டு வா....அந்த மாதிரியான சின்னச் சின்ன ஆப்ளிகேஷன்ஸைக் கூட ஸ்டூடண்ட்ஸ்கிட்ட வெச்சிக் கிட்டதில்லை..... முடிஞ்சவரைக்கும் மத்தவங்களுக்கு உதவியாத்தான் இருக்க விரும்பறேன். மத்தவங்க எனக்கு உதவவர்றதை நான் விரும்பலை.... இன்னிக்கு நீங்க எனக்கு இவ்வளவு மரியாதை தர்றீங்கன்னா.... அதுக்குக் காரணம் நான் கடைப்பிடிக்கிற இந்த கொள்கை தான்....."

"ஸார்......நாங்க உங்களுக்கு உதவி பண்ண கடமைப்பட்டவங்க......"

"மன்னிக்கணும்.....நீங்க போய்ட்டு வரலாம்......"

"ஸார்.....!"

"இந்த கிழவனைப்பத்தி கவலைப் படாமே....நீங்க வாழ்க்கையில மேலுக்கு வர்ற வழியைப் பாருங்க.....எனக்கு டயர்டா இருக்கு.....நான் தூங்கணும்...."

நான்கு பேர்களும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள். வேண்டாத சில விநாடி நிசப்தத்துக்கு பிறகு– கைகளைக் குவித்தார்கள்.

"வ....வர்றோம் ஸார்....."

"போய்ட்டு வாங்க. ஆல்....தி. பெஸ்ட்...."

சபேசன் ஆயாசமாய் கட்டிலில் சாய்ந்து கொள்ள நான்கு பேரும் வெளியே வந்தார்கள். அகிலம் பின் தொடர்ந்தாள்.

காருக்குள் ஏறும்போது ஜெயபால் சொன்னான்.

"அம்மா....! அய்யாகிட்ட நீங்களாவது பேசி..... அந்த ட்ரீட்மெண்டுக்கு ஒத்துக்கச் சொல்லக்கூடாதா?..."

அகிலத்தின் கண்களில் நீர் நிரம்பி கனத்தது.

"தம்பி! அவர் இப்படி தன்மானம் பார்த்துப் பார்த்தே வாழ்க்கையில எத்தனையோ இழந்துட்டார். வறட்டு கௌரவம் பார்த்து இப்போ உயிரையும் இழக்கப் பார்க்கிறார். எங்களுக்கு புள்ளைங்க இல்லை.... உங்களை என் புள்ளைங்களா நினைச்சு கேக்கிறேன். அவர் சம்மதம் கொடுத்துதான் அந்த சிகிச்சை நடக்கணும்னா அது நடக்கவே நடக்காது. அவர ட்ரீட்மெண்டுக்கு ஒத்துக்க வைக்க வேண்டியது என்னோட பொறுப்பு. நீங்க உங்க முயற்சியை நிறுத்தி வைக்காமே ஸ்டூடண்ட்ஸ் அஸ்ஸோசியேஷன் மூலமா பணத்தை திரட்ட ஏற்பாடு பண்ணுங்க."

"நீங்க சொன்னா அவர் கேட்பாரா?"

"எப்படியாவது பேசி சம்மதம் வாங்கிடறேன். நான் சாப்பிடாமே கொஞ்சம் பிடிவாதம் பிடிச்சா....அவர் வழிக்கு வந்துடுவார்.....ஒரு வாரம் கழிச்சு என்னை வந்து பாருங்க தம்பி."

நான்கு பேரும் நம்பிக்கையோடு டாக்ஸி ஏற அகிலம் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

✣ ✣ ☆

அடுத்த வாரம்.

அதே மத்தியான நேரம்.

பாலாஜியும் லோரன்ஸும் பைக்கில் வந்து- சபேசன் வீட்டு வாசலில் இறங்கினார்கள்.

வீடு நிசப்தமாய் இருந்தது. வாசற்படி ஏறி வெறுமனே சாத்தியிருந்த கதவை பாலாஜி தட்டினான்.

அரை நிமிஷ நேரத்திற்கு பிறகு–கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டாள் அகிலம்.

துடைத்த நெற்றி. வாரப்படாத தலைக் கேசம். பாலாஜி–லோரன்ஸ் இருவரும் திடுக்கிட்டார்கள்.

"அ....அம்மா...!"

"அ...அய்யா போயிட்டார்..." அகிலத்தின் குரல் தொண்டையிலேயே அடைத்துக் கொண்டது.

"எ...எப்போ...?"

"இன்னிக்கு அஞ்சு நாளாச்சு.... உங்களுக்கு தகவல் சொல்லி அனுப்பலாம்ன்னா... அட்ரஸ் தெரியலை....."

"எ.. எப்படி....?"

"ஹார்ட் அட்டாக்னு டாக்டர் சொன்னார்."

"ட்ரீட்மெண்டுக்கு ஒத்துக்கச் சொல்லி அவரைக் கட்டாயப் படுத்தினீங்களா?"

"இல்லையே...! நீங்க வந்துட்டு போன பிறகு அவர் கிட்ட அதைப்பத்தி பேச முயற்சி பண்ணினேன். முடியலை. எதுவோ தடுத்தது.... இன்னைக்கு கேட்கலாம் நாளைக்கு கேட்கலாம்னு தள்ளிப் போட்டுட்டே வந்தேன்.... அதுக்குள்ளே அவர் போய்ச் சேர்ந்துட்டார். கேட்டு அவரைக் கஷ்டப்படுத்தலைன்னு நினைக்கும் போது மனசுக்கு கொஞ்சம் சந்தோஷமாயிருக்கு......"

"அவரை நீங்க ட்ரீட்மெண்டுக்கு சம்மதிக்க வெச்சிருப்பீங்கன்னு நினைச்சு சந்தோஷமா வந்தோம்..... அவரை பார்க்கக் கூட கொடுத்து வைக்கலை...அவரை எந்த இடத்துல அடக்கம் பண்ணியிருக்கீங்கன்னு சொல்லுங்கம்மா. அந்த இடத்துக்குப் போய் மாலை வெச்சு மரியாதையாவது பண்ணிட்டுப் போறோம்."

அகிலம் விரக்தியாய் சிரித்தாள்.

"அதையும் நீங்க பண்ண முடியாது......"

என்னம்மா சொல்றீங்க....?

"அவர் ரொம்ப வருஷத்துக்கு முந்தியே ஒரு சாசனம் எழுதி வெச்சுட்டார்."

"சாசனமா..?"

"ம்..! தான் இறந்த பிறகு, தன்னோட உடலை புதைக்கவோ எரிக்கவோ கூடாது. மருத்துவக் கல்லூரி மாணவர்கள் படிக்கிறதுக்கு உதவியாக தன்னோட உடல் ஒரு பாடப் புத்தகமாக உபயோகப்பட வேண்டும்னு சாசனம் எழுதி வெச்சிருந்தார். என்கிட்டயும் அதைப்பத்தி அடிக்கடி சொல்லுவார்..... அவரோட உயிர் பிரிஞ்ச ஒரு மணி நேரத்துக்குள்ளேயே....மருத்துவ கல்லூரி நிர்வாகத்தைச் சேர்ந்தவங்களுக்கு தகவல் கொடுத்தேன்....உடனே வந்து அவரைக் கொண்டு போயிட்டாங்க....."

சொல்லிவிட்டு புடவைத்தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டு அகிலம் அழ ஆரம்பிக்க–லோரன்ஸும் பாலாஜியும் கண்களில் நீர் பனிக்க இதயம் கனத்துப் போனார்கள்.

'முடிஞ்ச வரைக்கும் மத்தவங்களுக்கு உதவியாகத்தான் இருக்க விரும்பறேன்.... மத்தவங்க எனக்கு உதவ வர்றதை நான் விரும்பலை....'

போன வாரம் சபேசன் வாத்தியார் சொன்ன அந்த வாக்கியத்துக்குள் இவ்வளவு பெரிய அர்த்தமா ஒளிந்து கொண்டிருந்தது.....?

---

# நினைக்கத் தெரிந்த மனங்கள்

"உன் கண்களில் அந்தக் காந்தம் என் நாவைக் கட்டிப்போட்டுவிட்டது"



ஷர்மிளா இஸ்மாயில் கண்டி

வாழ்க்கை என்னவோ வசப்பட வில்லை. எதுவுமே சரியாகப் படவில்லை அவனுக்கு. ஏதோவோர் வெறுமை. மனமெங்கும் ஒரு பாரம். ஒரு சுமை. 'ஓ' வென்று வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது. அழுதால் தீருமா? தெரியவில்லை.

'என்ன இது? எப்படி இந்தத் தீயில் விழுந்தேன்? இதுவரையில்லாத வேதனை: ஏனிது? எல்லாம் அவள் தந்த பரிசு. அவள்.....'

உடலெங்கும் வியர்த்தது. எழுந்து கொண்டான். வாசற்படியில் நின்றவன் கண்கள் தோட்டத்து ரோஜாவில் பதிந்தது. மென்மை, அழகு, இதம்: அத்தோடு குத்தி வலிக்கவைக்கும், வேதனைப்படுத்தும் முள்–கூரியமுள்.

பெண்மையை மென்மைக்கு ஒப்பிடுகிறார்களே? அவள் உருவத்தின் மென்மை, இனிமை இதயத்தில் இல்லையோ? இரக்கமற்றவள். இதயமற்றவள். அப்படித்தானா? எண்ணங்களை கட்டுப்படுத்த முடியவில்லை அவனால்.

'எத்தனை நிம்மதியாய் நிச்சலனமாய் சீரான நதி போல் ஓடிக் கொண்டிருந்தது என் வாழ்க்கை. அதில் கல்லை விட்டெறிந்து சலனப் படுத்தியவள் அவள் தானே. அவளே தான்!

புன்னகைத்தாள், பூவைப் போல். இதழ் விரித்து என்ன இதமாய்ப் பேசினாள்? நான் யதார்த்தம் உணர்ந்து ஒதுங்கி போகையில் நெருங்கி வந்தாள். பேசிப் பேசியே இதயத்தை எடுத்துப் போனாள். என் நிம்மதியையும் களவாடிப் போனாளே.' அவன் கண்களில் ஈரம் பனித்தது. உதடுகள் துடித்தன. ஒரு கணம் தன்னைப் பற்றி நினைத்தான்.

'நிலவுக்கும் பூமிக்குமுள்ள தூரம் போல் நினைவுக்கும் எட்டாத தூரம். வசதியிலும் வாய்ப்புகளிலும் அதி உயர்ந்த வள். நான்.... நான் ஒரு சாதாரண நடுத்தர குடும்பத்து இளைஞன். சாதாரண படிப்பு அதற்கேற்ற சாதாரண அரசாங்க தொழில். அவள்...!' லேசான புன் சிரிப்பு அவனுதட் டில். தன்னைத் தானே நொந்து, தன்கையாலாகாததனத்தை நோகும் பச்சாதாப சிரிப்பு. 'ம்ஹூம், என் ஒரு மாத சம்பளம் அவளுக்கு ஒரு நாளைய செலவுக்கு சரி வரும்!' மனது ஓங்காரமிட்டது.

"ஏன் இப்படியெல்லாம் நினைக்கிறேன். அவள் தன்நேசம் சொன்னாளா? இல்லை காதலை வெளிப்படுத்தி நடந்தாளா? இல்லை. வெறும் புன் சிரிப்புக்களையும் வார்த்தை பரிமாறல்களையும் வைத்து எப்படி நீ இது தான் காதல் என எண்ண முடியும்? வெறும் நட்பாயிருக்கக் கூடாதா? மனது ஏன் இப்படி கட்டறுத்துப் பாய்கிறது? கேட்டுவிடுவோமா? எத்தனை நாளாய் வேதனைத் தீயில் வேகுவது? கேட்போம். தீர்மானித்து விட்டேன். நாளைக்குக் கேட்டு விடுவோம்.'

'ஹா... வாழ்க்கையில் இனி அர்த்தமில்லை. போச்சு எல்லாம் முடிந்தாயிற்று. இதயமற்றவளேதான். என் காதலை எத்தனை இதமாய், எவ்வளவு எதிர்பார்ப்புகளோடு வெளிப்படுத்தினேன். ஏதாவது சொல்லியிருக்கலாம். அவள் பார்வை பார்த்தாளே ஒரு பார்வை. அதில் தெறித்தது என்ன? அலட்சியமா? உனக்கெல்லாம் ஒரு காதலா என்ற அகங்கார மின்னலா? என்ன அது?

கடவுளே, நான் தோற்றுப் போய் விட்டேனே. ஏதாவது பேசியிருக்கலாம் அவள். 'உன்னைக் காதலிக்கவில்லை' என்றாவது சொல்லியிருக்கலாம்....! என்ன ஒரு ஆணவம். திமிர் அந்தப் பார்வையில்! அவனுக்குள் எரிமலை கிளம்பியது. பேசாமல் போனாளே, நானொருத்தன் அங்கு நின்றிருப்பது என்பதையே கவனியாததுபோல். நான் அவள் நேசத்தை யாசிப்பது செவிகளில் விழாதது போல்..... ஐயோ.....'

ஆறடி உயரமான அவன் சில அங்குலமாய் குறுகிப் போனதாய் உணர்ந்தான். ஆண்மை என்பதையும் மறந்து அழுது விட்டான்.

❤ ❦ ❤ ❦ ❤

அவள் தனக்குள்ளாக சிரித்துக் கொண்டாள். ஹா..... வாழ்க்கை எத்தனை சுந்தரமானது. எதிர்பார்க்கவில்லை. இத்தனை சீக்கிரமாக நேசத்தை வெளிப்படுத்தி விட்டானே! மனமெல்லாம் பூரிப்பு. ஒரே சமயத்தில் சிரிக்க வேண்டும் போலும், அழ வேண்டும் போலுமிருந்தது. வேகவேகமாக மூச்செடுத்துச் சிரித்தாள். கண்களில் நீர் வழிந்தோடியது.

"இனியவனே....!" வாய்விட்டுச் சொன்னாள். "என்னால் ஏதுமே சொல்ல முடியவில்லை. நெஞ்செல்லாம் அடைத்தது போலுணர்வு. பதில் பேச முடியவில்லை. என்ன சொல்லுவது? எப்படிச் சொல்லுவது? உன் கண்களில் அந்தக் காந்தம் என் நாவைக் கட்டிப் போட்டு விட்டது. அதிர்ச்சி.... இன்பஅதிர்ச்சி. வியப்பு.... நாளை வா. என் காதலைச் சொல்கிறேன். சொல்லிவிடுகிறேன், இது வரை நெஞ்சில் ஏற்றி வைத்திருந்த நேசத்தின் வார்த்தைகளை!" தீர்மானித்துக் கொண்டாள். சொல்லி விடுவோம் நாளைக்கு.

❦ ❤ ❦

தன்னையே உணராதவனாய் உலகை மறந்து நடந்தான். 'அலட்சியப் படுத்திவிட்டாள் என்னை என் காதலை.' நினைவு மனதை ஏகமாய் ஆக்கிரமித்து வேதனைப் படுத்தியது. வேகமாய் வந்த லொறி இவனை முட்டி மோதி தூக்கி எறிந்தபோதும் அவனுக்கு உடல் வேதனை தெரியவில்லை. மனதுக்குள் தானே ஏகப்பட்ட ரணங்கள்!

ஆஸ்பத்திரியில் அவன்– ஏகமான காயங்கள், கட்டுக்கள்.

"ஐயோ.... ரகு..... என்னை விட்டுப் போகாதீங்க.... ரகு... நான் உங்களை நேசிக்கிறேன்..... ரகு..... ஐ லவ் யூ..... ரகு....ஹூ.....ஹூ...." தீனமாய் அலறி அவன் முகத்தில் கவிழ்ந்தாள். அழுதாள். அவள் கண்ணீர்த்துளிகள் அவன் இமைகளை தழுவிச் சென்றன. கண்ணீரோடும் பிரார்த்தனைகளோடும் அவன் மீண்டு வருவதற்காய் காத்திருக்கிறாள் அவள்.



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

# இரவுக்கு ஒரு விண்ணப்பம்!

தருவது- ரசிகன்

நாளைய பட்டத்து ராணி. இன்றைய இளவரசி. பெயர்-நிலவேணி. பொன் வண்ண மேனி.

நேரில் கண்டவர்கள் பலர் தங்கள் தூக்கத்தை தொலைத்துவிட்டு, கனவில் அந்த கட்டழகியோடு கதை பேசி மகிழ்ந்தனர்.

"குத்தாதே விழிகளால்! சொல்லாதே எழில்களால்! சொத்தாக நீயானால் கொத்தாக பூ பூக்கும் மனதிலே!" என்றெல்லாம் அவளை நினைத்து கவிஞர்களானவர்கள் பலர்.

"பூக்களின் ராணியே, பொன்முகம் காட்டு! வாடாத மலரே என்னை நாடாமல் போவதேன்? ஆயிரம் நிலவும் உனக்கு ஈடாகாது! தேய்கிறேன் தேவி, திருமுகம் காட்டு!"



அயல்நாட்டு மன்னன் கவிதையை மடலாக்கி அனுப்பி வைத்தான்.

"கொஞ்சும் நிலா தோற்றுப்போகும், துள்ளும் மானும் துவண்டு போகும்! வெல்லும் விழிகள் கண்டுவிட்டால் பாயும் படையும் மாய்ந்து போகும்! அழகுக் கலையின் அர்த்தம் யாவும் மானிட மயிலே உன்னிடம் தெரியும்! அழகுத் தொட்டிலே, அங்கு எனக்கு இடம் தருவாயோ? குயிலே பாடி தூங்கவைப்பாயா? மாடப்புறாவே! மாடப்புறாவே, மஞ்சம் தரவா? நெஞ்சம் தரவா? கொஞ்சம் பாரடி, என் நெஞ்சம் துடிப்பது நிச்சயம் புரியும்!"

வயதான மன்னன் ஒருவனுக்கு அந்த வசந்த நிலாவைக் கண்டதும் வாலிபம் திரும்பிவிட்டது. ஓலையும், எழுத்தாணியுமாய் அலைந்து கவிதை பிதற்றினான்.

யாருக்கும் சிக்காத அந்த நிலவில் முதன் முதலில் காலடி வைத்தான் மணிமாறன்.

அவன் கண்பட்டதும், காதல் என்ற பூ பூத்தது. அவன் கை பட்டதும், காமம் என்ற நெருப்பு மூண்டது.

இதழோடு இதழ் சேரப் புதுக் கதை பிறந்தது. உச்சிவரை உடல் புது மாற்றம் கண்டது.

"கல்லால் அடித்தால் எதிர்த்திருப்பேனே, நீ கண்ணால் அடித்தாயே! சொல்லால் அடித்தால் துவண்டிருப்பேனே, நீ சொக்கும் இதழால் அடித்தாயே! அம்பால் அடித்தால் தப்பியிருப்பேனே, நீ அன்பால் அடித்தாயே! வேலால் எறிந்தால் விலகியிருப்பேனே, நீ விழியால் எறிந்தாயே!"

ஒரு மயக்கும் மாலையில், அவள் மடியில் தலைவைத்தபடி மணிமாறன் சொன்ன கவிதைக்கு மனதில் கைதட்டினாள்.

வெளியே மகிழ்ச்சியைக் காட்டினால் புகழ்ச்சிக்கு மயங்கியதாக நினைத்து விடுவான் அல்லவா!

"என்ன கவிதை பிடிக்கவில்லையா?"

"கவிதையா? எங்கே?"

"போச்சுடா, நான் சொன்னது என்னவாம்"

"அடடே... இதற்கெல்லாம். இப்போது கவிதை என்று பெயர் வைத்திருக்கிறார்களா?"

"தங்கள் அகராதியில் என்ன பெயர் வைத்திருக்கிறீர்கள் தேவி!"

"பிதற்றல், புலம்பல், உளறல் என்று பல பெயர்கள் உண்டு பிரபு!" அவளும் கேலியாக திருப்பியடித்தாள்.

"நான் ஒன்று சொன்னால் கோபிக்க மாட்டீர்களே தேவி!"

"பிரபுமீது கோபப்படமுடியுமா? உதிருங்கள் உங்கள் கருத்தை!"

அவன் குரலை இறக்கி, அவள் முகத்தை பார்த்தபடி சொன்னான்;

"கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை? முறைக்காதே! நானா சொன்னேன்? நம்மூர் முதுமொழி சொல்கிறது."

அவள் பொய்யாக முகத்தை கோபப் படுத்திக் கொண்டாள்.

"கோபமா? கோயில் சிலையே கோபமா? கோலக் கிளியே கோபமா? வேழமும் அஞ்சும் விழிகளில் நெருப்பு தேவையா? கொவ்வைப் பழ இதழ்களில் ஒன்று தேவையா? கிளியாய் மாறி கொத்திட வருவேன் தாபமா?"

கைகளை உயர்த்தி அவள் கழுத்தில் மாலையாகக் கோர்த்து தன்னை நோக்கி இழுத்தான்.

கொவ்வைப் பழம் கிளிக்குச் சிக்கியது. உண்ணப்பட பழமும் விரும்பியது. உடன் பட்டு சுவை பரிமாறியது.

"கோபம் தீர்ந்ததா?" என்றான்.

நடந்ததுக்கும், நடக்கப்போவதுக்குமாக முகம் நாணத்தால் சிவந்திருந்தது.

"கோலக் கிளியே! உன் முகத்தில் குங்குமச் சாயத்தை பூசியது யார்?" அவன் சொன்னது தன் வெட்கத்தை என்று அறியாமல், கன்னத்தைத் தடவிப்பார்த்தாள்.

"கன்னத்தில் என்னடி மாயம்? கள்வன் செய்த குறும்பால் விளைந்த மாற்றம்?" தோழி ஒருநாள் கேலியாகப் பாடியது நீலவேணிக்கு நினைவுக்கு வந்தது. அதனால் அவன் கேள்விக்கு அர்த்தம் தாமதித்தாயினும் புரிந்தது.

அவளை கோபப்படுத்தி மேலும் பிணங்கச் செய்ய நினைத்தான் மணிமாறன்.

"எனக்கொரு சந்தேகம்!" என்றான்.

"என்ன?"

"இங்கிருந்து போனதும் என்னை மறந்துவிடுவாயோ என்று!"

"உங்கள் குணம் அப்படியாக்கும்! நேரில் கண்டதும் கண்ணே என்று உருகுவது, வீடு திரும்பியதும் கண்களை மூடிக்கொண்டு தூங்குவது!"

"நீ கண்களை மூடாமலா தூங்குவாய்? அதிசயமாக இருக்கிறதே!"

"இந்தக் கேலிக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. நேரமாகிறது."

"உனக்கு என்மீது பிடிப்பில்லாமல் போகிறதோ?"

"உங்கள் பேச்சே சரியில்லை. எனக்கு நேரமாகிறது."

"மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள் என்பது சரிதானோ?" என்றான்.

நீலவேணி சீற்றம் காட்டினாள். பதில் பேசாமல் இருந்தாள்.

"கோபமா?" என்றான். மீண்டும் முன்புபோல சமாதான நடவடிக்கையில் இறங்கினான்.

"பேசுவதையெல்லாம் பேசுவீர்கள்; பின்னர் வார்த்தைகளுக்கு சாயம் பூசிக் கெஞ்சுவீர்கள். நான் போக வேண்டும்!"

"இதுதான், இதற்காகத்தான்!"

"என்ன இதற்காகத்தான்!"

"சண்டை போட்டால்தான் நீயும் பதிலடி தந்துகொண்டு என் பக்கத்தில் இருப்பாய். இல்லாவிட்டால் நிலவைப் பார்த்து நேரம் கணக்கிட்டுக்கொண்டே பறக்கத் துடிப்பாய்! ஊடலை வருவித்தால்தான் நீயிருக்கும் நேரத்தை நீடிக்கலாம். அதற்குத்தான் இந்த நாடகம்!"

அவன் சொன்னதும் அவளுக்கு சிரிப்பு வெடித்தது.

"நாடகமா? இனி நடக்குமா? கவனிக்கிறேன்" என்றாள்.

"இன்னொன்று தெரியுமா உனக்கு? இந்த இராக்காலத்திடம் ஒரு விண்ணப்பம் போட்டபடிதான் என் எண்ணப்படி உன்னிடம் நாடகம் ஆடினேன்."

"என்ன விண்ணப்பம்?"

"இரவே இரவே! விடியாதே! என்னவள் ஊடலும், ஊடலை வளர்த்து, பின் அதைத் தணிக்கும் என் கெஞ்சலும், கொஞ்சலும் நீடிக்க வேண்டும். இரவே அதற்கு நீயும் நீடிக்க வேண்டும்!"

நீலவேணி அவன் சொன்னதை செவியில் வாங்கினாள். சிந்தை இனித்தது. அவன் கேட்காமலேயே குனிந்தாள். தேன் சிந்தினாள்.

இரவு நீடிக்க வேண்டும் என்று காதலன் இரந்து வேண்டும் திருக்குறள் இதுதான்.

**"ஊடுக மன்னோ ஒளியிழை யாம் இரப்ப**
**நீடுக மன்னோ இரா"**

குறள்:- 1328. அதிகாரம்:- 133.

# சிந்தியா பதில்கள்

**★ பங்களாதேஷ் தேர்தலில் முன்னாள் பிரதமர் பேகம் காலிதா ஸியா தோற்று விட்டாரே?**

**ஆர்.சாந்தராஜா, இரத்தினபுரி.**

*ஆசியாவெங்கும் ஆள்வோருக்கு எதிரான அலைதான் வீசுகிறது போலத் தெரிகிறது. நம் நாட்டில்தான் அது ஆரம்பமானது என்று சொல்லி ஏதோ இதிலாவது நாம் நெஞ்சை நிமிர்த்திக் கொள்ளலாமே!*

*சேச்சே.. 'பார்'தான் கட்டுவார்கள்? அப்போதுதான் தீர்த்த விநியோகம் செய்ய வசதி.*

**★ டியர் சிந்தியா! கவியரசு வைரமுத்துவின் சமீபத்திய கவிதைப் புத்தகத்தின் பெயர் என்ன?**

**ஈ.எஸ்.பெர்னாண்டோ, கொழும்பு-06.**

*'கண்ணீர் தேசம்'! வெளியிட்டுவைத்தவர் கலைஞர்.*

*அவருக்கு வார்த்தைகளால் பன்னீர் தெளித்தவர் வைரமுத்து.*

**★ ஒரு மனிதன் முன்னேற எவை முக்கியம்?**

**ஏ.சி.எம்.முஸம்மில், குளியாப்பிட்டிய.**

*கொஞ்சம் அறிவு, கொஞ்சம் திறமை, நிறைய தன்னம்பிக்கை, நிறைய உழைப்பு.*

**★ காதலனை மறக்கும் காதலிக்கு உங்கள் பதில்?**

**என்.நஸ்லியா, தில்லையடி.**

*எங்கிருந்தாலும் வாழ்க!*

**★ நான் பிரசாந்தின் ரசிகனாக என்ன செய்ய வேண்டும்?**

**எச்.அமீஸ், புத்தளம்.**

*கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காக கேட்கிறீர்கள். ஆனாலும் சொல்கிறேன். பிரசாந்தின் சமீபகால படங்கள் சிலவற்றை பார்க்காமல் இருங்கள். உதாரணம், 'கல்லூரி வாசல்.'*

**★ வினோத் காம்ளிமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு உண்மைதானா? உண்மையானால் காரணம் என்ன?**

**எஸ்.கிரிஜா, வனஜா, ஹேவாஹெட்ட.**



வினோத் காம்ளி–சோனாலியுடன் ஆட்டம். விளையாட்டுப்பிள்ளை.

*உண்மைதான் என்பதால்தான் யாரும் காம்ளிக்காக குரல் கொடுக்கவில்லை. காரணம்; மலர்களின் அழைப்பு, வண்டின் மயக்கம்! நேரம் காலம் தெரியாமல் வண்டு அடிக்கடி மயங்கியதுதான் குற்றமாகி விட்டது.*

**★ கவிஞனுக்கு கவிதை சுகம். காதலனுக்கு?**

**மசீன்.எம்.சுகீல், மாருகொன.**

*கழுதையாக இருத்தல் சுகம். அதாகப் பட்டது? கழுதை நன்றாக பொதி சுமக்கும். காதலனும் காதலியின் நினைவுகள் என்னும் பொதியைச் சுமந்துகொண்டு இருப்பான். சளைக்கவோ, களைக்கவோ மாட்டான். அதைத்தான் சொன்னேன்.*

**★ இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் தோல்வி மேல் தோல்விகளைச் சந்திக்கிறதே?**

**அஹமட்ஷா, தெஹியங்கை, கண்டி.**

*இங்கிலாந்துதான் கிரிக்கெட்டின் தொட்டில். அதனால் இந்திய கிரிக்கெட் வீரர்கள் பலர் குழந்தைகளாக மாறி கோட்டை விட்டிருக்கிறார்கள்.*

**★ தமிழக தேர்தலின் பின்னர் நடிகை மனோரமா எப்படி இருக்கிறார்?**

**க.மலர்விழி, நாரஹேன்பிட்டி.**

*ஜெயலலிதாவைவிட நொந்துபோயிருப்பவர் ஆச்சிதான்.*

**★ ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரி சசிகலா சிறையில் உள்ளாரல்லவா? உமது அபிப்பிராயம் என்ன?**

**எம்.எல்.எம்.நலீம், மினுவாங்கொட.**

*எய்தவள் இருக்க அம்பை எடுத்து சிறையில் போட்டிருக்கிறார்கள்.*

**★ ஆணின் கோபம், பெண்ணின் கோபம். எதில் வீரியம் அதிகம்?**

**எம்.ஐ.ஏ.ஹலீம், ஆலங்குடா.**

*நியாயமான கோபத்தில்.*

# 16 முழத் துணியும் 4 முழத் துண்டும்

**★ ஒற்றையாட்சியை மாற்றுவதற்கு விடவே மாட்டோம்; நாடு பிரிந்துவிடும் என்கிறதே ஐக்கிய தேசியக் கட்சி?**

**எஸ்.சதாசிவம், கண்டி.**

*இந்தியாவிலும் இதே பிரச்சனையை வைத்து பேரறிஞர் அமரர் அண்ணா ஒரு கூட்டத்தில் பேசினார். அவர் என்ன சொன்னார் என்று பாருங்கள்.*

*"அண்ணன் தம்பிமார் நால்வர் இருந்தால் அவர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்று காட்டுவதற்கு 16 முழத் துணியை சேர்த்துக் கட்டிக்கொள்ளவேண்டும் என்று கூறுவது போலத்தான், இந்தியாவில் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதற்கு "இந்தியா முழுமைக்கும் ஒரே ஆட்சி வேண்டும்" என்பதுமாகும்.*

*நாம் கூறுவதெல்லாம், '16 முழத் துணியை 4 முழத் துண்டுகளாக்கி, நான்கு பேரும் கட்டிக் கொள்வதால் ஒற்றுமை என்ற ஒன்று இல்லாமல் போய்விடாது என்பது தான்." அண்ணா சொன்னது மெத்தச் சரிதானே!*

**★ மனிஷா, ஊர்மிளா, சுகன்யா மூவரில் யார் நடிப்பு இந்தியனில் சிறப்பு?**

**கே.தாரிணி, கொழும்பு-6.**

*மூவருமே 'டிப்போசிட்' இழந்தது கஸ்தூரியிடம்.*

**★ சாதனைக்கும் வயதுக்கும் சம்பந்தம் உண்டா?**

**சாகுல் ஹமீட் நியாஸ், கின்னியா-06.**

*சத்தியமாக கிடையாது என்று சொல்ல மாட்டேன். சின்ன வயதில் குற்றாலீஸ்வரன் கடலைத் தாண்டினால் நாம் ஏன் வியக்கிறோம். சின்ன வயதில் என்னமாய் நீந்துகிறான் என்றுதானே! அதையே 50 வயதில் ஒருவர் செய்தால் நமது வியப்பில் பாதி குறையும் அல்லவா? எனவே சம்பந்தம் உண்டு. உண்டு. உண்டு.*

**★ டியர் சிந்தியா! சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் கலைஞர் கருணாநிதி பக்கம் இல்லாமல் ஜெயலலிதா பக்கம் இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்?**

**எம்.ஜெயசங்கர், மஸ்கெலியா.**

*ஜெயலலிதாவுக்கும் இந்தளவுக்கு அடி விழுந்திருக்காது. ரஜினிக்கும் இந்தளவுக்கு வரவேற்பு கிடைத்திருக்காது.*

**★ மனிஷா கொய்ராலாவுக்கும் கோவில் கட்டுவார்களா?**

**செல்வன் சி.செல்வநாயகன், பெரிய நீலாவணை-02.**

**★ கரும்பில் இனிப்பது அடிப்பக்கம் என்றால், காதலில் இனிப்பது எந்தப் பக்கம்?**

**கே.வின்சென்ட், மட்/சந்துருக்கொண்டான்.**

*இனிக்காதது எந்தப் பக்கம் என்று கேட்குமளவுக்கு இனிப்பானதய்யா காதல்!*

**★ நமது நாட்டு எதிர்காலம் எப்படி அமையும்?**

**ரி.சிவசுப்பிரமணியம், பிட்டகந்த எஸ்டேட்.**

*இந்தக் கேள்வி அடங்கிய தபாலட்டையை கடவுளுக்கு அனுப்பினேன். கடவுள் பதில் சொல்வதற்குப் பதிலாக கண்ணீரில் நனைத்து திருப்பியனுப்பி விட்டார்.*

*இந்திய கிரிக்கெட் அணியில் தனது கௌரவம் பாதிக்கப்படுவதாகக்கூறி வெளியேறியவர் சித்து.*

*சித்துவை அழைத்து சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது இந்திய கிரிக்கெட் சபை.*

*சிறந்த கிரிக்கெட் வீரர்கள் பலரை தலைகீழாக தூக்கியடித்த இந்திய கிரிக்கெட் சபை, சித்துவிடம் மட்டும் பணிந்து போயிருக்கிறது.*

*சித்துவின் திறமையான ஆட்டமும், போட்டிகளில் அவர் பெற்ற ஓட்டங்களும் தான் சித்துவை இழக்க விரும்பாததற்குக் காரணம். 33 வயதிலும் சளையாத ஆட்டக்காரர் சித்து.*

# சித்துவின் சாதனைகள்



**சித்துவின் சாதனைப் பட்டியல் இதுதான்:**

36 டெஸ்ட்களில்-

54 இன்னிங்சுகளில் விளையாடியுள்ளார்.

2 முறை அவுட்டாகாமல்

2087 ஓட்டங்கள் மொத்தமாக சேகரித்துள்ளார்.

40.13 சராசரி.

124 ஓட்டங்கள் அதிகபட்சம்.

6 செஞ்சரிகள்.

10 அரைச் சதங்கள்.

8 கட்ச்கள் பிடித்துள்ளார்.

ஒரு ஓவர் பந்து வீசி ஒன்பது ஓட்டங்கள் கொடுத்துள்ளார். விக்கெட் எதனையும் பெறவில்லை.

**சதங்கள் பெறப்பட்ட ஆட்டங்கள்**

124 எதிர் இலங்கை முதலாவது டெஸ்ட்-லக்னோ-1994.

116 எதிர் நியூஸிலாந்து முதலாவது டெஸ்ட்-(பெங்களூர்)-1988.

116 எதிர் மே.இந்தியத்தீவுகள்- 4வது டெஸ்ட்-(கிங்ஸ்டன்)-1989.

107 எதிர் மே. இந்தியத்தீவுகள்- முதலாவது டெஸ்ட் (நாக்பூர்)-1994.

106 எதிர் இங்கிலாந்து- 2 வது டெஸ்ட் (சென்னை)-1993.

104 எதிர் இலங்கை- 2வது டெஸ்ட் (கொழும்பு)-1993.

**சர்வதேச ஒருநாள் போட்டிகளில்....**

106 போட்டிகளில்-

103 இன்னிங்சுகளில் விளையாடினார்.

8 முறை அவுட்டாகாமல் திரும்பினார்.

3937 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

41.44 சராசரி.

134-ஆட்டமிழக்காமல் எடுத்த அவரது அதிகபட்ச ரண் குவிப்பு.

6-சதங்கள்.

31-அரைச் சதங்கள்.

15-கட்ச்கள்.

பந்துவீச்சில் 3 பந்துகள் வீசி 2 ஓட்டங்களைக் கொடுத்தார். விக்கெட் எதனையும் பெறவில்லை.

**சதங்கள் பெறப்பட்ட போட்டிகள்**

134* எதிர் இங்கிலாந்து (குவாலியர்)1993.

114* எதிர் மே. இந்தியத்தீவுகள்- (விசாகப்பட்டினம்)1994

108 எதிர் பாகிஸ்தான்- (சார்ஜா) 1989.

108 எதிர் இலங்கை- (ராஜ்கோட்) 1991.

104* எதிர் பங்களாதேஷ்- (சண்டிகார்) 1990-91.

101 எதிர் பாகிஸ்தான்- (சார்ஜா) 1996.

**சதத்தை நெருங்கி அவுட்டானது**

98 எதிர் மே. இந்தியத்தீவுகள்-(சார்ஜா) 1991.

94 எதிர் இலங்கை-(சிங்கப்பூர்) 1996.

93 எதிர் பாகிஸ்தான்-(பெங்களூர்) 1996.

★ 1987 இல் இந்தியா- பாகிஸ்தான் நாடுகளில் நடைபெற்ற நான்காவது உலகக் கோப்பையின்போது சித்து 73,75,51,55 என நான்கு அரைச் சதங்களை அடித் துள்ளார்.

★ சர்வதேச ஒருநாள் போட்டிகளில் ஆறு சதங்களைப் பெற்றுள்ள சித்து, இந்திய அணிகளில் இரண்டாவது அதிக சதங்களைப் பெற்ற வீரர் ஆவார். அதிக சதங்களான 8 சதங்களைப் பெற்றுள்ளவர் சச்சின் டென்டுல்கர்.

★ டெஸ்ட் போட்டிகளிலும், சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் 40 ஓட்டங்களை சராசரியாக சித்து பெற்றுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 38

## மாரீசன் வதை

இராஜகுமாரன்

இராமரும் இலக்குவனும் பர்ணசாலை அருகிலமர்ந்து தங்கள் அம்புறாத்தூணியி லிருந்த அம்புகளை எடுத்து மெருகூட்டிக் கொண்டிருந்தனர். அப்போது தான் சீதை பொன் வண்ணமானைத் துரத்திக் கொண்டு ஓடினாள். இலக்குவன் எக்காரியத்திலீடு பட்டிருந்தபோதும்- அண்ணனும் அண்ணியும் ஒன்றாக இருக்கும் காலம் தவிர-சீதையின் நடமாட்டங்களை அவதானித்த வண்ணமே இருப்பான். அவளை எத்துன்பமும் தீண்ட விடலாகாது என்பது அவனுடைய விரதம்.

சீதை மானைத் துரத்தி ஓடியபோதும் இலக்குவனின் கண்கள் அவளுடனேயே ஓடிக்கொண்டிருந்தன. அந்த மானைக் கண்டவுடனேயே இலக்குவன் அம்மான் சாதாரண மானல்ல- அது வெறும் மாயமான் என்பதனை உணர்ந்து கொண்டான். இத னால் சீதை சற்றுத் தூரம் மானைத் தொடர்ந்து ஓடுவதைக் கண்டதும் எழுந்து நின்று கவனித்தான். தன் கருமத்தில் கண்ணாயிருந்த இராமர் இதனைப் பொருட்படுத்த வில்லை. இலக்குமணன் அருகேயிருந்த ஒரு மேட்டில் ஏறி நின்று பார்த்தான். மான் சீதையை திட்டமிட்டு ஏமாற்று வதை உணர்ந்து, மேட்டி லிருந்து இறங்கி சற்று வேக மாக நடந்து சீதை நின்றிருந்த பக்கம் சென்றான். போகும் போதே தனக்கே சிறப்பாக அமைந்திருந்த அவதான சக்தியைப் பிரயோகித்து அந்த மாய மானின் தன்மையினை அறிந்து கொண்டான்.

முன்பு தாடகை வதை செய்யப்பட்ட போது மானுருக்கொண்டு வந்து இராம பிரானின் கணையால் வெகு தூரத்துக்கப் பால் தூக்கி வீசப்பட்ட அரக்கன் மாரீசனே மாயமானுருத்தாங்கி வந்திருக்கிறான் என் பதை அறிந்து கொண்டான். அப்போது மானைப் பிடிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிய சீதையைக் கண்டான். அதே வேளை சீதையைப் பின் தொடர்ந்து- சற்றுத் தூரத்துக்குப்பால் வந்து கொண்டிருந்த மான், இலக்குவனைக் கண்டதும் பாய்ந் தோடிச் சென்று ஒரு பற்றைக்குள் மறை வதையும் இலக்குவன் கண்டு கொண்டான். மாரீசன் பொன்மான் வேடம்பூண்டு பர்ண சாலையை வட்டமிட்டதில் ஏதோ மர்மம் மறைந்திருக்கிறது என்பதையும் அறிந்து கொண்டான். மான் தன் கையில் பிடி படாதமையினால் ஏற்பட்ட ஏமாற்றம் முகத்திலே பொங்க தன் கணவனை நாடி ஓடிய சீதை, இடையில் இலக்குமணன் நின்றதை அவதானிக்க வில்லை. ஒரு சிறு பிள்ளையைப் போல் ஓட்டமும் நடையுமாக சீதை இராமர் இருக்குமிடத்தை அடைந் தாள்.

சீதையின் பாதங்களை அணி செய்த மெட்டிகளின் ஓசையும் அவள் விரும்பித் தன் தலையில் சூடிக்கொள்ளும் முல்லை மலர்களின் மணமும் சுவாசத்துடன் கலந்து உள்ளே செல்ல இராமர் தன் தலையைத் திருப்பி ஜானகி வரும் திசையைப் பார்த்தார். அவள் முகத்தில் என்றுமில்லாத ஏமாற்றக் குறிகளைக் கண்டார். தான் அவளைத் திரும்பிப்பார்த்ததும் அம் முகத்தில் வேதனை ரேகைகள் படர்வதையும் கண்ணுற்றார் எழுந்தார்.

சீதை ஓடிச் சென்று-அவளை வரவேற்க நீண்டிருந்த இரு கைகளுக்குள்ளும் சரணடைந்தாள். தன் மார்போடு அவளை அணைத்ததும் இலேசாக விசும்பும் ஒலியும் எழுந்தது. தலையைத் தடவினார். பின் நாடியைத் தன் வலக்கரத்தால் பற்றி முகத்தை உயர்த்தி, தன் கண்களாலேயே 'நடந்தது என்ன' என்று வினவினார்.

### விந்தையான அந்த மான்...

"அப்போதே உங்களிடம் காட்டினேனே- அந்த மான்-பொன்வண்ணமேனியும் மாணிக்கக் கால்களும் கொண்ட அந்த மான்....என்னை ஏமாற்றிவிட்டு ஓடிச்சென்று விட்டது. அந்த அழகிய மான் எனக்கு வேண்டும்-அதனைப் பிடித்துத் தாருங்கள் நாதா!"

"அடடே இதற்காகவா இவ்வளவு கலக்கம்? ஒன்றல்ல.... ஓராயிரம் மான்களைப் பிடித்துத் தருகிறேனே.....!"

"இல்லை பிரபு! இந்த மான் போல வேறு எந்தமானும் இல்லை. இது மிகவும் விந்தையானது. நாமும் இத்தனை வருடங்கள் எத்தனையோ வனங்களைக் கடந்து வந்துள்ளோம். இந்த மானிடமுள்ள அழகினை வேறு எந்த மானிடமும் காண முடியாது." இவ்வாறு அந்த மானின் அழகினை பலவாறாக வர்ணித்து அதனைப் பிடித்துத் தரும்படி வேண்டினாள்.



★★★

அந்த மாய மானின் அழகை கவிச்சக்கர வர்த்தி மிக நேர்த்தியான வார்த்தைகளில் தொகுத்துத் தருகிறார். இராமரிடத்தில் சீதை இவ்வாறு கூறுகிறாளாம்:

**ஆணிப் பொனின் ஆகியது;**
**ஆய் கதிரால்**

**சேணில் சுடர்கின்றது; திண்**
**செவி, கால்,**
**மாணிக்க மயத்து ஒரு**
**மான் உளதால்;**
**காணத் தகும் என்றனள்,**
**கை தொழுவாள்.**

(ஆரணிய காண்டம்-3285)

பொருள்:

**மாற்றுக்குறையாத பொன்னாலான உடலையுடையது அம்மான். வெகு தூரத்துக் கப்பால் நின்றாலும் அதன் ஒளி பிரகாசிக்கின்றது. அதன் காதுகளும் கால் களும் மாணிக்கத்தாலானவை. அத்தகைய மானைப் பாருங்கள், என்று கூறி இராம னைக்கைதொழுதாள்- அம்மானைத் தனக்குப் பிடித்துத் தருமாறு வணங்கிக் கேட்டுக் கொண்டாள்.**

★★★

இராமருக்கும் சீதைக்குமிடையில் இடம் பெற்ற உரையாடலை இலக்குவன் அவ தானித்தான். இருவருக்குமிடையில் புகுந்து தனது கருத்தைத் தெரிவிக்க ஆவலோடு- ஆனால் அமைதியாகக் காத்து நின்றான். இராமர் தன்னை ஒரு தடவை திரும்பிப் பார்த்ததும் கை கூப்பி வணங்கினான். தம்பி ஏதோ கருத்துக் கூற விளைகிறான் என்பதை உணர்ந்த இராமர் தன் பார்வையா லேயே விசாரித்தார்:

"அண்ணா! அந்த மான் இயற்கைக்கு முரணாகத் தென்படுகிறது. உண்மையில் இது மானினத்தைச் சேர்ந்ததல்ல: மாயவேடம் புனைந்து வந்த ஓர் அரக்கன் என்றே கருதுகிறேன். ஆகவே இதனைப்பிடிக்க முயற்சிக்க வேண்டாம். இதில் ஏதோ சூது இருக்கிறது." என்று இலக்குவன் கூறினான். இதனால் சீதை துக்கமும் கோபமும் கலந்த நிலையில் இலக்குவனைச் சுட்டெரித்து விடுபவள் போல் பார்த்தாள். இலக்குவன் தலை குனிந்தான்.

### பரதனுக்கேற்ற பரிசு

சீதை தன் கணவனைப் பார்த்து, "பிரபு! நமது வனவாசம் முடிவடையும் காலம் நெருங்கிவிட்டது. இத்தகைய ஒரு புதுமை யான பிராணியை நாம் பிடித்து வளர்த்து நம்முடனேயே அரண்மனைக்கு எடுத்துச் செல்வது நல்லதல்லவா? இதனைத் தம்பி பரதனுக்குப் பரிசாகக் கொடுத்தால் மகிழ்ச்சி யடைவார். பிடிக்க முடியாவிட்டால் கணை தொடுத்து அதனைக் கொன்று அதன் உடலை கொண்டு வாருங்கள். அதன் தோலையாவது உரித்தெடுத்துக் கொள்ளு வோம். தம்பி இலக்குவன் சொல்வதுபோல், அரக்கனாகவே இருந்தாலும் அவனைக் கொன்றொழித்ததுமாகிவிடுமல்லவா?" என்று சீதை மிக உருக்கமாக விடுத்த வேண்டு கோளை இராமரால் தட்டிக் கழிக்க முடியா மற் போய்விட்டது.

### "கொண்டுவருவேன் அல்லது கொன்று வருவேன்"

இலக்குவனை நோக்கி இராமர் பின்வரு மாறு கூறினார்: "சீதை இத்தனை காலமும் எதனையும் விரும்பி என்னிடம் இரந்து கேட்டது கிடையாது. மிக வாஞ்சையோடு அம்மானைக் கோருகிறாள். நீ கூறியது போல் அரக்கனாக இருந்தால் கொன்று விடுவதில் பாபமில்லை. ஏனெனில் அரக்கர்களை ஒழித் துக்கட்டுவதென முனிவர்களுக்கு ஏற்கனவே வாக்களித்திருக்கிறோம். வில்லையும் அம்புறாதூணியையும் எடுத்துக் கொடு. அம்மானைக் கொண்டு வருவேன் அல்லது கொன்று வருவேன்."

இவ்வாறு கூறிய இராமர் சீதை யிடம் விடைபெறும்போது கலங்கி யிருந்த அவள் கண்களிலிருந்து முத்துகள் போலுருண்டு வெளி யேறிய கண்ணீர்த்துளிகளை வலது கைச்சுண்டு விரலால் துடைத்து விட்டார். இருப்பினும் அவளுடைய கண்கள் குளமாயின. இராமருக்கும் தன்னையும் மீறிய சோகம் தலை காட்டியது. காரணத்தை அவரால் உணர முடியவில்லை.

இலக்குவனைப் பொறுத்த மட்டில், இவ்வளவு தூரம் ஆன பின்னால் தன்னால் ஆகக்கூடியது எதுவுமில்லை என்பதை உணர்ந்து மௌனியானான். மாயமான் வேடத்தில் விதி விளையாட ஆரம்பித்து விட்டதை மட்டும் தெளிவாக அறிந்து கொண்டான்.

கணவன் செல்லும் திசையை இமை வெட்டாமல் சீதை பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். அவளையும் மீறிய ஏதோ ஒரு விபரீத உணர்வு அவள் உள்ளத்தில் ஊடுருவுவதை அவதானித்தாள்.

★★★

வனத்தில் சிறிது தூரம் சென்றதும் இராமரின் பார்வையில் மான் தென்பட்டது. உண்மையில் சீதை வர்ணித்ததை விடவும் மேலதிகமான எழிலுடன் அம்மான் விளங்கு வதைக் கண்டார். தூரத்திச் சென்றார். பாய்ந்து பாய்ந்து ஓடியது. மிருகங்களையும், பறவைகளையும் எவ்வாறு வசப்படுத்த வேண் டும், வளைத்துப் பிடிப்பதானால் எவ்வாறு பிடிக்க வேண்டும் என்பன போன்ற முறை களையெல்லாம் இராம-இலக்குவர் தங்க ளுடைய குருகுலவாசகாலத்தில் பயின்றிருந் தனர் அத்தகைய முறையினைக் கையாண்டு மானை வசப்படுத்திப் பிடிக்க இராமர் எடுத்த முயற்சிகள் பலிக்காமல் போயிற்று. இதனால் இந்த மான்- இலக்குமணன் குறிப்பிட்டதைப் போன்று மாயமான்தான். அரக்கன் ஒருவன்தான் மாறு வேடத்தில் வந்து தன்னை ஏமாற்றி தன் மனைவி-தம்பி யிடத்திலிருந்து தன்னை வெகு தூரத்துக்கப் பால் இழுத்து வந்திருக்கிறான் என்பதனை உணர்ந்து கொண்டார். தன் ஞானதிருஷ்டி யினால் பார்த்த போது மாயமான் வேடமிட்டு வந்தவன் மாரீசனே என்பதனையும் கண்டு கொண்டார். இதற்கு மேல் யோசிப்பதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்த இராமர் மானுருக்கொண்ட மாரீசனை நோக்கி கணை தொடுத்தார். மானின் உடலில் இராமபாணம் பாயும் முன்னதாகவே மாரீசன் பலத்த தொனியில் "ஏ சீதா....! ஏ லெட்சு மணா.....!" என்று அபயக்குரலெழுப்பினான். அக்குரல் அந்தக் கானகம் எங்கும், எதி ரொலித்து அடங்கும் போது கணையும் மானான-மாரீசன் மார்பில் பாய்ந்தது. உடனே மான் உரு மறைந்து மாரீசன் வெளிப்பட்டான்.

மார்பினை ஊடுருவிய பாணம் முதுகுப் புறத்தால் வெளியேறியிருந்தது. ஆனால் மாரீசனின் முகத்தில் எள்ளளவும் வேதனை தோன்றவில்லை. பேரமைதியும் பெருமகிழ்ச் சியும் கொண்டவனாக இராமபிரானைப் பார்த்து வணங்கி நின்றான். நிலமையைப் புரிந்து கொண்ட இராமரும் தனது வலது கரத்தை உயர்த்தி அபயமளிக்கும் தோரணை யில் நின்றார். தனக்கு இராமபிரானின் கையாலேயே மரணம் கிட்டியமைக்காக- நற் பேறு பெற்ற நிலையில் மாரீசன் சாய்ந்தான்.

அவதார மூர்த்தியான இராமர், உடனடி யாக பல துயரங்களை அனுபவிக்க வேண்டி யிருக்கும் என்பதை அறிந்து கொண்டார். இராவணனின் சூழ்ச்சி நாடகத்தின் முதற் கட்டம் அரங்கேறியிருப்பதையும் அறிந்து கொண்டார். தாமதியாமல் பர்ணசாலையை நோக்கி வேகமாக நடக்கலானார்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 36**

**சரியானவிடை:- 13 பாடல்கள்**

1. A.பிரியதர்சினி. இறை மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா.
2. கே. பத்மநாதன். லெஜர்வத்தை எஸ்டேட், கந்தே கெதற.
3. செல்வி. வாசுகி அமரசிங்கம். முதலியார் வீதி, மட்டக்களப்பு.
4. பி. பார்த்தீபன். இல-10.லூயிஸ் பிளேஸ், நீர்கொழும்பு.
5. எஸ். பிரசன்னா. கலத்துரை தமிழ் வித்தியாலயம், மெத-கலதுர, இரத்தினபுரி.

**போட்டி இல. 38** கேள்வி:- மானை யாருக்குப் பரிசளிக்கச் சீதை விரும்பினாள்?

ஜூலை.13 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி—இல.38, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பயோடேட்டா



பெயர்:— தொண்டா.
தொழில்:— எப்போதும் பதவியில் இருப்பது.
பொழுதுபோக்கு:— சர்ச்சைக்குரிய யோசனைகள். ஆட்சித்தலைவர்களுடன் ஒப்பந்தங்கள். இந்தியப் பயணங்கள்.
பிடித்தமான விளையாட்டு:— போட்டியாளர்களை ஓரம் கட்டுதல்.
நண்பர்கள்:— முன்னாள் எதிரிகள்.
எதிரிகள்:— முன்னாள் நண்பர்கள்.
சாதனை:— தொடர் பதவி.
வேதனை:— முன்னாள் சிஷ்யரின் இந்நாள் பதவி.
விரும்புவது:— பேரன் பெருந்தலைவராவதை.
விரும்பாதது:— கட்சிக்குள்ளும், கட்சிக்கு வெளியேயும் பேரனுக்கு போட்டியாளர்களை.
ஒரே நம்பிக்கை:— எதிரிகளின் பலவீனம்.
புகழ்வது:— பிரபாகரனை.
இகழ்வது:— மலையகத்தில் தீவிரவாதத்தை.
இலட்சியம்:— போட்டியே இல்லாத மலையக அரசியல்.

# காதிலை பூ கந்தசாமி

தொடர்ந்து மழைபெய்யாவிட்டால் மின்சார வெட்டும், மின்சார பாவனையும் எப்படி இருக்கும்? காதிலை பூ கந்தசாமி கற்பனை செய்கிறார்.

## வீட்டுக்கு ஒரு மின்குமிழ்

நாட்டு மக்களுக்கு மின்சார சபையினர் விடுத்துள்ள கெட்ட செய்தி.

வானம் கறுக்கவில்லை. மேகம் திரளவில்லை. ஆகவே மழை வரப்போவதில்லை என்பது நாட்டில் நிலவும் இனப்பிரச்சனைபோல உறுதியாகத் தெரிகிறது.

எனவே-மின்சாரத்தை மிக, மிக, மிக சிக்கனமாகப் பாவனைக்கு பயன் படுத்த வேண்டியுள்ளது.

மின்சார சிக்கனம் கருதி பின்வரும் விதிகளை வெகு கண்டிப்பாகக் கடைப் பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

* வீட்டுக்கு ஒரு மின்குமிழ் மட்டுமே பாவிக்கப்படவேண்டும்.
* இரவு 7.45 மணிக்குப் பின்னரே அந்த ஒரு மின்குமிழும் எரியவிடப் படவேண்டும்.
* அதிகாலை ஐந்துமணிக்கு முன்பாக மின் குமிழ்கள் அணைக்கப்பட்டுவிட வேண்டும்.
* இந்த விதிமுறைகளை கடைப்பிடிக்கத் தவறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மின்சார துண்டிப்பும் மிக்க மகிழ்ச்சியுடன் மேற்கொள்ளப் படும்.

## நாடெங்கும் விளக்கம்

மின்சாரம் மிக மோசமாக பாதிக்கப் பட்டு, மரணப்படுக்கையில் இருக்கும் நோயாளிபோல மூச்சிழுத்துக் கொண் டிருக்கிறது. இந்த நிலை ஏற்படுவதற்கு கடந்த அரசாங்கம்தான் காரணம் என்பதை கடந்த ஒருவருடமாக நாம் கூறிவருகிறோம்." என்று மின்சக்தி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

"மின்சார நெருக்கடியை எவ்வாறு கையாளப்போகிறீர்கள்?" என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளிக்கும்போது, "கடந்தகால அரசாங்கத்தின் பொறுப்புணர்ச்சியற்ற நடவடிக்கை தொடர்பாக நாடெங்கும் விளக்கப்பட்டு வருகிறது" என்று தெரிவித்தார்.



## சமயோசித யோசனைகள்

மின்சார நெருக்கடிகால கட்டத்தில் மேற்கொள்ளக்கூடிய சமயோசித நடவடிக்கைகள் சில.

* தினமும் வீட்டில் சேரும் குப்பைகளை பத்திரமாகச் சேகரித்துவைத்து, இரவானதும் கொழுத்தலாம். அதனால் கிடைக்கும் வெளிச்சம் உங்கள் சுற்றாடலின் இருள் போக்கும்.
* சிகரெட், சுருட்டு, பீடி போன்றவற்றை பற்றவைக்க கொளுத்தும் தீக்குச்சியை, உடனே அணைக்காமல் அது தானாக அணையும்வரை பிடித்துக்கொண்டிருக்கவும்.
* இரவுச் சமையல் செய்வதாக இருந்தால் அடுப்பு வெளிச்சத்திலேயே ஏனைய காரியங்களையும் செய்து முடித்துவிடலாம். பிள்ளைகளையும் அடுப்பு வெளிச்சத்தில் படிக்கச் செய்யலாம். சமைத்தபடியே பாடம் சொல்லிக் கொடுக்கவும் இந்த முறை உதவும்.
* காற்றோட்டம் இல்லாத வீடுகளில் இருப்பவர்கள் உங்கள் வீடுகளை பத்திரமாக பூட்டிவிட்டு, வெளியே வந்து படுத்துக்கொள்ளுங்கள்.
* இருளில் திருடர் தொல்லையில் இருந்து தப்புவதற்காக உங்களுக்கு தெரிந்த பாடல்களை உரத்த குரலில் பாடிக்கொண்டிருக்கலாம். அல்லது அலயவர்களை தூங்கவிடாமல் அவர்களோடு பேசிக்கொண்டிருக்கலாம்.
* பெண்களுக்குபயமாக இருந்தால் தங்கள் குரலை ஆண்குரலாக மாற்றிப் பேசிக்கொள்ளலாம்.
* அடிக்கடி 'டேய், டாய், ஆ.....சூ.....' என்பன போன்ற சத்தங்களை போட்டுக்கொண்டேயிருக்கவேண்டும். திருடர்கள் காதில் விழுந்தால் ஒரே ஓட்டமாகப் போய்விடுவார்கள்.

## துரித நடவடிக்கைகள்

மின்சார நெருக்கடியைத் தீர்க்க அரசாங்கம் துரிதகதியில் எடுத்துள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு.

* ஆறுகப்பல்களில் அரிக்கேன் விளக்குகள் தருவிக்கப்படும்.
* மூன்று கப்பல்களில் வெளிநாட்டிலிருந்து மொழுகுதிரிகள் வந்துகொண்டிருக்கின்றன.
* தீப்பெட்டிகளை குறைந்த வட்டியில் கடனாக வழங்குவதற்கு பல நாடுகள் முன்வந்துள்ளன.
* கடந்தகால அரசாங்கம் மின்சார விடயத்தில் கடைப்பிடித்த கொள்கைகள் தொடர்பாக விசாரிக்க கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது.

## யாரையும் தூண்டவில்லை

மின்சார நெருக்கடிக்கு தீர்வுகாண உதவத்தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார். எப்படி மின்சாரம் வழங்கப்போகிறார்கள் என்பதை அரசாங்கம் முதலில் அறிவிக்க வேண்டும். அதன்பின்னரே எமது ஆதரவை வழங்குவது தொடர்பாக முடிவு செய்வோம்." என்று அவர் தெரிவித்தார்.

"நாட்டில் மழைபெய்யாமல் இருப்பதற்கு நமது கட்சி யாரையும் தூண்டவில்லை. எமது கட்சிமீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தவேண்டாம்." என்றும் அவர் கூறியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com


அருள் ஜுவலர்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வன்ன நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

4 3 6 3 3 1

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11


# விலை உயர்ந்த பேனா



துப்பாக்கியைவிட வலிமையானது பேனா என்று சொல்வார்கள். அது பேனாவால் எழுதப்படும் எழுச்சிக் கருத்துக்களை வைத்து சொல்லப்படுவது.

ஆனால் படத்தில் உள்ள பேனா துப்பாக்கியைவிட விலை உயர்ந்தது. இதன் விலை 75 ஆயிரம் ஸ்ரேர்லிங் பவுண்கள். (கிட்டத்தட்ட 59,25,000 ரூபாய்)

விலைக்கு காரணம் இந்தப் பேனா உருவாக்கப்பட்டிருப்பது சுத்தமானதங்கத்தால். அது மட்டுமல்ல 4810 வைரக் கற்களும் பதிக்கப்பட்டுள்ளன. இதன் பெயர் 'மெயின் ரொஸ்ரக் சொலிரேர் ஃபவுன்ரன் பேனா' உலகிலேயே மிக விலை உயர்ந்த பேனா இதுதான். இதனை தயாரிக்க ஆறுமாதமாகியதாம்.


ஸ்ரீ கல்யாணி ஜுவலஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

3 2 3 6 5 7

5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11


# ஐந்தில் அணிவகுப்பு

துப்பாக்கியின் உயரம் கூட இல்லாத சிறுவர்கள் துப்பாக்கி ஏந்துவது நமது காலத்தில் புதுமையல்ல. ஆனால் நம் காலத்து சிறுவர்களைக்கூட ஓரம்கட்டுமளவுக்கு 1935இல் ஒரு சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

பொலிவியா இராணுவத்தில் 1935இல் இணைந்து கொண்டவர் ஃபெர்னாண்டோ இன் சவுஸ்ரி மொன்றால்வோ. அப்போது அவருக்கு வயது ஆக, ஐந்து மட்டும்தான். அதுமட்டுமா 1964இல் கனோயிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பொலிவியா நாட்டின் தேசியக் கொடியை ஏந்திச் செல்லும் கௌரமும் அவருக்கு வழங்கப்பட்டது. 5 வயதில் அவர் பங்கு கொண்டது பராகுவே நாட்டுக்கு எதிரான யுத்தத்தில்.

பெர்னாண்டோவின் தந்தையும் ஒரு இராணுவவீரர் அதுதான் தன் மகனையும் ஐந்தில் வளைத்திருக்கிறார். மிக இளவயதில் இராணுவவீரராக கின்னஸில் இடம்பிடித்துள்ளார் பெர்னாண்டோ.







# இன்று நீ – நாளை நான்

கப்டன் அசாருதீன்மீது தொடுக்கப்படும் கண்டனங்களால் ஆடிப்போயிருக்கிறார் டெண்டுல்கர். நாளை தன்னை நோக்கியும் இப்படித்தான் பாய்வார்கள் என்று பயப்படுகிறார் எதிர்காலக் கப்டன்.

அதுமட்டுமல்ல விக்கெட்டுக்கள் இடையே ஓடி ரன்கள் சேகரிப்பது போதாது என்று சித்துவை இடைநிறுத்தினார்களாம். அந்த முடிவுக்கு டெண்டுல்கரும் உடன்பட்டிருந்தார். ஆனால் மாட்டிக்கொண்டு முழிப்பவர் அசாருதீன்தான்.

டெண்டுல்கர் கப்டனாகிவிட்டால் விமர்சனங்கள் அவரைக் குறிவைத்துத்தான் பாயும். அந்த டென்ஷனில் அவரது திறமையும் பாதிக்கப்படும். தனது ஆட்டத்தைக் கவனிப்பதா, அணியை வழிநடத்துவதா என்று இரண்டு தோணியில் கால்வைக்கும் நிலை தோன்றும். எனவே காத்திருக்கும் கப்டன் பதவியை நினைத்து இப்போதே கலக்கமடையத் தொடங்கிவிட்டார் டெண்டுல்கர்.



# கலக்குது பாரு ஜாடி

உலகிலேயே அதிக சம்பளம் வாங்கும் குட்டி நடிகன் இவன்தான். பெயர் மெகாலே கல்கின். முரசு வாசகர்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவர்தான்.

பணம் காய்க்கும் மரம்போல இவன் சம்பாதித்துக் கொடுக்கிறான். அப்படியிருந்தும் ஒருநாள் அப்பா அடித்துவிட்டாராம்.

வந்தது பாருங்கள் கோபம். உடனே பொலிசாருக்குப் போன் பண்ணிவிட்டான். பெற்றோர் ஆயினும் பிள்ளைகளை அடித்தால் கம்பி எண்ணவேண்டியதுதான். அங்கே அதுதான் சட்டம்.

பொலிஸ் விரைந்து வந்தது. அதற்குள் அப்பாவும் மகனும் சமாதானமாகிவிட்டார்கள். 'என் கண்ணல்லவோ, இனிமேல் ஒருநாளும் செல்லமாகக்கூடத் தட்டமாட்டேன்' என்று உறுதிகொடுத்து, மகனைக் காலாக நினைத்துப் பிடித்து சமாதானம் செய்தாராம் தந்தை.

கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள நம்மவர்கள்கூட தமது பிள்ளைகளுக்கு ஊரில் இருக்கும் நினைப்பில் அடித்துவிட்டு பொலிசார் முன் அசடு வழிந்த சம்பவங்களும் உண்டு. குடும்பத்தோடு வெளிநாடு செல்பவர்கள் இதனை நினைவில் வைத்திருப்பது நன்று.

# பணம் காய்க்கும் மரம்



வீடுகளில் அழகுக்காகவும், பசுமைக்காகவும் பூங்கன்றுகள் வைக்கப்பட்டிருக்கும் பூச்சாடிகளைப் பார்த்திருப்பீர்கள். பூச்சாடிகளை யாரும் ரசிப்பதில்லை. பூங்கன்றுகளைத்தான் ரசிப்பதுண்டு.

அந்தக் குறையைப் போக்க உலகமே கண்டு வியக்கும் பூச்சாடி ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். மகாபெரிய பூச்சாடி.. உயரம் 6அடி 5 அங்குலம். சுற்றளவு 17அடி 1அங்குலம். எடை 1322 இறாத்தல். 'நோர்தான்ற்ஸ்' என்னுமிடத்தில் பீற்றர் ஸ்ராட் என்பரால் உருவாக்கப்பட்டது. கின்னஸ் சாதனைப் புத்தகத்தினுல் இடம்பெற்றுள்ளது.

பூங்கன்றுக்கு ஒரு காலம் வந்தால், பூச்சாடிக்கும் ஒரு காலம் வரும் என்று சொல்லலாம்.

சிறிய பூச்சாடிகளோடு ஒருவர் நிற்பது பெரிய பூச்சாடியின் பிரமாண்டத்தை ஒப்பிட்டு பார்த்து நீங்கள் வியப்பதற்காகத்தான். பிரமாண்டம் புரிகிறதல்லவா.



படிப்பகம்